Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 20.00

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 09 சனிக்கிழமை (23.05.2015) பக்கங்கள் 20 ஓசை – 235

## பயனற்றுப்போகும் பிரேரணைகள்

### வடமாகாண அமர்வில் கிண்டல்



(யாழ்ப்பாணம்)

கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நடைபெற்ற 28 ஆவது வடக்கு மாகாண சபையின் அமர்வு வரை 200 பிரேரணைகள் வடக்கு மாகாண சபையால் நிறைவேற்றப்பட்டுள்ளன எனவும் இப் பிரேரணைகளால் வடக்கு மாகாண சபை சாதித்தது என்ன எனவும்; நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வின் போது எதிர்க்கட்சித் தலைவர் கேள்வியெழுப்பினார்.

இந்த 200 பிரேரணைகளில் 188 பிரேரணைகள் தொடர்பாக, அதாவது 27 ஆவது சபை அமர்வு வரை எடுக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை சபையின் நூலகத்தில் உள்ளதெனவும், அம் முன்னேற்ற அறிக்கைக் கோவையின் படி இவ் 188 பிரேரணைகளில் 3 பிரேரணைகளிற்கு மட்டும் பதில் கடிதம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அதில் இரண்டு பதில்கள் முன்னைய ஜனாதிபதி 19 ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமை பாதுகாவலர்களுக்கு யாழில் அச்சுறுத்தல்



### தடுத்து நிறுத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு இராணுவம் மற்றும் பொலிஸாரால் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது. இது பற்றி அரச உயர் மட்டங்களின் அவதானத்திற்குக் கொண்டுவந்துள்ளோம்.

இது மட்டுமல்ல, இது போன்ற எந்தவொரு அச்சுறுத்தல்களுக்கும் குடாநாட்டில் இடமளிக்கக் கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள செயலாளர் நாயகம்,

யாழ். மாவட்ட மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு இராணுவம் மற்றும் பொலிஸாரினால் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

இன்று நாட்டில் இனங்களுக்கிடையிலான தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் நோக்கிலான கருத்துக் களங்கள் உருவாக்கம் பெற்று வருகின்றன. ஜனாதிபதியும் தனது உரைகளில் இதனை வலுப்படுத்தி வருகிறார். 19 ஆம் பக்கம் பார்க்க

## பிரதம நீதியரசர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்ற வளாகப்பகுதியில் இடம்பெற்ற கலவரங்களையடுத்து நேற்று யாழ். நீதிமன்றத்திற்கு பிரதம நீதியரசர் ஸ்ரீபவன் விஜயம் மேற்கொண்டு சேதங்களைப் பார்வையிட்டதுடன், இது விடயம் தொடர்பில் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளுடன் 19 ஆம் பக்கம் பார்க்க

# பொலிஸ் அதிகாரிகளுக்கு திடீர் இடமாற்றம்

### புங்குடுதீவு படுகொலையின் எதிரொலி

(யாழ்ப்பாணம்)

மாணவி படுகொலைச் சம்பவத்தின் எதிரொலியாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் மா அதிபர் இலங்கக்கோனின் பணிப்புரைக்கமைய இந்த இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லஷ்மன் வீரசேகர சீதாவாக்கைபுர பிராந்தியத்துக்குப் பொறுப்பான பொறுப்பதிகாரியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, சீதாவாக்கைபுர பொலிஸ் பிராந்தியத்துக்குப் பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ. கே.ஜெயலத் யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியம் 1 இற்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜி.ஜே.ஏ.விஜயசேகர கிளிநொச்சிக்கு இடமாற்றப்பட்டு, உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக கிளிநொச்சியில் கடமையாற்றிய டி.எஸ்.டி.வீரசிங்க யாழ்ப்பாணத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியம் 2 இற்குப் (ஊர்காவற்றுறை) பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பி.ஏ. கே.ஏ.சேனரத்ன முல்லைத்தீவுக்கு மாற்றப்பட்டு, முல்லைத்தீவு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எல்.ரந்தெனிய ஊர்காவற்றுறைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர். பெரேரா மன்னாருக்கு மாற்றப்பட்டுள்ளார். யாழ்ப்பாண பொலிஸ நிலைய தலைமையகப் பொறுப்பதிகாரி வி.பாலசூரிய வவுனியாவுக்கு மாற்றப்பட்டு வெள்ளவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியான சிரேஷ்ட இன்ஸ்பெக்டர் கே.வூட்லர் 19 ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் கஞ்சா மீட்பு

(மன்னார்)

மன்னார், முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை கடற்கரைப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 201 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக சிலாபத்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிலாபத்துறை கடற்கரை பகுதியில் பொதி ஒன்று மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் இரவு சிலாபத்துறை 19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் தேர்தல் வியூகம் சுசில் நேற்று யாழ்ப்பாணத்தில்



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியே இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கவிருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நேற்று யாழுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சுசில் பிரேமஜயந்த செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரக் கட்சியை தலைமையாகக் கொண்ட கூட்டணியாகவே எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும், இதுபற்றி ஜனாதிபதி கூட்டணிக் கட்சிகளுடனும் 19 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கிலும் கடையடைப்பு

(மட்டக்களப்பு)

புங்குடுதீவு மாணவி வித்தியா சிவலோகநாதன், கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நடத்தப்பட்ட கடையடைப்பு போராட்டத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் நேற்று முற்றிலும் செயலிழந்தன.

கொலையாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும், 19 ஆம் பக்கம் பார்க்க



# நந்திக் கடலை ஆழமாக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்து

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல், நந்திக்கடல் ஆற்றைச் சுத்தப்படுத்தி, அதனை ஆழமாக்குவது தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் டக்ளஸ் தேவானந்தா கருத்து தெரிவிக்கும்போது, மேற்படி விடயம் தொடர்பில் அண்மையில் யாழ். வந்திருந்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் தனித்தனியாகக் கலந்துரையாடியிருந்தேன். அதனை மீண்டும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளேன்,




நந்திக்கடல் மக்களின் மிக முக்கிய வாழ்வாதார கேந்திரமாக இருந்துவருகிறது. யுத்தம் காரணமாக பெரிதும் பாதிப்பிற்குள்ளான மக்கள் இப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். எனவே, இதனை சுத்தப்படுத்தி, ஆழமாக்கி, புனரமைப்பதன் மூலம் வட்டுவாகல் மற்றும் நாயாறுப் பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்களின் வாழ்வாதாரம் மிகவும் சிறந்த முறையில் முன்னேற்றம் காணும் என்பதை நான் அறிவேன். இப்பகுதிக்குச் சென்று, மக்களைச் சந்தித்தும், இப்பகுதியை நேரில் பார்த்தும் இதனை நான் உணர்ந்துள்ளேன்.

நீண்ட காலமாக இக் கடல் பகுதியில் சேறு நிரம்பியுள்ளதால், இங்கு தொழில் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. இப்பகுதியில் தொழிலின்மை காரணமாக பல குடும்பங்கள் பாரிய கஷ்டங்களுக்கு மத்தியிலேயே வாழ்ந்துவரும் நிலையில், அதனை ஆழப்படுத்துவதன் ஊடாக இம் மக்களுக்கு பாரியளவிலான தொழில வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் எனவும்

இவ் விடயம் தொடர்பில் ஜனாதிபதி விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பார் என தெரிவித்துள்ளார்.

## வீரகத்தியானுக்கு கொடியேற்றம்



ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த கொடியேற்ற திருவிழாவின் முதலாம் நாள் திருவிழா இன்றாகும்.

**நீராவிப் பதியுறையும் வீரகத்தி விநாயகனே!**
**அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகனே!**
**இன்னல்கள் தீர்த்து இன்பம் தருகின்ற இறைவா!**
**உலகில் எமைப் படைத்து காத்தருளும் காவலனே!**
**ஊக்கமதை அளிக்கும் எம் ஜோதி சொருபனே!**
**எம் மனத்தில் என்றும் வாசம் செய்யும் ஈசனே!**
**சிறப்பாக இன்றுனக்கு கொடியேற்றம்**
**ஏற்றம் அளித்து நலமாக நாம் வாழ அருள் புரிவாய் நாதனே!**

# பெண்கள் புகைப்படக் கண்காட்சி



யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் ஊடகவியல் கற்கை நெறி மாணவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் ஆகியோர் இணைந்து நடாத்திய "பெண்கள் புகைப்படக் கண்காட்சி" நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை இடம்பெற்ற இக்கண்காட்சியில் பெண் புகைப்படவியலாளர்கள் தங்களது ஆளுமையினை வெளிக்கொணரும் வகையில் தங்களால் பிடிக்கப்பட்ட புகைப்படங்கள் பலவற்றை பார்வைக்காக வைத்திருந்தனர்.

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் இயக்குநர் தே. தேவானந் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வட மாகாண திட்டமிடல் பணிப்பாளர் கு. புவனேஸ்வரி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். அத்தோடு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

இக்கண்காட்சி நிகழ்வில் ஊடக வளங்கள் பயிற்சி மைய மாணவர்கள், அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப)

## நண்பர்களின் போர் ஒரு நாள் ஆட்டம்

# ஹட்ரிக் வெற்றியைப்பதிவு செய்தது கனகரத்தினம் மத்திய ம.வி.

(முள்ளியவளை)

நண்பர்களின் போர் என வர்ணிக்கப்படும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி ஹட்ரிக் வெற்றி பெற்றுள்ளது.

யாழ். மாவட்டம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் உறவுப் பாலத்தை வலுப்படுத்தும் வகையில் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிக்கும், முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணிக்குமிடையில் நண்பர் களின் போர் என வர்ணிக்கப்படும் கிரிக்கெட் போட்டி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

மூன்றாவது ஆண்டாக நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரின் இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி கடந்த 8,9ஆம் திகதிகளில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவடைந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி நேற்று முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி விதுன், சுஜிகரன், கரிகோபன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி 43 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விதுன் 24, சுஜிகரன் 23, கரிகோபன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அருணா மூன்று, சுஜிதன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 172 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி பிரசாத்தின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் அருணா, டினேசன் மற்றும் விதுசன் ஆகியோர் முதல் வெற்றியைப் பதிவு செய்ய இறுதி வரை போராடியபோதிலும் அதன் பலனைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. நிறைவில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி 36.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் அருணா 38, டினேசன் 34, விதுசன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரசாத் நான்கு, கலைச்செல்வன், விதுன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இவ் வெற்றியின் மூலம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி இத்தொடரில் ஹட்ரிக் வெற்றியைப் பதிவு செய்து அசத்தியுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்போட்டித் தொடரின் ஒரு நாள் ஆட்டத்தில் வித்தியானந்தாக் கல்லூரி அணி தொடர்ச்சியாக தோல்விகளைத் தழுவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அதிபர் சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் இளங்கோ மற்றும் வலய, கோட்ட மட்ட கல்வி அதிகாரிகள், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், விளையாட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தனர்.

# விவேகானந்த வித்தியில் வித்தியாவிற்கு அஞ்சலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலயத்தில் புங்குடுதீவில் கூட்டு வன்புணர்வின்போது கொலை செய்யப்பட்ட சிவலோகநாதன் வித்தியாவுக்கு நேற்றைய தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்றுக் காலை வித்தியாலய மைதானத்தில் ஒன்று கூடிய மாணவர்கள் சீருடையில் கறுப்புப் பட்டி அணிந்து தங்களது எதிர்ப்பினை அமைதியான முறையில் வெளிப்படுத்தியதோடு ஆத்மா சாந்தி பிரார்த்தனையிலும் ஈடுபட்டதோடு மலர் அஞ்சலியும் செலுத்தினர்.

பெண்களை தெய்வமாக மதி, வித்தியா கொலைக் குற்றவாளிகளுக்கு தண்டனை எப்போது?, மாணவர்களுக்கு கற்றலுக்கான பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக்கொடு, கொலையாளிகளுக்கு மரண தண்டனை வழங்கு, விரைவான நீதி வித்தியாவுக்கு கிடைக்கட்டும் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் மாணவர்கள் ஏந்தியிருந்தனர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த பாடசாலை முதல்வர் திருமதி மாணிக்கவாசகர் இவ்வாறான பாலியல் வன்புணர்வு கொலைக்கு மத்திய கிழக்கு நாடுகளில் மேற்கொள்கின்ற தண்டனைகள் போன்று மிக மோசமான தண்டனைகள் வழங்கவேண்டும் அதுவே எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடக்காதிருக்க வழிசமைக்கும் எனத் தெரிவித்தார்.

இந்த அஞ்சலி நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(29)

# பருத்தி விழாவும் பரிசளிப்பும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பாரதிபுரம் ஒக்ஸ்போட் கல்லூரி வளாகத்தில் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம் வருட நிறைவின் பருத்தி விழாவும்,பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் கே.எம்.கேதீஸ் தலைமையில் நடைபெற உள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொள்ள உள்ளார்.

சிறப்புவிருந்தினர்களாக பளை பிரதேச ஓய்வுநிலை கோட்டக் கல்லூரி அலுவலர் சுப்பிரமணியம் ஆனந்தசிவம்,.லண்டன் சிறி செல்வவிநாயகர் ஆலயத்தின் நிர்வாக உறுப்பினர்களில் ஒருவரான பரராஜசிங்கம் சந்திரகுமார்,ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக அன்னை சாரதாதேவி வித்தியாலய முதல்வர் நா.கணேஸ்வரநாதன்,ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலையின் முதல்வர் ம.உமாசங்கர்,நொச்சிக்குளம் அ.த.க.பாடசாலையின் முதல்வர் க.ஜெயக்குமார், ஓய்வுநிலை அதிபர் அ.கனகரத்தினம், கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய ஜெக ஜெயந்தன் குருக்கள், தென்னிந்திய திருச்சபையின் போதகர் எஸ்.துரைரட்ணம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புங்குடுதீவு மாணவியின் கொலை - பாலியல் வன்முறையின் பின்னணியில்...

இரயாகரன்

குரூரமாக பாலியல் வன்முறைக்குள்ளாக்கி கொல்லப்பட்ட புங்குடுதீவு மாணவியின் மரணமும், இந்தக் குற்றப் பின்னணியில் கைது செய்யப்பட்டவர்கள், சுற்றுவட்டார அயலவர்களும் – உறவினர்களும் என்பதும், சமூகம் குறித்தான பொதுக் கேள்வியை எழுப்புகின்றது.

மனித விரோத குற்றங்களுக்கு தண்டனையை நாம் கோருவதும், அதற்காக போராடுவதுடன் எமது கடமை முடிந்துவிடாது. குற்றங்களுக்கு தண்டனை அவசியமானது தவிர்க்க முடியாது என்பது, குற்றங்கள் தோன்றுவதை தடுப்பதற்குரிய தீர்வாகிவிடாது.

சமூகப் பொறுப்பற்ற தனிமனிதர்களின் இந்தக் குற்றப் பின்னணியைக் குறித்து தெரிந்து கொள்வதன் மூலமே, சமுதாய ரீதியான மாற்றம் குறித்து உண்மையாக நாம் ஈடுபடமுடியும்.

இந்த நிகழ்வு குறித்து பிழைப்புவாத அரசியல்வாதிகள், தங்கள் அரசியல் பிழைப்புக்கு ஏற்ப இந்த குற்றத்தை திசை திரித்துக் காட்டுகின்றனர். குறிப்பாக பேரினவாதத்துக்கு எதிரான குறுந்தேசிய இனவாத அரசியலாக்க முற்படும் விதம், இந்த குற்றப் பின்னணிக்கு நிகரானதும், கேவலமானதுமாகும்.

அவர்கள் இந்தக் குற்றத்தை சிங்கள மொழி பேசுகின்ற, அதிலும் பாதுகாப்பு படையினரே இது போன்ற செயல்களை செய்திருக்க முடியும் என்ற கருத்துப்பட மக்களை வழிநடத்த முற்படுவதுடன், அவர்கள் இது போன்றவற்றை செய்வதன் மூலம் தான் அவர்களால் அரசியல் செய்ய முடியும் என்ற அளவில் இதை விரும்புவதுமே, அவர்களின் அரசியலாக வெளிப்படுகின்றது. இதைத்தான் "தமிழ்" ஊடகங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இந்தப் பின்னணியில் –

1. பாதுகாப்பு படைகள் சூழ்ந்த பிரதேசத்தில் இது நிகழ்ந்ததாகக் கூறி மறைமுகமாக அவர்களை குற்றம் சாட்டுவதன் மூலம் – அதாவது

1.1. இதை பாதுகாப்புப் படைகளே செய்ததாக காட்ட முனைவதும்.

1.2. இது போன்றவற்றை தமிழன் செய்து இருந்தால், அது பாதுகாப்புப் படையுடன் தொடர்புபட்டவர்களாகவே இருக்க முடியும் என்ற விதத்தில் கருத்துக் கூறுவதும்.

2. இந்தக் கொலை மற்றும் பாலியல் வன்முறைக்காக உறவினர்களையும், தமிழ் மொழி பேசியவர்களை பொலிஸார் கைது செய்த போது, "ஊடகங்கள்" இது திசை திருப்புகின்ற கைதாகக் காட்டியது உட்பட, இப்படி உண்மையை மூடிமறைக்கவும், மக்களை தவறான போராட்டங்கள் மூலம் வழி நடத்திக் கொண்டுள்ளனர்.

இந்த பின்னணியில் இந்த குற்றங்கள் தமிழனால் தமிழனுக்கு நிகழ்வதை, அரசியல் ரீதியாக மூடிமறைக்கின்ற பொது உளவியல் போக்கை இனம் காண முடியும்.

ஒருவரின் மரணத்தையும் – அதுசார்ந்த உணர்ச்சியையும் முன்னிறுத்திய போராட்டங்கள், அறிவுக்கும் – பகுத்தறிவுக்கும் வேட்டு வைக்கின்றது. இனம் – ஆணாதிக்க உணர்ச்சி வழிப்பட்ட எல்லைக்குள்



முடக்கப்பட்டுவிட்டு விடுகின்ற பொது அவலம் நிகழ்கின்றது.

என்றுமில்லாதவாறு எமது சமூகத்தில் குற்றங்கள் சமூகத்தில் பெருகுவதும், அந்தக் குற்றங்கள் கொடூரமான வடிவம் பெறுவது ஏன் என்ற கேள்வியை, இவர்களின் தவறான போராட்டங்கள் எழுப்புவதில்லை.

வடக்கு கிழக்கில் பேரினவாதமே இதை திட்டமிட்டு உருவாக்குவதாகவும், அவர்கள் இது போன்றவற்றை ஊக்குவித்து அவர்களின் துணையுடன் நிகழ்வதாகவும், இதில் ஈடுபடுவர்களை அவர்களின் எடுபிடியாகக் கூறுவது எந்த வகையில் சரியானது? இதன் மூலம் இதற்கு தீர்வு காண முடியுமா?

அரசு, அரசு படைகள் என்பது குற்றங்களின் பிறப்பிடம் என்பதும், குற்றங்களே அதன் மூலம் என்பது வெளிப்படையான உண்மைதான். ஆனால் குற்றங்களுக்கு அதை மட்டும் காரணமாக காட்டுவதன் மூலம், உண்மைகளை மூடிமறைக்க முடியாது. சமூகத்தில் இது போன்ற குற்றங்கள் பெருகுவதற்கு சமூகமும் காரணமாக இருப்பதில் இருந்து தப்பிச் செல்ல முடியாது.

அதாவது அரசு – தனிமனிதன் என்ற அடிப்படையில் மட்டும் குற்றம் சாட்டி, அதில் இருந்து சமூகம் தன்னை விடுவிக்க முடியாது. உங்கள் குழந்தைகள் குறித்தும் – வாக்களித்து நீங்கள் தெரிவு செய்யும் அரசு குறித்தும், அதாவது இந்த சமூகம் குறித்தும் பொது அக்கறை மூலம் தீர்வு காண முடியும். இந்த வகையில் –

1. கடந்த யுத்தத்துக்கு முன்பான ஜனநாயகமற்ற சூழலும், அதற்காக கையாண்ட வன்முறை வடிவங்களும் குறித்து, இன்று சிந்தித்தாக வேண்டும்.

யுத்தம் நடந்த காலத்தில் முரண்பட்ட ஒரு விடயத்தையும், விரும்பியதையும் அடைய கையாண்ட வழிமுறையானது, வன்முறையை அடிப்படையாகக் கொண்டது. அந்த வன்முறையானது கொடூரமானது மட்டுமல்ல, அதை சமூகம் நியாயப்படுத்தியது. இந்த சமுதாயத்தின் தனிமனிதன் தான் விரும்பியதை அடைவற்கு, இதுவே பொது வழிமுறையாகி விடுகின்றது. கடந்த இந்தப் போக்கு குறித்து, சமூக ரீதியாக தன்னை கேள்விக்குள்ளாக்கி அதை மறுதலிப்பதன் மூலம் சமூக ரீதியாக அதிகரிக்கும் குற்ற பின்புலத்தை மாற்ற முடியும்.

2. இன்று எமது சமூகத்தை முற்று முழுதாகக் கட்டுப்படுத்திவரும் உலகமயமாக்கம் என்பது, பொருளாதாரத்தை மட்டுமல்ல பண்பாட்டுக் கூறுகளையும் கூட அழித்து புதியதை உருவாக்குகின்றது. பழைய பண்பாட்டுக் கூறுகளை அழித்து, உருவாக்கி வரும் புதிய பண்பாடு என்ன? குற்றத்துக்கும் புதிய பண்பாடுகளுக்கும் தொடர்பு உண்டா என்பது முக்கியமாக அலசிப் பார்க்க வேண்டியுள்ளது..

குறிப்பாக யுத்தத்தின் பின்னான சூழல், உலகமயமாக்கத்தை வடக்கு– கிழக்கில் திறந்து விட்டு இருக்கின்றது. இது இன்று பாரிய சமூக மாற்றத்தைக் கொண்டு வருகின்றது. முன்பு குடும்பம் – சமூகம் என்று கூடி வாழ்ந்த தன்மை அழிந்து, தனி மனிதனை முதன்மையாக்க கொண்ட நுகர்வுப் பண்பாட்டை உருவாக்கிவருகின்றது.

பொருளை மட்டும் நுகர்வதல்ல, மற்றொரு மனித உறவையும் கூட நுகர்வுக்கு உட்பட்டதாக குறுக்கி விடுகின்றது. பெண் என்பவள் பாலியல் நுகர்வுக்குரியவளாக, அவளின் உடல் அங்கங்கள் அதைத்தான் பிரதிபலிப்பதான எல்லைக்குள், ஆண் – பெண் உறவுகள் மாறிவிடுகின்றன.

யுத்தத்துக்கு பின் வீங்கி வெம்பிய வடிவில் உலகமயமாதல் வடகிழக்கில் நுழைந்தது என்பது, தனிமனித குற்றங்கள் வீரியம் பெறுவதற்குரிய களத்தை உருவாக்கி இருக்கின்றது. உலகமயமாதல் பண்பாட்டு – கலாசாரம் குறித்த சமூக விழிப்புணர்ச்சி இன்று அவசியமானது.

3. பெண் குறித்த ஆணாதிக்க பார்வைகள், பெண் மீதான வன்முறையின் மூலமாகும். பெண்களை பாலியல் பொருளாக பார்க்கின்றதும், அதை நுகர்வதை நோக்காகக் கொண்ட சமுதாய பின்புலத்தில் இருந்து குற்றங்கள் அதிகரிக்கின்றதை சமூக ரீதியாக நாம் இனம் காண்பதன் மூலம் புதிய சமுதாயத்தை நோக்கிப் பயணிக்க முடியும்.

குற்றவாளிக்கு தண்டனையை கோரி நாம் போராடும் போது குற்றவாளியைத் தண்டிக்க முடியுமே ஒழிய, குற்றங்களைத் தடுப்பதற்கு இது தீர்வல்ல. குற்றத்துக்கு எதிராக மட்டும் போராடுவதல்ல, குற்றம் நடக்க ஏதுவாக உள்ள சமுதாயத்தை மாற்றுவதற்காகவும் நாம் போராட வேண்டும்.

## மறைந்த ஆலயங்களை வெளிக்கொணர "இந்துக்களின் குரல்" செயற்பட வேண்டும்

### வைத்திய கலாநிதி அருளானந்தம் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக தென்மராட்சியில் பல இந்து ஆலயங்கள் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போயுள்ளன. அழிக்கப்பட்டுள்ளன. அவற்றின் வரலாறுகளைத் தேடிக்கண்டாய்ந்து "இந்துக்களின் குரல்" சஞ்சிகையில் வெளியிடும் பணியினை இந்தச்சஞ்சிகை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டும் எனவும் இது காலத்தின் கட்டாயத்தேவை எனவும், இந்து மக்களின் இருப்பைப் பழமையினை எடுத்துக் கூறும் சான்றாக அமையும்.

இவ்வாறு கடந்த 10 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற்றிருந்த "இந்துக்களின் குரல்" சஞ்சிகை அறிமுக விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியிருந்த வைத்தியரும், சமூகசேவையாளருமான சு.சி.அருளானந்தம் தெரிவித்திருந்தார்.

பல நூற்றுக்கணக்கான இந்துக்கள் கூடியிருந்த இவ்விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்துக்களின் வழிபாட்டு விடயங்களை மருத்துவத்துடன் தொடர்புபடுத்தி, விளக்கங்களை வழங்கி இந்துமக்களை வழிபாட்டுமுறைகளை முறையாகக் கடைப்பிடிப்பதற்கு இச்சஞ்சிகை வழிகாட்ட வேண்டும். இந்தியாவிலிருந்து வெளிவரும் சமய, சமூக சஞ்சிகைகள் பல இத்தகைய பணிகளைச் செய்து வருகின்றன. ஆனால் இலங்கையில் இப்பொழுது தான் "இந்துக்களின் குரல்" சஞ்சிகை முன்னெடுத்து வருகிறது. இது பாராட்டுக்குரிய விடயம். இவ்வகையில் ஒவ்வொரு இந்துவும் இச்சஞ்சிகையினை வாங்கிப் படித்துப்பயன் பெறவேண்டும். இந்து சமயத்தின் அனைத்து வழிபாட்டு முறைகளும் நவீன மருத்துவத்துடனும், அறிவியலுடனும் நெருங்கிய தொடர்புடையவை. பல்வேறு நோய்களிற்குரிய நிவாரணிகளாக அறிவு விருத்தியின் அடித்தளமாக இந்து சமய வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன. உதாரணமாக எமது சமயத்தின் முதல் வணக்கத்திற்குரிய கடவுளான கணபதியினைக் குட்டிக் கும்பிட்டுத் தோப்புக்கரணம் போடும் முறையானது நிரிழிவு நோய்க்குரிய சிறந்த நிவாரணியாகவும், புத்திவிருத்தி, அறிவு விருத்தியின் அற்புத செயற்பாடாகவும் அமைந்துள்ளது. இதனை இன்றைய அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டுபிடித்து தங்கள் பாடசாலை மாணவர்களிற்கு "யோகா" (yoga) வாகப் பயிற்றுவித்து வருகின்றனர் எனத் தெரிவித்திருந்தார். (06)

## அரைக்கும் ஆலை உற்பத்தி நிலையம் கையளிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணசபையின் வருடாந்த பிரமாண அபிவிருத்தி நிதிமூலம் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் மீசாலையில் அரைக்கும் ஆலை உற்பத்திநிலையம் சுமார் 2 மில்லியன் ரூபா நிதியில் இவ் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டு மீசாலை கிழக்கு கிராமஅபிவிருத்திச்சங்கத்திடம் சம்பிரதாயபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நிலைய முன்றிலில் கிராம அபிவிருத்தித்திணைக்கள மாகாணப்பணிப்பாளர் ஜெ.ஜெ.சீ.பெலிசியன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு நாடாவெட்டி இயந்திரத்தில் அரிசி அரைத்து ஆலையை ஆரம்பித்து வைத்தார். மாகாண அமைச்சர் டெனீஸ்வரன், உறுப்பினர்கள், திணைக்கள அதிகாரிகள் பொதுமக்களென ஏராளமானோர் கலந்து சிறப்பித்தனர். (11)

நீ எந்த மாற்றத்தை விரும்புகிறாயோ அந்த மாற்றத்தை உன்னில் இருந்தே தொடங்கு. - அண்ணல் காந்தி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தீயவை தீய பயத்தலால்....

தங்களுக்கு நன்மை பயக்கப் போவதில்லை என்று தெரிந்தும் உணர்ச்சிவசப்பட்ட கருத்துக்களின் பின்னால் மனிதர்கள் செல்வது ஏன்?

மக்களைக் காக்கக் கூடிய தர்மம் எதுவோ அதை எப்போதும் சூது கவ்வியபடி இருப்பதும், முடிவில் தர்மம் வெல்லும் என்ற எதிர்பார்ப்பும் இலேசில் நடைபெறாதிருப்பதும் எதனால்?

கெட்டவற்றைப் போற்றும் மனோபாவமும் நல்லவற்றை உதாசீனம் செய்யும் போக்கும் அறியாமையினால் வருவதா? அல்லது நம் இயல்பில் உள்ள ஒன்றா?

இதுபற்றிய ஆய்வு பிரபல அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் ஒரு குழுவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலங்காலமாகச் சரித்திரத்தில் நல்ல சக்திகள், தீய சக்திகள் இடையே போராட்டம் நிகழ்ந்துள்ளன. நாடுகள் இடையே இனம், சாதி, மொழி, மதம், நிறம், பொருளாதாரம் போன்ற காரணங்களுக்காகப் போராட்டங்கள் வெடித்துள்ளன.

தனி மனிதனிடம் வன்முறை, அகிம்சை ஆகிய இரண்டு குணங்களும் உண்டு. அந்த இரண்டுக்குமிடையிலான போராட்டம் ஒவ்வொருவர் மனதிலும் எப்போதும் நிகழ்ந்தபடியிருக்கிறது.

அந்த அமெரிக்கப் பல்கலைக்கழக ஆய்வில், கெட்ட நிகழ்வுகள் நம்மை அதிகம் பாதிக்கிறது. ஆனால், நல்லவற்றை அவ்வளவு நாம் ஆதரிப்பதில்லை என்று தெரியவந்துள்ளது.

நன்மைகள் நடக்கின்றன. அவை நல்லவற்றைப் போற்றுபவர்களுக்கு மட்டும் ஆறுதலளிக்கிறது. ஆனால் தீயவை, நன்மைகள் தீமைகள் மட்டுமன்றி, நல்லவர்கள் கொடியவர்கள் எல்லோரையும் பாதிக்கிறது.

"தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும்" என்பது வள்ளுவர் காலத்திலேயே அறியப்பட்டதுதான்!

தீயவை, நல்லவை எவ்வாறு நிர்வாகத்தைப் பாதிக்கிறது என்றால், ஒரு தீய குணம் படைத்த, லஞ்சத்தில் உழலும் அதிகாரியால் அந்த நிர்வாகமே குலையும். எவ்வாறு ஒரு பழக் கூடை யில் ஓர் அழுகின பழம் ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் கெடுத்துவிடுமோ அதுபோல, நிர்வாகச் சீர்கேட்டிற்கு அந்த ஒரேயொரு ஊழல் அதிகாரி போதும்.

எந்த ஒரு நபர் தன்னை முதலில் இருத்தி சக ஊழியர்களைப் புறக்கணிக்கிறாரோ, எவர் சுயநலத்துக்காகத் துறையின் நன்மையையும் வளர்ச்சியையும் அவமதிக்கிறாரோ அத்தகையவரை உடனே நீக்க வேண்டும்.

எவ்வளவு நல்ல திறமைசாலிகள் இருந்தாலும் ஒரு சுயநலக்காரர் நிறைவான பணிச் சூழலைக் கெடுத்துவிடுவார் எனவே அவரை விலக்கியாக வேண்டும் என்று அந்த ஆய்வு முடிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக அரசியலில் ஈடுபடுவோர் சுயநலத்தை முதலில் வைத்தும், சாதாரண மக்களின் கஷ்டங்களை தங்களுக்கு மூலதனமாக்கிக் கொண்டும் செயற்படுவார்களானால், அந்த நாடே மீளமுடியாப் படுகுழிக்குள்தான் வீழ்ந்துகிடக்க நேரிடும்.

தமக்குக் கிடைக்கப்போகும் அரசியல் லாபத்துக்காக, மக்கள் அவலங்களைத் தொடர்ந்தும் சந்திக்க வேண்டும் என்றும், மக்களின் தேவைகள் எவையும் பூர்த்தியாகி விடக்கூடாது என்றும், அரசியல் தீர்வின்றி அவர்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்றும் விரும்புகின்ற ஒருசாரார் இருப்பது ஒட்டுமொத்த சமூகத்தையும் எந்த நிலையில் மீள விடாமல் அழுந்த வைத்திருக்கும் என்பதை நாம் பல வருடங்களாகப் பார்த்து வருகிறோம்.

இவர்களை மக்கள் புரிந்துகொண்டு விலக்காமல், இந்த நாட்டில் நல்லதொரு சூழலுக்குள் சுபிட்ச வாழ்விற்குள் எமது மக்கள் காலடி எடுத்துவைக்க முடியாது.

தீயதை அறிந்து விலக்காமல் தீமைகளிலிருந்து தவிர்ந்து கொள்வது சாத்தியமில்லை. - ஆசிரியர்

# யாழில் வன்முறைகளைக் கட்டவிழ்த்து அரசியல் இலாபம் தேடமுயற்சி

## விக்கிரமபாகு கருணாரத்ன குற்றச்சாட்டு

(கொழும்பு)

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொணடு வடக்கு, கிழக்கில் மீண்டும் வன்முறைகளை கட்டவிழ்த்து விடுவதன் மூலம் அதனூடாக அரசியல் இலாபம் காண ஒரு சில சக்திகள் முயற்சிப்பதாகவும் இது தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

நவசமசமாஜக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன மேற கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலையானது மிகவும் கண்டிக்கத்தக்கது. இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும் நீதி வேண்டியும் மக்கள் தொடர்ச்சியாக ஒற்றுமையுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது மிகவும் வரவேற்கத்தக்கது. இதனிடையே இந்தச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு வடக்கு, கிழக்கில் ஒரு சில அடிப்படைவாத சக்திகள் மீண்டும் வன்முறைகளை கட்டவிழ்த்துவிடுவதன் மூலம் பிரிவினைவாதத்தை ஏற்படுத்தி அதனூடாக அரசியல் இலாபம் காண முயற்சிக்கின்றனர். இது தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

வட, கிழக்கு பகுதியில் யுத்தத்தின் பின்னர் இன்று மக்களிடையே ஜனநாயகம் ஒன்று மலர்ந்துள்ளது. இவ்வாறான நிலையில் இது போன்ற சம்பவங்கள் எம்மை கவலையடையச் செய்கின்றன. நல்லாட்சியின் கீழ் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எவ்வாறான சந்தர்ப்பத்திலும் அனுமதிக்க முடியாது. இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் அனைவருக்கும் அதிக பட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றார்.

# 5 ஆயிரம் கோடி ரூபா நிதிமோசடி சிக்கியது

## விசாரணைப் பிரிவு தகவல்

(கொழும்பு)

நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினரால் இது வரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிபடையில் 5 ஆயிரம் கோடி ரூபா நிதி மோசடி செய்யப்பட்டிருப்பது தெரியவந்திருப்பதாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு தெரிவித்தது.

இதுவரை நூறு கோடி மற்றும் அதற்கு மேற்பட்ட ஊழல் மோசடி தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள 60 முறைப்பாடுகளில் 8 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளன.

முறைப்பாடுகளில் அநேகமானவை 200 கோடி ரூபாவுக்கும் அதிகமான ஊழல் மோசடிகளாகும். இவற்றுடன் பெரும்பாலும் அரசியல்வாதிகளே தொடர்புபட்டுள்ளனர்.

அமைச்சு செயலாளர்கள், அரச அதிகாரிகள், நிறுவனத் தலைவர்கள் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையானோர் இந்த விசாரணைகளுடன் சம்பந்தப்பட்டுள்ளனர்.

தனிநபர்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமையவே இதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு முறைப்பாட்டினையும் மிகவும் நுணுக்கமான முறையில் ஆராய்ந்து வருவதாகவும் இதற்காக அதிக நேரம் அர்ப்பணிப்புடன் செலவிடப்படுவதாகவும் நிதி மோசடி விசாரணைப் பிரிவு தெரிவித்தது.

அநேகமான தனிநபர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையானவையென்பது விசாரணைகள் மூலம் உறுதியாகியுள்ளது.

இவ்வாறு குற்றம் உறுதி செய்யப்பட்ட நபர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் பலரிடம் இறுதி வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. இவர்கள் விரைவில் நீதிமன்ற உத்தரவின் பேரில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அரச அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தியதன் விளைவாக ஆயிரம் கோடி ரூபா அரசிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி பல கோடி ரூபாவினை வருமானமாகப் பெற்ற நபர்கள் வருமான வரி திணைக்களத்திற்கு வரி செலுத்த தவறியுள்ள விபரம் தொடர்பில் தனியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# பேச்சில் தீர்வு இல்லையேல் பணி நிறுத்தப் போராட்டம்

## சுகாதார சேவைகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

தமது பிரச்சினைகளுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை சுகாதார அமைச்சருடன் இடம் பெறும் பேச்சு வார்த்தையின் போது உரிய தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவில்லை எனில் செவ்வாய்க்கிழமையில் இருந்து தொடர்ச்சியான பணிநிறுத்தப் போராட்டத்திற்கு செல்ல உள்ளதாக அகில இலங்கை சுகாதார சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நிலுவை வேதனக் கொடுப்பனவு உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த சங்கம் கடந்த திங்கட்கிழமையில் இருந்து நேற்று முன்தினம் வரையில் அடையாள பணி நிறுத்த போராட்டத்தை மேற் கொண்டு வந்தது.

இந்த நிலையில், தங்களின் கோரிக்கை தொடர்பில், நாளை மறுதினம் திங்கட்கிழமை சுகாதார அமைச்சருடன் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக சங்கத்தின் தலைவர் சமந்த கோரலே ஆராச்சி தெரிவித்தார்.

இதன்போது உரிய தீர்வு எட்டப்படவில்லையெனில் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.


# அமைச்சர்களின் இராஜினாமா நாடாளுமன்ற தேர்தல் தந்திரம்

## பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

நாடாளுமன்றத் தேர்தலில் தமக்குரிய இடங்களைத் தக்க வைத்துக் கொள்ளும் தந்திரோபாய நடவடிக்கையே ஸ்ரீலங்கா சு.கட்சியின் சில அமைச்சர்கள் மேற்கொண்ட இராஜினாமா என பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

இன்னும் நாடாளுமன்றத்துக்குரிய ஆயுட்காலம் ஓரிரு வாரங்களாகும். இது இவ்வாறிருக்கையில், இவர்கள் தமது இராஜினாமா மூலம் பல விடயங்களை அடைந்துகொள்ள முனைந்துள்ளனர். தாம் தமது பதவிகளை துச்சமென எறிந்துவிடவும் தயார் என மக்களை நம்பவைத்தல், ஐக்கிய தேசியக் கட்சியை தேர்தலில் விமர்சிக்க ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்ளல் போன்ற விடயங்கள் இதில் முக்கியம் பெறுகின்றது. இராஜினாமா செய்தவர்கள் எவரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கியவர்கள் அல்லர் எனவும் பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# பாவப்பட்ட தமிழ் மக்கள்



## மாதவன் சஞ்சயன் கட்டுரையிலிருந்து

தமிழ்தேசிய கூட்டமைப்பு பதியப் படாது என மாவை அறிவித்து விட்டார். 4 கட்சிகளிடையே புரிந் துணர்வு ஒப்பந்தம் மட்டுமே ஏற் படுத்தப்படும் என்று கூறும் அவர் ஏற்கனவே கழட்டிவிடப்பட்ட தமி ழர் விடுதலைக் கூட்டணி அதில் இடம்பெறாது என்பதை மறை முகமாக 4 கட்சிகள் என வரை யறுத்து விட்டார்.

புலிகளின் அனுசரணையில் ஆரம் பத்தில் த.வி.கூ, ஈ.பி.ஆர்.எல். எப்., டெலோ இணைந்து த.தே.கூ அமைக்கபட்டது. பின் சங்கரியாரின் தனித்துவ போக்கால் மாவை உள்க் குத்து வேலை செய்து மீள் உரு வாக்கம் பெற்ற தமிழ் அரசு கட்சி தான் எங்கும் எதிலும் தலைமை தாங்கவேண்டும் என்ற நிலைப்பாட் டாலேயே த.தே.கூ பதியப்படுவது தவிர்க்கப்படுகிறது.

த.தே.கூ இல் புதிதாக இணைந்து வெல்பவர்களை தமிழ் அரசுக் கட்சி உறுப்பினராக்கும் கைங்கரியத்தை சூட்டோடு சூடாக செய்து விடுவார் கள். அவ்வாறு இணைந்தவர்களின் பின்புலத்தை ஆராய்ந்தால் அவர்கள் முன்பு வேறு அமைப்புகளில் இயங்கியவர்களாக அல்லது வால்களாக செயற்பட்டவர்களாக இருப்பார்கள். ஆனால் த.தே.கூ இல் இணைந்த பின் அவர்களுக்கு தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர் பதவி தந்து நண்பேண்டா என ஆக்கி விடுவார்கள். சிறிதரன், சரவண பவன், சுமந்திரன் முதல் ஆனந்தி, சயந்தன் வரை இது தான் நிலை. தமிழ் அரசுக் கட்சி ஆரம்பிக்கப் பட்டது முதலே தேர்தலுக்கு வேட் பாளர்களாக தெரிவாகுபவர்களை அவதானித்தால் ஒரு உண்மை விளங்கும். அது அந்தக் கட்சிக்காக உழைத்தவர்களை விடவாக்குகளை பெறக்கூடிய வசீகரங்களுக்குத் தான் வேட்பாளர் அங்கீகாரம் வழங்கப்படும். உரிமை பற்றிப் பேசி மக்களிடம் வாக்குகளை பெற வசீகரங்களை நம்பியே அதன் பயணம் தொடர்ந்திருக்கிறது. இது பாம்பு தன் தோலை உரித்து புதிதாக மிளிர்வது போல. தமிழ் அரசுக் கட்சியும் காலத்தேவைக்கு ஏற்ப புதியவர்களை பயன்படுத்தி கவர்ச்சி அரசியல் செய்வதும் அதே பாம்புகளின் செயல்தான்.

இன்று தமிழரசுக் கட்சியின் நாடாளு மன்ற மாகாண சபை உறுப்பினர் களை அவதானித்தால் அநேக மானோர் வந்தேறுகுடிகளே. 1977 வரை சம்பந்தர் தமிழரசுக் கட்சி உறுப்பினர் இல்லை என்பதற்கு சங்கரியார் சாட்சி. மாவையை தவிர்த்து அநேகமானோர் இருந்த இடங்கள் வேறு வேறு. ஆனால் கட்சியை ஆரம்பித்த வர்கள் அதன் வழி தொடர்ந்தவர்கள் இன்றும் கட்சியை காப்பாற்ற நினைப்பவர்கள் கழட்டி விடப்பட்டு புதிய தோலுடனான பாம்புகள் கூடாரம் தான் தற்போதைய தமிழ் அரசுக் கட்சி. எனவேதான் தங்களுடன் வந்து ஒட்டிய ஏனைய கட்சிகளுடன் இணைந்து த.தே.கூ பை பதிய அது தயங்குகிறது.

அதேவேளை ஓட்டினால் தான் தப்பிப் பிழைக்கலாம் என எண்ணும் சுரேஸ் பிரேமச்சந்திரன் எப்படியும் பதிய வேண்டும் என இயன்ற வரை சன்னதமாடி சுவிஸ் வரை விடயத்தை கொண்டு சென்று புலி பினாமிகள் மூலம் மாவையையும் ஜனாவையும் பணிய வைக்கப் பார்த்தார். பிரபாகரன் பரலோகம்போன பின்பு பயம் தெளிந்த அவர்கள் பொட்டர் கூட இப்போது இல்லை என்ற தைரியத்தில் சிலிர்த்து எழுந்து மறுத்து விட்டனர்.
இதில் வேடிக்கை என்னவென்றால் டெலோ கூட்டமைப்பில் இருந்தாலும் தனிப்பட்ட ரீதியில் மன்னார் வவுனியா செட்டிபர்ளையத்தில் அவர்கள் தங்களை தக்கவைக்க முடியும். புளொட் சில இடங்களில் தன்னை நிலை நிறுத்தும். பரிதாப நிலையில் இருப்பது சுரேஷ் மட்டுமே. தனித்துப் போட்டியிட்டால் துணைக்கு தம்பியாரைத் தவிர யாரும் கூட வராத நிலை.

வவுனியாவில் ஆனந்தன் வென்றாலும் கூட இவர் எந்தப் பக்கம் சென்றாலும் சனி வாலயம் தான். ஈ.பி.ஆர்.எல்.எப். எனும் கட்சியின் தலைமையை வைத்து கொண்டு அதன் உண்மையான தோழர் களை தொலைத்தவர் இவர் என்பதால் ஒட்டுண்ணியாக இருந்தால் மட்டுமே எம்.பிஎன்ற பதவி இரத்தத்தை சுவைக்க முடியும். எனவேதான் த.தே.கூ. வை பதிந்தால் தானும் இணைத் தலைமை பெற்று பின் தலைமைக்கு வந்து விட்டால் காலமெல்லாம் கதிரை நிச்சயம் என கணக்குப் போடுகி-றார். அதை அறிந்து தான் மாவை யார் பின்னடிக்கிறார். மாவை கூறும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சுரேஸ் தான் முண்டியடித்து கையொப்பமிடுவார். பிரிந்து போனால் கிழியும் கிருஸ்ணகிரி என்பதால் தான் மட்டும் எம்.பி.யானால் போதும் என ஒத்துப்போவார். ஒட்டுண் ணியாய் வாழ்வதே அவர் அரசியல் வரலாறாகிப் போகும் அளவிற்கு அந்த கட்சியின் உண்மைத் தோழர்களை உதாசீனம் செய்ததால் தான் அவருக்கு இந்த நிலை.

வாக்கு அரசியல் பாம்புகளான தமிழ் அரசுக் கட்சியும் சுரேசும் ஒரு பக்கம் என்றால் புதுக்கோஷத்தோடு வருக-றது ஒரு அணி. மக்களை வேறு திசை நோக்கி செலுத்த அவர்கள் தமிழ்த்தேசி யம் பேசுகிறார்கள். ஐயா விக்னேஸ் வரனுக்கு பகிரங்க அழைப்பு, அனந்தி யுடன் ஆலோசனை, யாழ்ப்பாணத்தில் நிவாரணம், மட்டக்களப்பில் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு என பல வாறான செயற்பாடுகளை ஆரம்பித்து விட்டார்கள்.

இது சற்று ஆபத்தான சூழ்நிலையை உருவாக்கப் போகிறது. அழிவிற்குப் பின் னான ஆக்கத்துக்கு வழிசமைக் காது மேலும் அவலங்களுக்கான பாதை யாகவே இது தென்படுகிறது. யுத்தம் முடிந்து பல ஆண்டுகள் சென்றும் தென் இலங்கையில் அரசியல் செய்ய ஒரு பகுதியினருக்கு இப்போதும் புலிகள் தேவைப்படுகின்றனர்.

அதற்குத் தீனி போடும் செயலைத் தான் இந்த பருந்துகளும் பறந்து பறந்து செய்கின்றன. வெளிநாடுகளில் புலிபினாமிகள் பிரபாகரன் போனபின் இழந்த தம் வருமானங்களை வசதியான வாழ்க்கையை மீள் நிலை நிறுத்த இவர்களைப் பயன்படுத்துகிறார்கள். இவர்களும் ஏற்கனவே பிரபாகரன் கால் பணிந்து பெற்ற நாடாளுமன்றப் பதவி களை மீண்டும் அனுபவிக்க மக்களை அவலத்தில் தள்ளும் செயலை செய்ய முற்படுகின்றனர்.

**வேடிக்கை என்னவென்றால் டெலோ கூட்டமைப்பில் இருந்தாலும் தனிப்பட்ட ரீதியில் மன்னார் வவுனியா செட்டிபாளையத்தில் அவர்கள் தங்களை தக்கவைக்க முடியும். புளொட் சில இடங்களில் தன்னை நிலை நிறுத்தும். பரிதாப நிலையில் இருப்பது சுரேஷ் மட்டுமே. தனித்து போட்டியிட்டால் துணைக்கு தம்பியாரைத் தவிர யாரும் கூட வராத நிலை.**

செல்வம், சித்தார்த்தன் எப்போதும் தோழர்களுடனும் மக்களுடனும் நிற் கின்றனர். சிவசக்தி ஆனந்தனும் தோழர் களை விலத்தி ஓடுவதில்லை. ஆனால் தான் மேல் ஏற மற்ற நண்டுகளின் காலைப் பிடித்து தொங்கும் கொழுத்த நண்டு கட்சித் தோழர்களை மட்டுமல்ல புத்திஜீவிகளையும் கைவிட்டமைக்கு கேதீஸ்வரன் உட்பட ஐங்கரநேசனும் சாட்சி. இதை விட ஆபத்தானது பருந்துகள்.

இந்தப் பருந்துகள் எம் குஞ்சுகளைத் தூக்கிச் சென்று கழுகிடம் கொடுத்து விடும். யுத்தத்தின் பின் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பிய முன்னாள் போராளிகளை இளைஞர்களை மீண் டும் போராட்டப் பாதைக்கு கூட்டிச் செல்ல முற்படும். இந்தக் கூட்டத்தால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் கொடூரமானவையாக அமையும்.

இந்த நாட்டில் தமிழர்கள் பூரண சுதந் திரத்துடன் சுயமரியாதையுடன் வாழும் முழுமையான சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லை. அகதி முகாம் வாழ்க்கை, காணிகள் மீளளிக்கப்படாமை, தேவை யற்ற இராணுவப் பிரசன்னம், பூரண் புனர் வாழ்வு கிடைக்காமை என் 30 வருடத்தில் தொலைத்த பல விடயங்களைப் போராடி பெறவேண்டிய நிலை தான் இன்னமும் இருக்கிறது.
அங்கொன்றும் இங்கொன்றும் என 1000 ஏக்கர் 300 ஏக்கர் என விடப்படு கிறதே தவிர மக்கள் வாழ்ந்த நிலம் மக்களுக்கே என்ற ஒரே முடிவு எடுக்கப்பட, அவை விடுவிக்கப்பட இன்னும் எத்தனை ஆண்டுகள் காத்தி ருக்கவேண்டுமோ என்ற கவலை வன்ம மாக மனதில் உண்டாவது தவிர்க்க முடியாதது. எல்லாவற்றிற்கும் மேலாக சிறைகளில் வாடுபவர்கள் பற்றிய முடிவு எடுக்கப்பட்டு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு அவர்கள் வெளியே வந்தால் மட்டுமே உயிரோடு இருப்பவர் கள் இறந்தவர்கள் யார் என்ற முடி வுக்கு சொந்தங்களால் வரமுடியும். அதுவரை சிறை வாசல்களில் தவம் கிடப்பதும் இரகசிய முகாங்களை தேடுவதும் வருத்தத்தை வன்மமாக்கும். அதைப் பயன்படுத்தும் முகமாகவே இவர்கள் தமிழ்த்தேசிய கோஷத்துடன் வருகிறார்கள்.

இன்று தென் இலங்கையில் ஏற்பட் டுள்ள அரசியல் குழப்ப நிலையில் இனவாதப் பேய் பூதாகரமாக வெடிக்கக் கூடிய சாத்தியம் நிறையவே உண்டு.

எங்கோ இருக்கும் புலிபினாமிகள் அந்த நாடுகளில் தம் சுகபோக வாழ்க் கைக்காகவும் இங்குள்ள அதன் வால்கள் தம் நாடாளுமன்ற பதவி சுகத்துக்காகவும் நடத்தப்போகும் கூத்தில் எம் இனம் இன்னும் எத்தனை முள்ளிவாய்க்கால்களை சந்திக்கப் போகிறதோ என்ற கேள்வி எழுகிறது.

பாதிக்கப்பட்ட பாவப்பட்ட எம் மக்கள் சார்பாக நாம் உடனடியாக செய்ய வேண்டியது வடக்கு கிழக்கில் மட்டு மல்ல நாட்டின் சகல பகுதிகளிலும் வாழும் புத்திஜீவிகள் (வைத்தியர், சட்டத்தரணிகள், எந்திரிகள், விரிவுரை யாளர்கள், அரச நிர்வாக சேவை யாளர்கள் கல்விசார் சமூகத்தினர், சமய சமூக தலைவர்கள் அனைவரும் ஒரு அமைப்பை அரசியல் சாராதவர் களைக்கொண்டு உருவாக்கி எந்த சுயநல அரசியல் உள்நோக்கமும் இல்லாதவர்களை தெரிவு செய்து எதிர்வரும் தேர்தலில் போட்டியிட வைக்கவேண்டும்.

வென்றபின் அமையும் அரசாங்கத்துடன் எந்தவிதமான உறவுகளை கொண்டிருப் போம், எவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் என்ற கொள்கை விளக்கத் துடனான தேர்தல் பரப்புரைகளை செய்து மக்களை தெளிவு படுத்த வேண்டும். அவர்களை ஓரணியில் அணிதிரள செய்யவேண்டும்.

இது காலத்தின் கட்டாயம் என சகல ஊடகங்களும் இதய சுத்தியுடன் இந்த காரியத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். மூத்தவர் அரசி யல் ஞானம் கொண்டவர் என்ற மாயையை விடுத்து புதியவர்களை கறை படியாத வர்களை களம் இறக்கவேண்டும்.

எம் இனத்தில் இலைமறையாக சுய நலமில்லாத மக்களுக்கு நல்லதை செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கான சந்தர்ப்பத்தை கொடுத்து நம் இனம் அழிவில் இருந்து மீளவும் புதிய சவால்களுக்கு முகம் கொடுக்க வும் தயார்ப்படுத்தப்பட வேண்டும்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் நிம்மதியாக வாழ மிக விரைவில் ஆட்சியை மாற்றுவோம்

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த சூளுரை



(கொழும்பு)

மிக விரைவில் இந்த ஆட்சியை மாற்றி மக்கள் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்கின்ற சூழலை உருவாக்குவோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சூளுரைத்துள்ளார்.

நேற்று முன்தினம் அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்

மக்களுக்குப் பணியாற்றிய பாதுகாப்பு செயலாளர் பழிவாங்கப்படுகிறார். முன்னாள் அமைச்சர்கள் சிறைகளில் இருக்கின்றனர். எனவே இந்த ஆட்சி வேண்டாம். நாம் விரைவில் ஆட்சியை மாற்றுவோம்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் நிம்மதியாக வாழ்கின்ற சூழலை நானே உருவாக்கினேன். நூறிற்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகளை விடுதலைப் புலிகள் கொன்றனர். காத்தான்குடி பள்ளி வாசலில் தொழுகையில் ஈடுபட்ட முஸ்லிம் மக்கள் சுடப்பட்டனர். கிழக்கு மாகாணத்தில் இருந்து ஹஜ்ஜிக்கு சென்றவர்களும் சுடப்பட்டனர். பொலிஸாரும் கொல்லப்பட்டனர். இந்த செயல்களை எல்லாம் இல்லாமல் செய்து நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு மக்கள் நிம்மதியாகவும், சுபீட்சமாகவும் வாழ்கின்ற சூழ்நிலையை நானே உருவாக்கினேன். ஜனாதிபதியை மாற்ற வேண்டும் என மக்கள் வாக்களித்தனர் என்கின்றனர். ஆனால் இன்று மாறாக மாகாண சபையில் ஆட்சி மாற்றப்பட்டுள்ளது. பிரதேச சபை கலைக்கப்பட்டுள்ளது.

மக்களுக்குப் பணி செய்த சமுர்த்தி அதிகார சபையின் உயரதிகாரிகள், பாதுகாப்பு செயலாளர்கள் பழிவாங்கப்படுகின்றனர். அமைச்சர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். முக்கிய பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இந்த ஆட்சி வேண்டுமா? வேண்டாம். விரைவில் நாம் இந்த ஆட்சியை மாற்றி மக்கள் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்கின்ற சூழ்நிலை உருவாக்குவோம். மிக விரைவில் ஆட்சியை மாற்றுவோம்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில்இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து பொலிஸார் உடனடியான கவனத்தை செலுத்த வேணடும். இவ்வாறான சம்பவங்களின் அடிப்படையிலேயே பயங்கரவாதம் உருவாக முடியும். யாழ்ப்பாணத்தில் நீதிமன்றத்துக்கும் பொலிஸ் நிலையத்துக்கும் கல்வீச்சு நடாத்தப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் ஆரம்பமும் இவ்வாறே அமைந்திருந்தது.

எனவே பொலிஸார் உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் நன்கு திட்டமிடப்பட்டவையாகும்.எனவே சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்பட்டு தற்போதைய நிலை கட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும் என்று மஹியங்கனையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# அகதிக் கோரிக்கையை மீளபரிசீலனை செய்யும் கனடா

எம்.வி சண்சீ கப்பலில் கனடாவுக்குச் சென்ற புகலிடக் கோரிக்கையாளர் ஒருவரின் அகதிக்கோரிக்கையை மீள் பரிசீலனை செய்ய கனேடிய பிராந்திய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு கனடாவுக்கு சென்ற பாக்கியகுமார் பத்மநாதன் என்பவருக்கே இந்த அனுமதி கிடைத்துள்ளதாக வன்கூவர் கூரியர் செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே இவரின் அகதிக்கோரிக்கையை கனடாவின் குடிவரவு சபை நிராகரித்ததுடன் அவர் இலங்கைக்கு திரும்பினால் உயிராபத்து இல்லை என்றும் தெரிவித்திருந்தது.

விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளை பேணினார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவரின் கோரிக்கையை குடிவரவு சபை நிராகரித்திருந்தது.

எனினும் விடுதலைப்புலிகளுடன் நேரடித் தொடர்புகளை பத்மநாதன் கொண்டிருக்கவில்லை என்று பிராந்திய நீதிமன்ற விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அவரின் அகதிக்கோரிக்கையை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சண்சீ கப்பலில் கனடாவுக்கு சென்று பத்மநாதன் உட்பட்ட 500 பேர் தஞ்சமடைந்தமை குறிப்பிடத்தக்கது

# மகிந்த பிரதமராவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை

## டிலான் பெரேரா தெரிவிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, சந்திரிக்கா பண்டாரநாயக்க ஆகியோரை ஓரே மேடையில் ஏற்றி இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம் மகிந்த பிரதமராகுவதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது. என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய அனைவரும் புண்ணியத்திற்காக அமைச்சுப் பதவி பெற்றுக் கொண்டவர்கள்.

அரசியல் அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவும், புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கவுமே நாம் அரசாங்கத்தில் இணைந்து கொண்டோம்.

மக்களுக்குத்தேவையான வகையில் அரசியல் அமைப்பில் மாற்றம் செய்யப்பட்டது.

நாம் பதவிகளுக்காக ஆசைபட்டு சென்றதாக சிலர் எம்மீது விமர்சனக் கணைகளை தொடுத்தார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு குறுட்டு அதிஷ்டத்தில் பிரதமர் பதவி கிடைத்துள்ளது.

மக்கள் ஆணையினால் பதவி கிடைக்கவில்லை, பிரதமர் வார்த்தைகளினால் நீதிமன்றின் மீது கல் எறியும் போது வடக்கு மக்கள் நிஜக் கற்களைக் கொண்டு நீதிமன்றை தாக்குகின்றனர்.

மகிந்த பிரதமராகுவதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது என டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

# அதிகாரத்தை கைப்பற்ற இனவாதத்தை பயன்படுத்தக்கூடாது

## கோருகிறது ஜே.வி.பி.

இலங்கை அரசியல்வாதிகள் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் இனவாதத்தை அதிகாரத்திற்காக பயன்படுத்திக்கொள்ளக் கூடாது. சிங்கள இனவாதத்தைக் கொண்டு தமிழ் இனவாதத்தை தோற்கடிக்க முடியாது என ஜே.வி.பி



கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இனவாத அடிப்படையில் செயற்பட்டு வருகின்றார்.

மகிந்த ராஜபக்ஷ தெற்கின் இனவாதத்தை பிரதிநிதித்துவம் செய்து வருவதாகவும், இவரினால் மற்றுமொரு இனவாதத்தை தோற்கடிக்க முடியாது.

எந்தவொரு இனவாத நடவடிக்கைகளையும் ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

2009ஆம் ஆண்டில் தமிழ் இனவாதத்தின் ஆயுத முனை மட்டுமே தோற்கடிக்கப்பட்டது எனவும், தமிழ் இனவாதம் கொழும்பிலும், வடக்கிலும், கிழக்கிலும் மற்றும் மலையகத்திலும் காணப்படுகின்றது.

பிரிவினைவாதத்தை மகிந்தவினால் தோற்கடிக்க முடியவில்லை எனவும், பிரிவினைவாதத்தின் ஆயுத முனை மட்டுமே தோற்கடிக்கப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷவின் சிங்களப் பேரினவாதம், சிறுபான்மை மக்களின் இனவாதத்தை மேலும் வலுக்கச் செய்யுமே தவிர தோற்கடிக்காது என லால்காந்த தெரிவித்துள்ளார்.

# தொற்றா நோய்கள் காரணமாகவே இலங்கையில் 70 வீதமானோர் மரணம்

## உலக சுகாதார மாநாட்டில் அமைச்சர் ராஜித தகவல்

இலங்கையிலும் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளிலும் தொற்றா நோய்களால் மரணமடைவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று சுகாதாரம் மற்றும் உள்நாட்டு மருத்துவத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மரணமடைவோரில் 70 சதவீதமானோர் தொற்றா நோய்கள் காரணமாகவே மரணமடைகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார். உலக சுகாதார ஸ்தாபனத்தின் 68 ஆவது வருடாந்த மாநாடு ஜெனீவா நகரில் 18 ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இம்மாநாடு எதிர்வரும் 26 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கலந்து கொண்ட சுகாதாரம் மற்றும் உள்நாட்டு மருத்துவ துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன இங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில், நேப்பாளத்தில் இயற்கை அனர்த்தம் ஏற்பட்ட போது எமது மனிதாபிமான நிவாரணக்குழுவை 24 மணி நேர காலத்திற்குள் அனுப்பி வைத்தோம். அதே நேரம் இந்த அனர்த்த பாதிப்புக்களிலிருந்து மீண்டெழுவதற்கு தேவையான உதவி ஒத்துழைப்புக்களை நாம் நேபாளத்திற்கு தொடர்ந்தும் அளித்து வருகிறோம்.

எமது நாட்டில் இவ்வாண்டின் ஆரம்பம் வரை சுகாதார அமைச்சராக இருந்த தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலின் கீழ் எமது சுகாதாரத்துறை புதிய கட்டத்தினுள் பிரவேசித்துள்ளது. இவற்றின் ஊடாக நாம் முன்னேற்றப்பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ளோம்.

எமது பிராந்தியத்திலுள்ள பல நாடுகளைப் போன்று எமது நாட்டிலும் தொற்றா நோய்களே பெரும் பிரச்சினையாகியுள்ளன. தொற்றா நோய்களின் காரணமாகவே இவ் நாட்டில் 70 சதவீதமான இறப்புக்கள் நேருகின்றன. அதே நேரம் உடல் உபாதைகளும் மனநலப் பாதிப்புக்களும் அதிகரித்து வருகின்றன. இந்நிலைமைகள் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதனால் எமது அரசாங்கம் இவ்விடயத்தில் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

1930 ஆம் ஆண்டு முதல் எமது நாட்டில் இலவச சுகாதார சேவை அமுலில் இருந்து வருகின்றது. அடிப்படை சுகாதார வசதிகள் முதல் அனைத்து சுகாதார சேவைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. தாய் சேய் ஆரோக்கியம், முதியோர் பராமரிப்பு, போஷாக்கு மற்றும் தொற்றுநோய் தவிர்ப்புக்கான பணிகளில் எமது குடும்ப சுகாதார மற்றும் பொது சுகாதார உத்தியோகத்தர்கள் கிராம மட்டத்தில் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்நாட்டின் சுகாதார சேவை மேம்பாட்டுக்குப் பெரிதும் உதவியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இராணுவத்தினரிடம் 5,000ஏக்கர் காணிகள்

## த.இந்து தகவல்

இராணுவத்தினர் தொடர்ந்தும் 5000 ஏக்கர் காணிகளை வைத்திருப்பதாக இந்திய ஊடகமான த.இந்து தகவல் வெளியிட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு முதல் இதுவரையில் இராணுவத்தினர் இவ்வாறு 5000 ஏக்கர் காணிகளை வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவற்றில் பெரும்பகுதியானவை உயர் பாதுகாப்பு வலயங்களாகும் என குறிப்பிடப்படுகிறது. படையினர் எவ்வளவு காணிகளை வைத்திருக்கின்றார்கள் என்பது பற்றிய சரியான தகவல்களை அதிகாரிகள் வெளியிட விரும்பவில்லை.

காணிகளை வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் படைத்தரப்பினரை இந்த வாரத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

# மணல் விநியோகத்தை துரிதப்படுத்த வேண்டும்

## வடமாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மணல் விநியோகம் தடைப்பட்டுள்ளமையால் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டத்தின் இயற்கை வளம் அளவுக்கதிகமாக கொள்ளையிடப்பட்டுகின்றது. இதனைத் தடுக்க குடாநாட்டின் மணல் விநியோகத்தை துரிதப்படுத்த வேண்டும் என வடமாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்தார்.

பொருளாதார வளம் குறைந்த நாடுகளில் மணலை வெளி நாடுகளில் இருந்து கொண்டு வர முடியாது. அதை எங்களுடைய நாட்டில் இருந்து தான் பெறமுடியும். குடாநாட்டில் 6 மாத காலமாக மணல் விநியோகம் தடைப்பட்டுள்ளமையால் கிளிநொச்சியில் இரணைமடுக்குளத்திற்கு கீழ்ப்பகுதியான பன்னங்கண்டி ஆற்றில் இரவு பகலாக மணல் அகழ்வு இடம் பெற்றுக் கொண்டே இருக்கின்றது. அத்துடன் தனியார் காணிகளிலும் இம் மணல் அகழ்வு இடம்பெறுகிறது.

இதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலை இருக்கின்றது. இவ்வாறான மணல் கொள்ளையில் ஈடுபடுவோர் இலஞ்சம் கொடுத்து தமது கைங்கரியத்தை மேற்கொண்டே இருக்கின்றனர். இதனை தடுக்க மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டங்களில் கனியவள பணியகத்தினர் தாங்கள் சரியான ஆய்வுகளைச் செய்து தான் மணல் அகழ்வுக்கான அனுமதியை வழங்குகின்றனர்.

அவர்களது ஆய்வு ஏற்றுக் கொள்ளப்பட்டது. தனியே ஒரு கருத்தை வைத்துக்கொண்டு மணல் அகழலாம், அகழக்கூடாது என்ற முடிவுக்கு வராமல் உயர் மட்ட அதிகாரிகள் மாகாண சபையின் அமைச்சர்கள் விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து மணல் அகழ்வு செய்யலாமா? செய்யக் கூடாதா என்ற ஒரு முடிவுடன் மணல் விநியோகத்தை விரைவாகச் செய்ய வேண்டும். ஏனைய மாவட்டங்களில் உள்ள வளங்கள் கொள்ளையிடப்படுவது தடுக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வித்தியாவின் படுகொலையை கண்டித்து இரணைமடுவில் கண்டனப் பேரணி



(கிளிநொச்சி)

வடக்கு மாகாணத்தில் முழுமையாக வித்தியாவின் படுகொலையை கண்டித்து கண்டனப்பேரணிகள் கடையடைப்புக்கள் ஊர்வலங்கள் நடத்தப்பட்டு வரும் நிலையில் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி இரணைமடு சந்தியில் இருந்து அப்பகுதி வர்த்தகர்கள் ஆட்டோ சங்கத்தினர், கிராமமக்கள் கண்டனப்பேரணியை நடத்தியுள்ளனர். இந்தக் கண்டனப்பேரணி இரணைமடுச்சந்தியில் ஆரம்பித்து கனகாம்பிகைகுளம் சிவன்கோவில் பகுதியில் நிறைவடைந்ததுடன் அங்கு மக்கள் கருத்துக்களையும் வெளியிட்டுள்ளனர்.

குற்றவாளிகளை உடனடியாக நீதியின் முன்நிறுத்தி வழக்கை தாமதப்படுத்தாது உடன் தண்டனை வழங்கப்படவேண்டும். அத்துடன் குற்றவாளிகளுக்கு ஆதரவாக சடத்தரணிகள் ஆஜராகக்கூடாது போன்ற வேண்டுகோள்களையும் விடுத்துள்ளனர். (160)

# மயானக் காணியில் கலாசார மண்டபம் அமைக்கும் முயற்சி பயனற்றுப் போனது

(திருநெல்வேலி)

செம்மணி இந்து மயானக் காணியில் கலாசார மண்டபம் ஒன்றை அமைப்பதற்கான நல்லூர் பிரதேச செயலகத்தின் முயற்சி பலனளிக்காமல் போயுள்ளது.

இக் காணிக்கான உறுதி, மயானத்தைப் பரிபாலனம் செய்து வரும் அபிவிருத்தி சபையிடமோ அல்லது மயானம் அமைந்திருக்கும் பிரிவான கோப்பாய் பிரதேச சபையிடமோ இல்லை எனத் தெரிவிக்கப்பட்டதால் இம் முயற்சி கைகூடாமல் போனது.

செம்மணி மயானத்தின் தெற்குப் புறமாக உள்ள காணி சுமார் இரண்டு ஏக்கர் விஸ்தீரணம் கொண்டதாகும். இக் காணியின் கிழக்குப் பக்கமாக உள்ள ஐந்து பரப்பைக் கொண்ட இடத்திலேயே கலாசார மண்டபம் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

காணி இல்லாமையின் காரணமாக பிரதேச செயலகத்தினால் இக் கலாசார மண்டபத்தைக் கட்டுவதற்கு இயலாமல் உள்ளது எவராவது காணியொன்றை வழங்கினால் அக்காணியில் அழகான கலாசார மண்டபம் ஒன்றை நல்லூர் பிரதேச செயலகம் அமைத்துக் கொள்ள முடியும் எனத் தெரிகிறது. (137)

# இரு நூல்களின் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மிருதங்க இசை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி.மகேந்திரனின் "தொன்மைச் சான்றுகள் புலப்படுத்தும் ஆடலமைதி", "பரதத்தில் மிருதங்க இசை மரபு" ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக இசைத துறைத்தலைவர் கலாநிதி சிறி. தர்ஷனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதர் சிறீமான் அ.நடராஜன் மற்றும் அவரது பாரியார் சாந்தி நடராஜன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் முதுநிலைப் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம், கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் எஸ்.கணேஸ்ராம், மெய்யியல்துறை முதுநிலைப் பேராசிரியர் நா.ஞானக்குமரன், முன்னாள் வரலாற்றுத் துறைத்தலைவர் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம், முன்னாள் உயா பட்டப்படிப்புக்கான பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன், யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஓய்வு நிலை அழகியல் கல்விப் பணிப்பாளர் சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் வைத்தியகலாநிதி பூலக்ஸ்மன், வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் ஆ.சோதிநாதன், நடனத்துறை தலைவர் திருமதி. அருட்செல்வி கிருபைராஜா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

நிகழ்வில் நூல் வெளியீட்டுரையில் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சங்கீத கலாநிதி டாக்டர் நா.வி.மு.நவரத்தினம் வழங்க மதிப்பீட்டுரைகளை தஞ்சைத்தமிழ் பல்கலைக்கழக இசைத்துறை பேராசிரியர் முனைவர் இரா.மாதவியும், நாட்டிய கலாகேந்திரா நடனப்பள்ளி இயக்குநர் கலாநிதி திருமதி. கிருஷாந்தி இரவீந்திராவும் ஆற்றவுள்ளார்கள். நிகழ்வின் நிறைவு நிகழ்வாக "ஆருந்திராலயா நடனப்பள்ளி" வழங்கும் ஆடல் இசை அமுதமும் "நாட்டிய கலாகேந்திரா" வழங்கும் ஓம்கார தெய்வீக ஆடல் ஆராதனையும், யாழ்.பல்கலைக்கழக நடனத்துறையினரின் தில்லானாவும் இடம்பெறும்.

நூலாசிரியர் சின்னத்துரை மகேந்திரன் இசைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்காக கலாபூஷண விருது மற்றும் வட மாகாண முதலமைச்சர் விருது உட்பட ஏராளமான பரிசுகளையும் விருதுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (52,54)

# கண்டுபிடிப்பாளர்களை அறியும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழுவுடன் கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு ஆகியன இணைந்து புதிய கண்டுபிடிப்பாளர்களை கண்டறியும் நடவடிக்கையின் ஓர் செயற்பாடாக தற்போது நாடளாவிய ரீதியில் "சஹசக் நிமெவும்" 2015 தேசிய பதிய கண்டுபிடிப்புகள் கண்காட்சி மற்றும் போட்டிக்கான அடிப்படைத் தெரிவுகள் அந்தந்த மாகாணங்களில் கடந்த 07 ஆம் திகதி முதல் நடாத்தப்பட்டு வருகின்றது.

பாடசாலை மாணவர்களுக்கான புதிய கண்டுபிடிப்பாளர்களைக் கண்டறியும் நடவடிக்கையானது மாணவர் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலேயே அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக தகவல்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள் தவிர்ந்த ஏனையு விண்ணப்பதாரர்களுக்கான விண்ணப்பப்படிவம் இணையத்ததளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய வடக்கு மாகாணத்திற்கான கண்காட்சிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியிலும், கிழக்கு மாகாணத்திற்கான கண்காட்சி எதிர்வரும் 28 ஆம் திகதி மட்டக்களப்பு மஹஜன வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன. (03)

## முரசின் இன்றைய பலன்

(23.05.2015 சனிக்கிழமை)

மன்மத வருஷம் வைகாசி மாதம் 09 ஆம் திகதி.
சித்த யோகம். பஞ்சமி திதி.
பூச நட்சத்திரம் பி.இ 02.20 வரை. பின் ஆயிலியம்.
இராகுகாலம் 08.52-10.22 வரை சுபநேரம் 02.52-04.22 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்:** பணவரவுகள் தேவைக்கேற்றபடி அமைந்து காணப்படும்.

**ரிஷபம்:** நோயை அலட்சியம் செய்தமை ஆபத்தை வருவித்தல்.

**மிதுனம்:** திருமண சுபமுயற்சிகள் தடை தாமத்தின் பின்னர் கைக்கெட்டும்.

**கடகம்:** தனித்துச் சென்றதினால் அபாய நிலைக்கு முகங்கொடுத்தல்.

**சிம்மம்:** மணவிலக்கு கிடைத்த நீதி மன்ற தீர்ப்பு கைக்கெட்டல்.

**கன்னி:** நண்பர் உதவியினால் வெளியூர் வேலைவாய்ப்பு ஏற்படல்.

**துலாம்:** விசாரணையின் முடிவில் விவாகத்தைக் கைவிட்டு விடல்.

**விருச்சிகம்:** மாற்றுப்பயிர்ச் செய்கையில் ஈடுபட மனம் நாடுதல்.

**தனுசு:** நிலுவை பெற காவற்துறை சென்று முறையிட முயற்சி செய்தல்.

**மகரம்:** பிதாவின் தேகநலம் மேம்படுவதினால் நிம்மதி பிறத்தல்.

**கும்பம்:** தம்பதியரல் மத்தியில் நிலவிக் காணப்பட்ட பிணக்கு தீர்ந்துவிடல்.

**மீனம்:** சக ஊழியருடன் முரண்படாது அனுசரித்துச் செல்லவும்.

# உலகக் கிண்ணப் போட்டிவரை இந்திய அணிக்கு ஓய்வில்லை

இந்திய கிரிக்கெட் அணி ரி20 உலகக்கிண்ணம் வரை தொடர்ச்சியாக போட்டிகளில் விளையாடவுள்ளது.

இதற்கான போட்டி அட்டவணைகளை இந்திய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இதன்படி வருகின்ற யூன் மாதம் இந்திய அணி வங்கதேசம் சென்று ஒரு டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இதைத் தொடர்ந்து யூலை மாதம் சிம்பாப்வே செல்லும் இந்திய அணி 3 ஒருநாள், 2 'ரி-20' போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

அடுத்து ஆகஸ்ட் மாதம் இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

இதன் பின் செப்ரெம்பரில் இந்திய அணி சொந்த மண்ணில் தென் ஆபிரிக்காவுக்கு எதிராக 4 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் 3 'ரி-20' போட்டிகள் கொண்ட தொடரில் மோதுகிறது.

இதைத் தொடர்ந்து பல ஆண்டுகளாக இரசிகர்களால் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான தொடர் நடக்கும் எனத் தெரிகிறது.

அடுத்த வருடம் ஜனவரியில் அவுஸ்ரேலியா செல்லும் இந்திய அணி அவுஸ்ரேலிய மண்ணில் 5 ஒருநாள், 3 'ரி-20' போட்டிகளில் விளையாடுகிறது.

இதைத் தொடர்ந்து பெப்ரவரி மாதம் இந்தியா செல்லும் இலங்கை அணி, 3 போட்டிகள் கொண்ட 'ரி-20' தொடரில் பங்கேற்கிறது. மேலும், ஆசிய அணிகள் பங்கேற்கும் 'ரி-20' தொடரிலும் இந்தியா விளையாடுகிறது.

இந்தத் தொடருக்குப் பின்னர் அடுத்த ஆண்டு மார்ச் 11 முதல் ஏப்ரல் 2 வரை நடக்கவுள்ள ரி-20 உலகக்கிண்ணப் போட்டியில் இந்தியா பங்கேற்கிறது. பிறகு 9 ஆவது ஐ.பி.எல்.தொடர் நடக்கும்.

# ஷேவாக் பாராட்டு






ஐ.பி.எல் தொடரின் முதல் தகுதிச் சுற்றில் சிறப்பாகச் செயற்பட்ட நெஹ்ரா, ஹர் பஜன் சிங் ஆகியோருக்கு விரேந்திர ஷேவாக் டுவிட்டரில் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

தனது கடைசி ஓவரில் 2 ஓட்டங்களையே கொடுத்த நெஹ்ராவை, "என்ன ஒரு பந்துவீச்சு, ஓல்டு இஸ் கோல்டு.." என்று பாராட்டியுள்ளார்.

அதே போல் ஹர்பஜன் சிங் ஒரே ஓவரில் ரெய்னா, டோனி ஆகியோரை வீழ்த்தியது தொடர்பாக, நம் சர்தார்ஜீ என்ன மாதிரி வீசிவிட்டார்! 3 ஆவது விக்கெட்டை வீழ்த்தத் தவறினார்" என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

# ஆக்ரோசமான அணித் தலைவர் ஊடகங்களின் கூற்று தவறு




விராட் ஹோலியை ஆக்ரோஷமான அணித்தலைவர் என்று ஊடகங்கள் கூறுவது சரியல்ல என்று முன்னாள் அணித்தலைவர் பிஷன் சிங் பேடி கூறியுள்ளார்.

இந்திய அணியின் "கூல் கப்டன்" என்று அழைக்கப்படும் டோனி, களத்தில் நிதானமாக செயற்பட்டு அணிக்கு வெற்றியைத் தேடித் தருவார்.

இவர் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு ஹோலிக்கு அணித்தலைவர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் இவர் களத்தில் ஆக்ரோஷமாகவே செயற்படுவார். அதிக்மாக உணர்ச்சிவசப்பட்டு அவ்வப்போது சர்ச்சைகளிலும் சிக்கிக் கொள்வார்.

இது தொடர்பாக முன்னாள் சுழற்பந்து வீச்சாளரும் அணித்தலைவருமான பிஷன் சிங் பேடி கூறுகையில், விராட் ஹோலி உணர்ச்சிவசப்படுவதைக் கட்டுப்படுத்தும் பயிற்சியாளர் தேவை.

ஹோலி நீண்ட காலம் ஆட்டத்தில் நீடிக்க வேண்டுமானால் தனது கோபத்தைக் கட்டுப்படுத்துவது அவசியம்.

ஊடகங்கள் - ஹோலியை ஆக்ரோஷமான தலைவர் என்று கொம்பு சீவி விடுகின்றன. இது அவரை அழித்து விடும்.

அவரது ஒவ்வொரு அசைவும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. எனவே அவர் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது என்று கூறியுள்ளார்.

# ஆட்டநாயகன் விருதை சகவீரருக்கு வழங்கிய டிவில்லியர்ஸ்




பெங்களூர் அணியின் அதிரடி ஆட்டக்காரர் டிவில்லியர்ஸ் தனக்கு கொடுக்கப்பட்ட ஆட்டநாயகன் விருதை சகவீரர் மன்தீப்சிங்குக்கு அளித்துள்ளார்.

ஐ.பி.எல்.தொடரில் ராஜஸ்தானுக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் பெங்களூர் அணி 2 விக்கெட் இழந்து தவித்த போது, ஜோடி சேர்ந்த டிவில்லியர்ஸ் - மன்தீப்சிங் அதிரடியாக விளையாடினர். இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடி 113 ஓட்டங்கள் சேர்த்தனர். இதனால் பெங்களூர் அணி 180 ஓட்டங்கள் குவித்து ராஜஸ்தான் அணிக்கு நெருக்கடி கொடுத்தது. டிவில்லியர்ஸ் 66 ஓட்டங்களும் (38 பந்து, 4 பவுண்டரி, 4 சிக்சர்), மன்தீப்சிங் 54 ஓட்டங்களும் (34 பந்து, 7 பவுண்டரி, 2 சிக்சர்) எடுத்தனர். இதில் டிவில்லியர்ஸ் ஆட்டநாயகன் விருது வென்றார். ஆனால் அந்த விருதை அவர் மன்தீப்சிங்குக்கு வழங்கினார். இதுகுறித்து அவர் கூறுகையில், நான் கடந்த 2 இனிங்சில் சரியாக விளையாடவில்லை. எப்படி 180 ஓட்டங்கள் வந்தது என்று தெரியவில்லை இந்தப் போட்டியில் மன்தீப் சிங்கின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. ஆட்டநாயகன் விருது அவருக்கு உரியது என்றார்.

# ஐ.பி.எல்.வெற்றி யாருக்கு? இந்தியா முழுவதும் சூதாட்டம்

8ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இந்தப்போட்டி தற்போது விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இன்னும் 2 ஆட்டங்களே எஞ்சியுள்ளன.

ஐ.பி.எல்.போட்டியையொட்டி நாடு முழுவதும் மிகப்பெரிய சூதாட்டம் நடைபெற்று வருகிறது. எந்த அணி வெற்றி பெறுகிறது என்பது பற்றி பந்தயம் செய்யப்படுகிறது. இதில் கோடிக்கணக்கில் பணம் பேரம் பேசப்பட்டுகிறது.

சூதாட்டத்தையொட்டி கறுப்பு பணம் புழக்கத்தில் இருப்பதால் அமுலாக்கப் பிரிவினர் கடந்த சில வாரங்களுக்கு முன்பு அதிரடி சோதனை செய்தனர். இதில் கோடிக்கணக்கான பணம் கைப்பற்றப்பட்டது.

சூதாட்ட தரகர்கள் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

பணப்பரிவர்த்தனை மோசடி சட்டத்தின் கீழ் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. மேலும் 2 பேரும் கைதானார்கள்.

இந்த நிலையில் டில்லி, மும்பை, ஜெய்ப்பூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அமுலாக்கப் பிரிவினர் சோதனை செய்தனர்.

# சங்கக்காரவிற்கு ஆதரவாக அணிதிரளும் இரசிகர்கள்



இலங்கை அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் சங்கக்காரவிற்கு ஆதரவாக அவரது இரசிகர்கள் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இங்கிலாந்தின் உள்ளூர் அணியான சரே அணியில் விளையாட சங்கக்கார லண்டன் சென்றிருந்தார்.

அப்போது விமான நிலையத்தில் தான் ஒரு குடிவரவுத்துறை அதிகாரியால் தரக்குறைவாக நடத்தப்பட்டதாக சங்கக்கார கவலை தெரிவித்திருந்தார்.

இதனை சில தினங்களுக்கு முன்பு தனது டுவிட்டர் வலை தளத்தில் அவரே தெரிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து அவரது இரசிகர்கள் அவருக்கு ஆதரவாக, கொழும்பில் உள்ள இங்கிலாந்து தூதரகத்தின் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

# முதலிடத்தில் சாய்னா

ஹைதராபாத் உலக பட்மின்டன் தரவரிசையில் இந்திய வீராங்கனை சாய்னா நேவல் மீண்டும் முதல் இடத்துக்கு முன்னேறினார்.

பட்மின்டன் அரங்கில் சிறந்து விளங்கும் நட்சத்திரங்களுக்கான 'ரேங்கிங்' (தரவரிசை) பட்டியலை, சர்வதேச பட்மின்டன் கூட்டமைப்பு (பி.டபிள்யு.எப்.,) நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இதன் பெண்கள் ஒற்றையரில் இந்தியாவின் சாய்னா 2 ஆவது இடத்தில் இருந்து மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறினார். மற்றொரு இந்திய வீராங்கனை சிந்து 11 ஆவது இடத்தில் இருந்து 12 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

ஆண்கள் ஒற்றையரில் இந்தியாவின் சிறிகாந்த் (4 ஆவது இடம்), காஷயப் (13), பிரனாய் (15) ஆகியோர் தங்களது இடத்தை தக்க வைத்துக் கொண்டனர்.

பெண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஜுவாலா கட்டா, அஷ்வினி பொன்னப்பா ஜோடி 22 ஆவது இடத்தில் இருந்து 21 ஆவது இடத்துக்கு முன்னேறியது.



# கால் பந்தாட்டப் போட்டி யங்ஹென்றிஸ் முன்னிலையில்

மாதகல் புனித தோமையார் விளையாட்டுக் கழகம் புனித தோமையார் திருவிழாவை முன்னிட்டும் அதன் 11 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டும் நடாத்தும் கால் பந்தாட்ட சுற்றுப் போட்டியில் யங்ஹென்றிஸ் ஏ அணி முன்னிலையில் உள்ளது.

அண்ணா பி விளையாட்டுக் கழக அணியும் சென் சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் சென்.சேவியர் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் அண்ணா விளையாட்டுக்கழகம் A அணியும், ஜேம்ஸ் விளையாட்டுக்கழக A அணியும் போதிய போட்டியில் ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சென்சேவியர் B விளையாட்டுக்கழக அணியும் யங்ஹென்றிஸ் A விளையாட்டுக் கழக அணியும் மோதிய போட்டியில் யங்ஹென்றிஸ் A அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மேற்படி போட்டிகள் மாதகல் புனித தோமையார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (93)

# தேசிய மட்ட போட்டிகள்

இலங்கை தேசிய மட்ட மெய்வல்லுநர் விளையாட்டின் கனிஷ்ட பிரிவுக்கான போட்டிகள் இன்று கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் கொழும்புக்குச் சென்றுள்ளனர்.

மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற வீரர்களே மேற்படி போட்டியில் பங்குபற்றச் சென்றுள்ளனர். (93)

# மாகாண மட்ட எல்லே போட்டி முடிவுகள்

பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற எல்லே விளையாட்டுப்போட்டியின் இறுதி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

19 வயதுக்குட்பட்ட ஆண்கள்

1 ஆம் இடம் யாழ். ஹாட்லிக் கல்லூரி (வடமராட்சி வலயம்), 2 ஆம் இடம் யா/நெல்லியடி மத்திய கல்லூரி (வடமராட்சி வலயம்), 3 ஆம் இடம் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி (தென்மராட்சி வலயம்), 4 ஆம் இடம் வ/புதுக்குளம் மகா வித்தியாலயம் (வவுனியா வடக்கு வலயம்).

19 வயதுக்குட்பட்ட பெண்கள்

1 ஆம் இடம் யா/மணற்காடு றோ.க.த.க.பாடசாலை (வடமராட்சி வலயம்), 2 ஆம் இடம் வ/கணேசபுரம் விநாயகர் வித்தியாலயம் (வவுனியா தெற்கு வலயம்), 3 ஆம் இடம் யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் (யாழ்ப்பாணம் வலயம்), 4 ஆம் இடம் மன்/பெரியகுஞ்சுக்குளம் றோ.க.த.க. பாடசாலை (மடு வலயம்)

இப்போட்டிகள் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில கடந்த 20, 21 ஆம் திகதிகளில் நடைபெற்றன.


















# வலையில் கிடைத்தவை...

## தமிழ்மாறனை காப்பாற்ற ரணிலை தொடர்பு கொண்ட சுமந்திரன்!



புங்குடுதீவு மாணவி கொலை விவகாரத்தில் குற்றம்சாட்டப்பட்டுள்ள சுவிஸ் ஆசாமியை காப்பாற்ற முனைந்த சட்டத்தரணி வி.ரி.தமிழ்மாறன் மக்களின் தாக்குதலிற்கிலக்காக இருந்த சமயத்தில் முப்படையினரின் பாதுகாப்புடன் மக்களிடமிருந்து தமிழ்மாறன் காப்பாற்றப்பட்ட விடயத்தில் அதிர்ச்சிதரும் புதிய விடயமும் தெரியவந்துள்ளது. தமிழ்மாறனை காப்பாற்றும்படி தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அரசை தொடர்பு கொண்டதையடுத்தே, இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளது.

மக்களின் முற்றுகைக்கிலக்கான தமிழ்மாறன் அவசர அவசரமாக சுமந்திரனை தொடர்பு கொண்டு, தன்னை காப்பாற்றுமாறு கேட்டுள்ளார். இதனையடுத்து, பிரதமர் ரணிலை தொடர்பு கொண்ட சுமந்திரன், தீவகத்தில் மாட்டியுள்ள தமிழ்மாறனை பாதுகாத்து வெளியில் அழைத்துவருமாறு இராணுவத்திற்கு உத்தரவிட்டுள்ளார். இதனையடுத்தே இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளது. படை நடவடிக்கை ஒன்றின்மூலம், பவள் கவசவாகனத்தில் தமிழ்மாறன் அழைத்துச் செல்லப்பட்டார்.

இதனை மிக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தமிழ்பக்கம் உறுதி செய்துள்ளது.

## முதலமைச்சர் விக்கி கண்டிப்பது யாரை என்று ஏதாவது புரிகிறதா?

மாணவி வித்தியா கொலையைக் கண்டிக்கும் ஆர்ப்பாட்டங்களின் போது வன்முறைகள் நடாத்தப்பட்டன குறித்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் விடுத்திருக்கும் அறிக்கையில், வழக்கம் போல



அவர் காமுகர்களுக்கு ஆதரவு காட்டுகிறாரா, காவலர்களுக்கு ஆதரவு காட்டுகிறாரா, ஆர்ப்பாட்டக்காரர்களை நியாயப்படுத்துகிறாரா கண்டிக்கிறாரா என்பதைப் பகுத்தறிந்து கொள்வது சிரமமாகவே இருக்கிறது.

மாகாணசபையையும் கொண்டிருந்து, மத்திய அரசிலும் உயர்சபையில் இருக்கும் தனது கட்சி, சமூகத்தின் வன்முறையுணர்வுகளைத் தணிக்க என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது, இதுபோன்ற குற்றச்செயல்களை எதிர்காலத்தில் தடுப்பதற்கோ குறைப்பதற்கோ என்ன செய்யப்பட வேண்டும் என்பதையெல்லாம் சொல்ல வேண்டிய பொறுப்பு அவருக்கிருப்பதாக அவர் கருதவில்லைபோல் தெரிகிறது. காவல்துறையையும் ஆர்ப்பாட்டக்காரர்களையும் குற்றவாளிகளையும் ஒருசேர அவர் கண்டிப்பதைப் போலவும் கண்டிக்காததைப் போலவும் கூட இருக்கிறது....

இதோ அவரது அறிக்கையைப் படித்துப் பாருங்கள்:

"புங்குடுதீவு மாணவி வித்தியாவின் வன்புணர்வுக்கும் படுகொலைக்கும் எதிராக எமது மக்கள் தமது விசனத்தையும் கண்டனத்தையும் வெளிக்காட்டுவது எமது ஜனநாயக உரிமையாகும். நான் கூட என் எண்ணங்களை அறிக்கையாக ஏற்கனவே வெளியிட்டுள்ளேன்.

ஆனால் அமைதியாக நடைபெறும் எமது பேரணிகளையும் கண்டன நிகழ்வுகளையும் சாட்டாக வைத்துப் பொதுமக்களின் ஆதனங்களை அடித்து நொறுக்கிச் சேதம் விளைவிப்பதும் ரயர்களை எரிப்பதும் பெரும் குற்றச் செயல்கள் ஆகும்.

பல காரணங்களின் நிமித்தம் அன்றும் இன்றும் பொலிஸாருடன் ஒத்துழைப்பது எமது மக்களுக்கு சற்றுச் சிரமமாகவே இருக்கின்றது.

வித்தியாவின் வருகை தாமதம் அடைவது பற்றி காவல்துறையினரிடம் தாய் தந்தையர் கூறியதும் உடன் நடவடிக்கை எடுத்திருந்தால் 'இன்றைய இந்தத் துர்ப்பாக்கிய நிலை எழுந்திராது.

அதன் பின்னரும் குற்றவாளிகளை கைது செய்வது சம்பந்தமாகத் தாமதத்தையும் அசட்டைத் தன்மையையும் காட்டுகின்றார்களோ காவல்துறையினர் என்பதிலும் எமது மக்கள் கோபம் அடைந்துள்ளார்கள்.'

ஆனால் இத்தருணத்தில் நாங்கள் காவல்துறையினருக்கு அனுசரணையாகச் செயற்பட வேண்டுமே தவிர அவர்களை எதிரிகள் போன்று கணித்து நடந்து கொள்ளக் கூடாது.

காவல்துறையினருக்கும் எமக்கும் இடையில் மனஸ்தாபங்களை ஏற்படுத்தி நிலைமையைச் சீர்குலைக்க சில விஷமிகள் கங்கணங் கட்டிக்கொண்டு நிற்கின்றார்கள் என்பது நன்றாகப் புரிகின்றது. அவர்களின் சாகசங்களுக்கு நாங்கள் அடிமையாகக் கூடாது.

சட்டமும் ஒழுங்கும் ஏற்படுத்தப்பட நாங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமே தவிர உபத்திரவமாய் இருக்கக் கூடாது.

அதே நேரம் நடைபெறும் கண்டனப் பேரணிகள் மக்களால் நடாத்தப்படுபவையேதவிர எந்த ஒரு கட்சியினாலோ, தொழிற்சங்கத்தினாலோ, நிறுவனத்தினாலோ அல்ல என்பதை நாங்கள் நினைவுறுத்த வேண்டும்.

அவ்வாறு குறிப்பிட்ட சில அலகுகள், நிறுவனங்கள் போன்றவை தமக்கு இதனூடாகச் சில தனித்துவமான நன்மைகளைப் பெற முயற்சித்தால் அது இறந்த அந்த அபலைப் பெண்ணுக்கு நாம் செய்யுந் துரோகமாகவே கணிக்கப்படும்.

ஆகவே சந்தர்ப்பத்தைப் பாவித்து கட்சி நலம், காடையர் நலம், கரவான நலங் காண விழைபவர்களுக்கு நாங்கள் எச்சரிக்கின்றோம். மனவருத்தத்தில் வாடும் எம்மக்களின் முதுகில் ஏறிச் சவாரி செய்ய எத்தனிக்காதீர்கள்.

நீங்கள் அடையாளம் காணப்பட்டால் மிகவும் பாரதூரமான விளைவுகளை நீங்கள் எதிர்நோக்க நேரிடும்.

மக்கள் தமது கண்டனங்களையும் எதிர்பார்ப்புக்களையும் அமைதியுடன் இன்று தெரியப்படுத்தி விட்டு நாளைய தினம் எமது நிலைமை வழமைக்குத் திரும்ப உதவ வேண்டும்.

இல்லையேல் எம்மை இராணுவத்தால்தான் கட்டுப்படுத்த முடியும் காவல்துறையினரால் கூட முடியாது என்று அரசியல் ரீதியாகப் பேசப்படும். இதற்கு எம்மக்கள் இடமளிக்கக் கூடாது."

இவ்வாறு செல்கிறது முதல்வரின் அறிக்கை!

-விசாகன் கட்டுரையில்

## நல்லிணக்க அரசாங்கமும்

---

காற்று, நெருப்பு மாதிரி வீசிக்கொண்டிருந்தது. என்னால் சித்திரவதையைத் தாங்க முடியவில்லை. ஒருவழியாக அம்மாவும் அக்காவும் சேர்ந்து பக்கத்தில் இருந்த மர நிழலுக்கு என்னை இழுத்துக் கொண்டு போனார்கள். அங்கே, சிறிய குடிசை ஒன்று வேயப்பட்டிருந்தது. காயம் குணமாகிறவரை அங்கேதான் இருந்தாகவேண்டும்.

முதன் முதலாக எனக்கு சிறுநீர் வெளியேறியது நன்றாக நினைவிருக்கிறது. அந்த இடத்தில் அமிலத்தை ஊற்றினால் எப்படி இருக்கும்? அப்படித்தான் இருந்தது. உயிரே போய்விடும்படி எரிச்சல்... திகுதிகுவென தீப்பற்றி எரிந்தது பிறப்புறுப்பு. தையல் போடப்பட்டிருந்த பொத்தல்களின் வழியே தீக்குச்சி இறைத்தாற்போல் சிறுநீர் வெளியேறியது.

மரண வேதனை.

இதனால், சிறுநீர் வந்துவிடுமோ என்கிற பயத்தில், தண்ணீர் குடிக்கவே பயந்தேன். பல நாட்கள் இப்படித்தான் வாழ்ந்தேன். திடீரென்று ஒருநாள் கிருமித்தொற்று ஏற்பட்டு கடுமையான காய்ச்சல் அடிக்க ஆரம்பித்தது. அம்மாதான் பார்த்துக்கொண்டாள். அந்த வயதில், எனக்கு செக்ஸ் என்றால் என்னவென்றே தெரியாது. ஆனால், ஒன்று மட்டும் தெரியும். ஒவ்வொரு தாயின் ஆசீர்வாதத்தோடுதான் இந்த சடங்கு நடைபெறுகிறது.

என் பெண்மை சிதைக்கப்பட்டது கொடூரமான விஷயம்தான். ஆனால், மற்ற பெண்களைக் காட்டிலும் நான் அதிர்ஷ்டசாலி என்றே சொல்லவேண்டும். பல சிறுமிகள் அதிர்ச்சியினாலும், ரத்தப்போக்கு, நோய்த்தொற்று காரணமாவும் இறந்து போய்விட, நான் மட்டும் உயிரோடு பிழைத்துக்கொண்டேன்.

நாட்கள் ஓடின.

நான் பதின்மூன்று வயதை நெருங்கிக் கொண்டிருந்தேன். ஒரு நாள், மாலை நேரம்... ஆடுகளை அதன் பட்டியில் அடைத்துவிட்டு, வீட்டிற்குள் நுழைந்தேன்.

"வாரிஸ்! இங்க வாம்மா" -அப்பா அன்போடு அழைத்தார்.

தன் மடிமேல் என்னை உட்காரவைத்துக் கொண்டார். வழக்கமாக அவர் குரலில் கடுமை இருக்கும்.

"ஒன்று தெரியுமா? நீ மிகவும் நல்ல பெண். ஆம்பிளைகளைவிட அதிகமா உழைக்கிறாய். மந்தையை ஒழுங்காக கவனிச்சுக்கொள்கிறாய். ஆனால்... உன்னை பிரியப்போறதை நினைச்சால் எனக்கு வருத்தமா இருக்கு"

அப்பா, சம்பந்தமே இல்லாத வார்த்தைகளைப் பேசினார்.

"அடடா! அக்கா மாதிரி நானும் ஓடிப்போகப் போறன் என்று பயப்படுறாரோ!"

நான் அவரை கட்டிப்பிடித்துக்கொண்டு,

"அப்பா. நீங்கள் நினைக்கிற மாதிரி நான் எங்கேயும் ஓடிப்போக மாட்டேன்" என்றேன்.

அவர் என் முகத்தை திருப்பி,

"எனக்குத் தெரியும். நீ என் பெண். அப்பா

# "தொடைகளுக்கு நடுவே ஒளிந்திருக்கும் நரகம்" - 3000 ஆண்டுகால கறுப்பின அடிமை வரலாறு!

2

உனக்கு ஒரு மாப்பிள்ளை பாத்திருக்கிறேன்!" என்றார்.

எனக்கு தூக்கிவாரிப் போட்டது.

"அப்பா. எனக்கு கல்யாணத்தில விருப்பமில்லை."

நான் கொஞ்சம் தைரியமாக வளர்ந்தவள். இப்போது பலவீனமாக உணர்ந்தேன்.

அடுத்த நாள் காலை. நான், பால் கறந்துகொண்டிருந்தேன்.

"வாரிஸ்.. இங்க வா. இது நான் நீ..." அப்பா அழைத்தார்.

அவரோடு அவரைவிட மூத்த ஒருவன் அமர்ந்திருந்தான்.

அப்பா சொன்னதை நான் காதிலேயே வாங்கவில்லை. அவனும் அவன் மூஞ்சையும்! ஆட்டுக்கடா மாதிரி தாடியை தொங்கப் போட்டுக்கொண்டு... 60 வயதிருக்கும் அவனுக்கு.

"வாரிஸ்! வந்திருக்கிறவங்களுக்கு முதல்ல வணக்கம் சொல்லு."

"வணக்கம்."

நான் எவ்வளவு முடியுமோ அவ்வளவு குழைந்து சொன்னேன். அந்தக் கிழட்டு ஓநாய், என்னைப் பார்த்து பல் இளித்துக்கொண்டே உட்கார்ந்திருந்தது. அவனை கொலைவெறியோடு முறைத்துவிட்டு, என்



அப்பாவைப் பார்த்தேன். அப்பாவுக்கு புரிந்துவிட்டது சிரித்தவாறே... "சரி, சரி, போய் வேலையைப் பார்" என்று சமாளித்தார்.


நான் மீண்டும் பால் கறக்கப் போய்விட்டேன்.

மறுநாள் காலையில் அப்பா கூப்பிட்டார்.

"வாரிஸ். அவர்தான் நீ கட்டிக்கொள்ளப்போற புருஷன்."

"அப்பா! அந்தாள் சரியான கிழவனா

## யுத்த வெற்றிக் கொண்டாட்டத்திலேயே ஈடுபட்டது?



மே மாதம் 19ஆம் திகதி யுத்தத்தில் உயிர் நீத்தவர்களுக்கான நினைவு தினம் எனவும் யுத்த வெற்றிக் கொண்டாட்டங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும் அரசாங்கம் முன்னதாக உறுதியளித்திருந்தது.

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமெனவும், இதற்காக யுத்த வெற்றிக் கொண்டாட்டங்கள் நடத்தப்பட மாட்டாது எனவும் அறிவித்திருந்தது.

எனினும் மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வானது யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களை மையமாகக் கொண்டு படையினரின் படை பலத்தை பறைசாற்றும் வகையில் அமைந்திருந்தது.

படைத் தரப்பின் அணி வகுப்புக்கள், சாகசங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் பங்கேற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரையில், “இந்த நாள் மிகவும் முக்கியமான ஓர் நாளாகும், 30 ஆண்டுகளாக நாட்டில் நீடித்து வந்த கொடிய பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்ட நாளையே நாம் இன்று கொண்டாடுகின்றோம். நாட்டின் பௌதீக ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் பாதுகாக்கும் வகையில் யுத்தம் வெற்றிக் கொள்ளப்பட்டு சமாதானம் நிலைநாட்டப்பட்ட நாளே இதுவாகும்” எனத் தெரிவித்துள்ளார்.

“தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடிய யுத்தத்தினால் நாம் அனைவரும் கசப்பான அனுபவங்களை எதிர்நோக்க நேரிட்டது, இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையினர் தைரியமாக போராடி தாய்நாட்டை மீட்டெடுத்துள்னளர்.” எனவும் குறிப்பிட்டுள்ளார்.

“நல்லிணக்க முனைப்புக்களானது உண்மைகளை கண்டறிந்து, தப்பான அபிப்பிராயங்களை களைந்து, இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும்” என ஜனாதிபதி அங்கு தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், சிங்களப் பேரினவாத சக்திகளின் அழுத்தங்கள் காரணமாகவோ அல்லது தேர்தல்களை இலக்கு வைத்தோ புதிய அரசாங்கம் யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கான நினைவு நிகழ்வுகளுக்கு பதிலாக, படைவீரர் தினமொன்றை நடத்தியிருந்தது என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

- குளோபல் தமிழ்

## சுரேசும் விக்னேஸ்வரனும் மௌனமாயிருப்பது ஏன்?

பாதுகாப்புத் தரப்பினரால் இரகசியத் தடுப்பு முகாம்கள் எதுவும் நடத்தப்படவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடமாகாண முதலமைச்சர் மற்றும் தமிழ் எம்.பி.க்கள் ஊடகங்கள் மற்றும் பொதுமக்களை சந்திக்கும்போது இரகசிய தடுப்பு முகாம்கள் இருப்பதாகவும் அவற்றில் பலர் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக கூறுவதுடன் ஆதாரங்களும் தம்மிடம் இருப்பதாக தெரிவிப்பதால் அரசாங்கம் இதுகுறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என யாழ். மாவட்ட எம்.பி.யும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே பிரதமர் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும், இரகசியமான முகாம்கள் எதுவும் கிடையாது. இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸாரினாலும்



இரகசிய தடுப்பு முகாம்கள் எதுவும் நடத்திச் செல்லப்படவில்லை. காணாமற்போனோர் தொடர்பில் என்ன நடந்தது என்று தேடிப்பார்க்க தனியான பிரிவொன்றை நாம் ஏற்படுத்துகிறோம். அந்தப் பிரிவிடம் தகவல் தெரிவிக்கப்பட்டால் தேடிப் பார்க்கப்படும் என்றும் கூறினார்.

இரகசிய முகாம்கள் இருப்பதற்குத் தன்னிடம் ஆதாரங்கள் இருப்பதாகக் கூறும் சுரேஷ் பிரேமச்சந்திரனும், வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனும் ரணிலை மறுத்து ஏன் இன்னும் ஆதாரங்களைத் தெரியப்படுத்தவில்லை? அல்லது இவர்களது குற்றச்சாட்டு குறித்து அரசாங்கம் இவர்களிடம் ஏன் விளக்கத்தைக் கோரவில்லை? இப்போது சுரேசும் முதலமைச்சரும் மௌனமாக இருப்பது ஏன்? என்ன நடக்கிறது இங்கே?

- அழகிரி முருகானந்தம்

---

இருக்கிறான்”

“அதுதாம்மா உனக்கு நல்லது. வயசான மனுஷன் இல்லையா! உன்னை விட்டு எங்கேயும் போகமாட்டார். உன்னை நல்லா பாத்துக்கொள்வார். ஒன்று தெரியுமா? மாப்பிள்ளை நமக்கு... அஞ்சு ஒட்டகம் குடுத்திருக்கிறார்” அப்பா, வாயைப் பிளந்துகொண்டு பெருமை பேசினார்.

அன்று முழுக்க நான் ஆட்டு மந்தையையே வெறித்துக்கொண்டிருந்தேன். மனதில் ஆயிரம் சிந்தனைகள். பாழும் பாலைவனத்தில் ஒரு கிழவனிடம் வாழ்க்கைப்படுவதை நினைத்துப் பார்த்தேன்.

“த்தூ..

இந்த வாழ்க்கைக்கு, தூக்குப்போட்டு சாகலாம்.” - ஒரு முடிவுக்கு வந்தேன்.

அன்று இரவு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது வீடு.

நான் அம்மாவை நெருங்கி,

“எனக்கு இங்கிருக்கப் பிடிக்கேல்ல. நான் ஓடப்போறேன்.” என்றேன்.

“அடிப்பாவி. எங்க ஓடுவாய்?”

“மொகாதிஷு அக்கா வீட்டுக்கு.”

“முதல்ல போய் படு” -பல்லைக் கடித்தவாறு அம்மா சொன்னாள்.

நான் கையை தலைக்கு வைத்துக்கொண்டு தூங்கப் போய்விட்டேன். திடீரென்று கை முட்டியில் யாரோ தட்டினார்கள்.

அம்மாதான்.

அந்தாள் முழிச்சுக் கொள்றதுக்குள்ள எழுந்து ஓடு” -கிசுகிசுத்தாள்.

நான் சுற்றி முற்றி பார்க்கிறேன். எடுத்துச் செல்ல உணவோ, தண்ணீரோ, ஒட்டகப் பாலோ எதுவுமே இல்லை. நான் எழுந்து அவளை அணைத்துக்கொண்டேன். அந்த இருட்டிலும், அவள் முகத்தைப் பார்க்க முயற்சித்தேன். முடியவில்லை. தாரை தாரையாக கண்ணீர் மட்டுமே வழிந்தது.

“எதுக்கும் கவலைப்படாதே. நீ எங்க இருந்தாலும் நல்லா இருப்பாய். அம்மாவை மட்டும் மறந்திடாதே” என்றாள்.

“சத்தியமா”

சொல்லிவிட்டு ஓட ஆரம்பித்தேன்.

பாலைவனம் முழுக்க ஒரே கும்மிருட்டு.

எவ்வளவு தூரம் ஓடினேன் என்பது தெரியவில்லை. ஆனால், கொஞ்சமும் ஈவிரக்கமில்லாத கரடு முரடான பாலைவனம் அது.

அந்தப் பயணம், முடிவில்லாத ஒன்றாக எல்லையற்று நீண்டிருந்தது.

(தொடரும்)

---

**த**மிழில் PRISON ESCAPE படங்களை தேடினால் மோகன்லால் நடித்த ‘சிறைச்சாலை’ மட்டும்தான் கிடைக்கிறது. அதுகூட மலையாள வாசனை நிறைந்த படம். ஹொலிவுட்டில் ஜெயில் வகைமையில் நூற்றுக்கணக்கில் படங்கள் உண்டு. மரணதண்டனைக்கு எதிரான திரைப்படங்கள் ஏதாவது தமிழில் வந்திருக்கிறதா என்று தேடிப்பார்த்தால் ப்ச்...! நண்பர் ஒருவர் ‘அரவான்’ என்றார். அது மக்களுக்கு தரப்பட்ட மரணதண்டனை அல்லவா... அதனால் அடுத்து தேடினேன். கமலஹாசனின் விருமாண்டி மட்டும்தான்!

தமிழ் சினிமாவில் மரணதண்டனைக்கெதிரான நடவடிக்கை என்றால் கிளைமாக்ஸில் முக்கிய பாத்திரத்தைத் தூக்கில் போடப்போகும்போது சாட்சியோடு வந்து நிறுத்துங்க என்று தடுத்து நிறுத்துவதுதான்! (உதாரணம் - குருசிஷ்யன், ராஜாதிராஜா). அந்த வகையில் புறம்போக்கு என்கிற பொதுவுடைமை அது எடுத்துக் கொண்ட பின்னணியின் அடிப்படையில் முக்கியத்துவம் பெறுகிறது...

சில ஆண்டுகளுக்கு முன் ‘தூக்கிலிடுபவரின் நாட்குறிப்புகள்’ என்னுமொரு நூல் உன்னதம் பதிப்பகம் வெளியிட்டிருந்தது. மலையாளத்திலிருந்து தமிழில் இரா.முருகவேள். மரண தண்டனை குறித்த மிகமுக்கியமான ஒரு ஆவணம் இது. இந்நூலில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் தூக்குத்தண்டனை நிறைவேற்றுகிற ஜனார்த்தனன் பிள்ளையின் வாழ்க்கை. 117பேருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றியவர் இவர்! தூக்கிலிடுபவனின் வலி, வேதனை, அன்றாட கடமைகள், சடங்குகள் என்று நூல்முழுக்க பல விஷயங்கள் நிரம்பியிருக்கும். படத்தில் வருகிற எமலிங்கம் (விஜயசேதுபதி) பாத்திரம் ஜனார்த்தனன் பிள்ளையைப் போலவேதான் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இப்படமே அந்நூல் தந்த பாதிப்பில் உருவாகியிருக்கலாம்!

படத்தின் ஆரம்பக்காட்சிகளில் எமலிங்கம் என்கிற அப்பாவியை கொல்ல நக்சல்பாரி கம்யூனிச இயக்கத்தினர் சிலர் தீர்மானிக்கிறார்கள். கையில் கூரான ஆயுதங்களுடன் எமலிங்கத்தை பின்தொடர்கிறார்கள். திட்டம் போடுகிறார்கள். அவனை கொன்றுவிட்டால் நக்சல் தலைவரை தூக்கில் போடமுடியாமல் போகுமாம்! என்ன லொஜிக்கோ வெங்காயமோ. அந்த எமலிங்கத்தை கொல்ல கிடைக்கிற சந்தர்ப்பத்தில் கூட அம்மா சென்டிமென்ட் பார்த்து அவனை வேற இடத்தில வச்சு முடிச்சிடலாம் என்று முடிவெடுக்கிறார்கள். உலகிலேயே அம்மா சென்டிமென்ட் உள்ள போராளிகள் தமிழ்சினிமா போராளிகளாகத்தான் இருக்கவேண்டும்.

இப்படி எந்தப் பாவமும் பண்ணாத தூக்கிடுகிற ஒரு அப்பாவியை கொல்லத் துடிக்கிற இந்தக் குழுவினரின் தலைவர் ஆர்யா படம் முழுக்க மரண தண்டனை ஏன் தவறானது என்று பக்கம் பக்கமாக கிளாஸ் எடுப்பது படத்தின் ஆகப்பெரிய முரண் நகைச்சுவை. ஆச்சர்யமூட்டும் வகையில் தமிழ்நாட்டில் இருக்கிற பெரும்பாலான மரண தண்டனை எதிர்ப்பு போராளிகளுக்கும் இப்படி ஒரு நிலைப்பாடு உண்டு. முருகன், சாந்தனை தூக்கிலிடக்கூடாது என்று ஒருபக்கம் போராட்டம் நடத்திக்கொண்டே இன்னொரு பக்கம் ராஜபக்ஷவை தூக்கிலிட துடிப்பார்கள்.




அஜ்மல் கசாபை தூக்கில் போடும்போது அமைதியாகிவிடுவார்கள்!

ஒரு பெண் போராளி காட்டப்படுகிறார். இளம் போராளி. மனிதவெடிகுண்டாக மாற தன்னுடைய உடல் பொருள் ஆவி அனைத்தையும் இயக்கத்திற்கே ஒப்புக்கொடுத்தவர். விரைவிலேயே வீரமரணம் அடைந்து தியாகியாகப் போகிறவர். அப்படிப்பட்டவரோ எந்நேரமும் அங்கங்கள் பிதுங்கும் ரீசேர்ட்டும் டைட்டான ஜீன்ஸும் வாயெல்லாம் லிப்ஸ்டிக்குமாக வாழ்வாங்கு வாழ்கிறார். அவருக்கு குயிலி என்று பெயர் வைத்திருக்கிறார் இயக்குநர். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த தற்கொலைப் போராளி இந்த குயிலி. அப்படிப்பட்ட பெயரை வக்கணையாக வைத்தவர் எல்லாவிதமான சினிமாத்தனங்களோடுதான் அது காட்சிப்படுத்தப்பட வேண்டுமா? அதிலும் போராளித்தலைவரோடு பனிமலையில் டான்ஸ் வேறு ஆடுகிறார்!

விஜய்சேதுபதியை “இதற்குத்தானா ஆசைப்பட்டாய் பாலகுமாரா” ஷூட்டிங்கிலிருந்து அப்படியே மேக்கப் கூட கலைக்காமல் அழைத்து வந்து நடிக்கவைத்திருக்கிறார்கள். ஆனால் தன்னுடைய பங்கை சிறப்பாக செய்திருக்கிறார். மற்ற இரண்டு நாயகர்களும் சொக்லேட் பையன்களாக இருந்தாலும் ஷாம் பல தெலுங்குப் படங்களில் பொலிஸாக நடித்து நடித்து நிஜ பொலிஸைப் போலவே ஆகிவிட்டார். ஆர்யாவைப் பார்த்தால் போராளி போலவே இல்லை. அண்ணன் சீமானையாவது அந்தப் பாத்திரத்தில் நடிக்க வைத்திருக்கலாம்! புரட்சிகரமாக இருந்திருக்கும்.

தேவையில்லாத காட்சிகள், அலுப்பூட்டும் திரைக்கதை, லொஜிக் ஓட்டைகள் என்று படத்தில் ஏகப்பட்ட குறைகள் இருந்தாலும் நிறைய நல்ல தருணங்களும் உண்டு. குழந்தையை கற்பழித்ததற்காக ஆயுள்தண்டனை பெற்றவருக்கு பதினெட்டு ஆண்டுகள் கழித்து நிரபராதி என்று விடுதலை கொடுக்கிற அந்த காட்சியும் அவர் நான் வெளியே போகமாட்டேன் என்று துடிக்கிற அந்தக் காட்சியும் சிறப்பானது. ஜெயிலில் ஷாம் செய்கிற சீர்திருத்தங்களும் அவர் சிறைத்துறை மீது வைக்கிற விமர்சனங்களும் அபாரமானவை.

தமிழ் சினிமா இயக்குனர்கள் எல்லோருக்குமே பழிவாங்குவது அல்லது பலிகொடுப்பதுதான் பிடித்தமானது. அவ்வளவு ஆழ்ந்த அரசியல் அறிவுள்ள ‘ரமணா விஜயகாந்த்’ கூட கடைசியில் தன்னைத்தானே தூக்கிலிட்டுக் கொள்வதுதான் தமிழ்சினிமா பாணி! அப்படியொரு சூழலில் இப்படம் ஒரு நல்வரவு. தைரியமாக மரண தண்டனை எதிர்ப்பை பேசியதற்காகவே ஜனநாதனின் இந்தப் படத்தை அதன் எல்லா குறைகளுடனும் சகித்துக்கொள்ளலாம். அக்குறைகளை தவிர்த்திருந்தால் காலத்திற்கும் மனதில் நிற்கவல்ல ஒரு நல்ல ஆக்கமாக வந்திருக்கும்.

- அதிஷா -

# புதிர்ப்போட்டி இல. 40

அனுப்பவேண்டிய முகவரி
புதிர்ப்போட்டி இல: -------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும். அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.

## விடுகதைகள்

1. சருகுச் சேலைக்காரி சமையலுக்கு உதவுவாள். அவள் யார்?
2. கோடையில் சுற்றி வரும் வாடையில் முடங்கி விடும். அது என்ன?
3. கொலுவிலும் இருக்கும், குழந்தையிடமும் இருக்கும். அது என்ன?
4. கையை வெட்டுவார் கழுத்தை வெட்டுவார். ஆனாலும் நல்லவர். யார் அவர்?
5. கூடவே வருவான். ஆனால் பேசமாட்டான். அவன் யார்?
6. கையில்லாமல் நீந்துவான் கால் இல்லாமல் ஓடுவான். அவன் யார்?
7. குட்டி போடும். ஆனால் எட்டிப் பறக்கும். அது என்ன?

## தண்ணீர் பற்றிய சில உண்மைகள்

* பூமியில் உள்ள 97 சதவீதம் உப்புத் தண்ணீரால் ஆனது, மீதமுள்ள 3 சதவீதம் தூய்மையான நீர் என குறிப்பிடப்படுகிறது. அவற்றில் 2 சதவீதம் பனிக்கட்டிகளாகவும் பனிப்பாறைகளாகவும் காணப்படுகிறது. இதன் மூலம் 3 இல் 1 சதவீதம் தூய்மையான தண்ணீர் தான் ஆறுகள், ஏரிகள் மற்றும் பூமிக்கு அடியிலும் காணப்படுகிறது.

* பூமியின் பரப்பளவில் 10 இல் ஒரு (1/10) பங்கு பனிக்கட்டிகளால் ஆனது. மேலும் பனிக்கட்டிகளின் 90 சதவீதம் அந்தாட்டிக்காவைச் சார்ந்தே இருக்கிறது, ஆயினும் அங்குள்ள எரிபஸ் (Erebus) என்ற எரிமலை புகையை வெளியிட்டு வருகிறது. பனிக்கட்டியின் மீதமுள்ள 10 சதவீதம் பனிப்பாறைகளாகக் காணப்படுகிறது.

* பனிக்கட்டிகள் உப்பு தண்ணீரால் ஆனாலும், எவ்வித உப்பையும் பெற்றிருக்காது. எஸ்கிமோஸ் போன்ற பனிப் பிரதேசங்களில் வாழும் மக்கள் உணவுகளை சமைக்கவும் குடிக்கவும் பனிக்கட்டிகளை உறையவைத்து தான் பயன்படுத்துகிறார்கள். மேலும் இது மிகவும் தூய்மையான தண்ணீராகத்தான் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

* உப்பு தண்ணீரில், 96 சதவீதம் தூய்மையானதும், 3 சதவீதம் உப்பாகவும், மீதமுள்ள 1 சதவீதத்தில் சல்பேட், மக்னீசியம், புரோமைட், கல்சியம், பொற்றாசியம், சோடியம், போரன்,.புளோரைட், தங்கம் உள்ளிட்ட 80 கனிமங்களைக் கொண்டதாகக் காணப்படுகிறது.

## தெரிந்து கொள்ள வேண்டிய சில தகவல்கள்

* ஆஸ்கார் விருது மொத்தம் 24 பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகிறது.
* யானையின் துதிக்கையில் எலும்பு கிடையாது.
* நெருப்புக்கோழி மணிக்கு சுமார் 70 கிலோமீற்றர் வேகத்தில் ஓடும் ஆற்றல் பெற்றது.
* அதிகம் கேட்கும் சக்தி கொண்ட பறவை இனம் கிளி.
* மண்புழுக்களுக்கு கண், காது, தாடை, பல் போன்ற அமைப்புகள் கிடையாது.
* அவுஸ்ரேலியாவில் வசிக்கும் மித்ரா என்ற பறவை ஒன்பது நிறத்தில் தெரியும்.
* கடல் புறாக்கள் நீரில் மிதந்து கொண்டே தூங்கும்.
* பச்சோந்தியின் கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும்.
* மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 தடவைகள் கொத்தும்.
* குவாரின் என்ற பறவை மல்லாந்து தூங்கும்.
* புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ. வரை பறக்கும் திறன் படைத்தது.
* ராஜஸ்தான் பறவைகள் சரணாலயத்தில் 374 பறவை இனங்கள் இருக்கின்றன.
* நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை புறா.
* ஒரே சமயத்தில் அதிக முட்டைகளை இடும் பறவை நெருப்புக் கோழி.
* மிகப் பெரிய நீர்ப்பறவை அன்னம்.
* வெட்டுக் கிளியை வேட்டையாடும் பறவை மைனா.
* வான்கோழிகள் அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்டவை.
* நியூசிலாந்து நாட்டில் காக்கைகள் கிடையாது. குதிரையின் சராசரி ஆயுட்காலம், 60 ஆண்டுகள்.
* நூர்ஜஹானின் இயற்பெயர், மெஹருன்னிசா.
* சங்கரதாஸ் சுவாமிகள் ஒரே இரவில் எழுதி முடித்த நாடகம், அபிமன்யு.
* அமைதியின் தூதுவர் என்று அழைக்கப்பட்டவர், ஜவஹர்லால் நேரு.
* உயிர் காக்கும் உலோகம் என்று அழைக்கப்படுவது, ரேடியம்.
* நோபல் பரிசை நிறுவியவர், ஆல்பிரட் நோபல்.
* சனிக்கிரகத்துக்கு வளையம் உண்டு என்பதைக் கண்டறிந்தவர், கலிலியோ.

## பொதுஅறிவு வினாக்கள்

01.இரண்டாம் கர்நாடக போரின் முடிவில் கீழ்க்கண்டவை ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.
அ.அய்லாசாப்பேல் உடன்படிக்கை
ஆ.பாண்டிச்சேரி உடன்படிக்கை
இ.பாரிசு உடன்படிக்கை
ஈ.வட சர்க்கார் உடன்படிக்கை

2.கனிஷ்கரின் தலைநகர்
அ.காஷ்கர்
ஆ.யார்கண்டு
இ.பெஷாவர்
ஈ.எதுவுமில்லை

3.பாண்டியர்களின் ஓவியக்கலை வளர்ச்சியை பறைசாற்றுவது
அ.மதுரை
ஆ.தொண்டி
இ.சித்தன்னவாசல்
ஈ.மானமாமலை

5.நாலந்தா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக இருந்தவர்
அ.ஹரிதத்தர்
ஆ.ஜெயசேனர்
இ.தர்மபாலர்
ஈ.எவருமில்லை

6.குஷானர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்
அ.கிரேக்கம்
ஆ.பாரசீகம்
இ.இந்தியா
ஈ.சீனா

7. தக்கர்களை ஒடுக்கிய ஆங்கிலேய ஆளுநர்?
அ.வில்லியம் பெண்டிங்
ஆ.காரன் வாலிஸ்
இ.வாரன் ஹேஸ்டிங்ஸ்
ஈ. டல்கௌசி

8."புத்த தத்தர்" யாருடைய காலத்தில் வாழ்ந்தார்
அ. கரிகாலன்
ஆ. இளஞ்சேரலாதன்
இ. அச்சுத களப்பாளன்
ஈ. தலையாலங்கானத்து

## சென்றவார விடைகள்

01.இ 02.இ

பொதுஅறிவு வினாக்கள்

01.ஹேக்கல் 02.அவுஸ்ரேலியா
03.முதலை 04.ஹீவியா ப்ரசிலியன்சிஸ்.
05.கீழாநெல்லி 06.கி.பி 1890
07.யூன் 5 08.சூரியகாந்தி எண்ணெய்
09.ஒட்சிசன் 10.புது டெல்லி
11.பீஜிங் சர்வதேச விமான நிலையம் , சீனா

விடுகதைகள்

01.முடி 02.இதயம்
03.தவளை 04.தேங்காய்.
05.சிலந்தி 06.அகப்பை
07.தென்னை 08.பென்சில்
09.அப்பளம் 10.கண்ணீர்

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- ம.கவிதா
தரம் :- 10
பாடசாலை :- யா / சன்மார்க்க மகாவித்தியாலயம்

பெயர் :- சா.தினேஷ்
தரம் :- 10
பாடசாலை :- யா / மத்திய கல்லூரி

பெயர் :- மு.சபிதா
தரம் :- 10
பாடசாலை :- யா /சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

பெயர் :- ப.செந்தூரன்
தரம் :- 09
பாடசாலை:-யா/மத்திய கல்லூரி

### விண்ணப்பதாரின் விபரம்

முழுப்பெயர் :- ----------------
பாடசாலை :- ----------------
கல்வி கற்கும் தரம் :- ----------------
வீட்டு முகவரி :- ----------------
தொ.பேசி இலக்கம் :- ----------------

# சிறுவர்களுக்கு தலைக்கவசம் கவனம் செலுத்துவது அவசியம்

## சமூக ஆர்வலர்கள்

சிறுவர்களுக்கு தலைக் கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்லும் பெற்றோர், பாதுகாவலர்கள் இதில் சவனம் செலுத்தவேண்டும் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்பிற்காக அணியப்படும் தலைக்கவசத்தை மோட்டார் வாகன ஒட்டுநர்கள் தாம் மட்டும் அணியாது தாம் ஏற்றிச் செல்லும் சிறுவர்கள் தொடர்பிலும் அக்கறை செலுத்தவேண்டும். குறித்த நேரத்தில் சிறுவர்களுக்கு ஏற்ற அளவிலான தலைக கவசம் இல்லாமை, அவசரம் போன்ற காரணங்களால அவர்களுக்கு தலைக் கவசம் அணிவிகாது ஏற்றிச் செல்கின்றனர். இதனால் பாதிக்கப்படப்போவது எமது இளைய சமுதாயத்தினரே.

அத்துடன் தலைக்கவசம் அணியும் பழக்கத்தைச் சிறுவயதிலிருந்தே பழக்குவதன் மூலம் எதிர்காலத்தில் பாதுகாப்பான தொரு சமுதாயத்தையும் உருவாக்க முடியும்.

சிறுவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் உரிய கவனம் செலுத்த வேண்டியது அனைத்து பெற்றோர், பாதுகாவலர்களின் கடமை. எனவே உரிய தரப்பினர் இதில் அக்கறை செலுத்த வேண்டும். எனவும் ஆர்வலர்களை வேண்டுகோள் விடுக்கின்றனர். (66)

# 150 ஆவது ஆண்டு விழாவும் கட்டடத்திறப்பு விழாவும்

இணுவில் இந்துக் கல்லூரியின் 150ஆவது ஆண்டுவிழாவும், புதியமாடிக் கட்டடத்திறப்பு விழாவும் இன்றும் நாளையும், நாளைமறுதினமும் நடைபெறவுள்ளன.

கல்லூரி வளாகத்தில் நடைபெறும் இவ்விழாவிற்கு இணுவில் இந்துக்கல்லூரி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் தலைவர், வை.ஸ்ரீஸ்கந்தவரோதயன தலைமைதாங்கவுள்ளார்.

முதல்நாள் விழாவிற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

ஆசியுரையினை சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக்குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிகள், கலாநிதி ஆறுதிருமுருகன் ஆகியோர் வழங்கவுள்ளனர். வரவேற்புரையினை ஓய்வு பெற்ற அதிபர் இ.செந்தில் குமாரன் வழங்கவுள்ளார். வாழ்த்துரைகளை யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன், பேராசிரியர் க.தேவராஜா, பழைய மாணவர் சங்கத்தலைவர், ஞான திருக்கேதீஸ்வரன், நூலகர் கு.விக்னரூபன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடக்கவுரையினைக் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் ஆற்றவுள்ளார். சிறப்புரையினைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆற்றவுள்ளார். 2ஆம் நாள் நிகழ்வான நாளை இணுவில் இந்து நூல் வெளியீடு நடைபெறவுள்ளது. 3ஆம் நாள் நாளை மறுதினம் அறிஞர் கௌரவிப்பும், முத்தமிழ் விழாவும் இடம் பெறவுள்ளன. (06)

# “மூன்றாம் முத்தம்” குறு நாவல் வெளியீடு

அரியாலையூர் செல்வி மிசாந்தி செல்வராஜாவின் “மூன்றாம் முத்தம்” குறுநாவல் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொள்ள உள்ளார்.

“நீங்களும் எழுதலாம்” சஞ்சிகையின் ஆசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கத்தின் தலைமையில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது. நிகழ்வின் வரவேற்புரையை வட மாகாண கல்வி அமைச்சின் அபிவிருத்தி அலுவலர் செல்வி.து.தசோனியா நிகழ்த்த உள்ளார்.

ஆசியுரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் நிகழ்த்தவுள்ளார்.

நூல் அறிமுக உரையை புலோலியூர் வேல்நந்தகுமார் நிகழ்த்துவார்.

வெளியீட்டுரையை நல்லூர் பிரதேச செயலக கலாசார அலுவலர் திருமதி ரஜனி குமாரசிங்கம் நிகழ்த்த உள்ளார்.

நயப்புரையை ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. மீரா அருள்நேசன் , சிறப்புரையை வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலர் இ.வரதீஸ்வரனும்,மதிப்பீட்டுரையை இலங்கை வெளிநாட்டு அமைச்சின் ஓய்வுநிலை பணிப்பாளர் ஏ.தர்மகுலசிங்கமும் நிகழ்த்த உள்ளார்கள்.

ஏற்புரையை நூலாசிரியரும், நன்றியுரையை இலங்கை வங்கி அலுவலர் செல்வி. அ.மாதுரியும் நிகழ்த்த உள்ளனர். (68)

# நிர்வாக தெரிவு

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம், கல்வியங்காடு இலங்கைநாயகி அம்மன்கோவிலுக்கு பலிபாலன சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் ஆலய மண்டபத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை கோவிலுக்கான இந் நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

தலைவர், ச.சுரேஷ்குமார், உப தலைவர்: ந.கருணாகரன் செயலாளர்: து.குனேந்திரா, உபசெயலாளர் ம.கிருஷ்ணா பொருளாளர் இ. சிவேந்திரராஜா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் அங்கத்தவர்களாக கு.அற்புதன், கி.பார்த்தீபன், க.விமலதீசன், என். கே.குலசிங்கம், அ.ஜெயசிங்கம், மா.மங்களேஸ்வரன், ப.செந்தில், க.ஸ்ரீதரன், ந.இரவிச்சந்திரன், பொ.யோகராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (137)



முல்லைத்தீவு முள்ளியவளையில் நடைபெற்ற கதவடைப்பின் பதிவுகள்...

# வாரம் ஒரு காரம்

## இருப்பவர்களை வாழவைப்பது தான் இறந்தவர்களிற்கு நாம் செய்யும் அஞ்சலி



2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் பலியான எமது உறவுகளிற்காக பலர் பல இடங்களில் பல வடிவங்களில் அஞ்சலி செய்தார்கள். பிதிர்க்கடன் என்கின்ற பெயரில் சில அஞ்சலிகள் இடம் பெற்றன, தீபமேற்றல் மூலம் சில அஞ்சலிகள் இடம் பெற்றன, அறிக்கைகள் மூலம் அஞ்சலிகள் இடம் பெற்றன.

எவர் எப்படி நிகழ்த்தினார்கள் என்பதற்கப்பால் அஞ்சலியென்ற ஒன்றை அரசியலிற்காகவேனும் நிகழ்த்தினார்கள் என்பதுதான் உண்மை. இவ் அஞ்சலி மனதார எவ்வாறு அமைய வேண்டும் என்பதுதான் இங்கு நோக்கற்பேறுடைய கருப்பொருளாகும்.

இன்று அஞ்சலிகள் ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் அர்த்தமற்ற பித்தலாட்டங்களாக மாறிவருகின்றது. அண்மையில் நடந்த வித்தியாவின் கொலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வன்முறைக் கெதிரான ஆர்ப்பாட்டங்கள் வன்முறைவழி நின்றே நிகழ்த்தப்பட்டன. இதனால் என்ன பயன்?.....

நீதிமன்றத்தைக்கூட உடைத்து சேதப்படுத்தி மேற்கொள்ளப்படும் கோரிக்கை நியாயமானதாக அமையுமா?... வித்தியாவின் கொலையைப் போல் இதுவும் ஒரு அநாகரிகமான செயற்பாடுதானே.

இதே போன்றுதான் உரிமைகளிற்காக உதிரம் சிந்திப் போராடிய போராளிகள் உட்பட உயிர்நீத்த அத்தனை உறவுகளிற்கும் அஞ்சலி செய்தார்கள். யார் செய்தார்கள்? எங்கெங்கெல்லாம் செய்தார்கள்? எப்படிச் செய்தார்கள்? என்று ஆழமாக சிந்தித்துப் பார்த்தோமானால் தமிழ் தேசியம் என்கின்ற பெயரைத் தனித்தேசியம் எனும் வழியில் திசை மாற்றும் அரசியல் செயற்பாடுகளாகவே அவை மிளிர்கின்றன.

அதுவல்ல அஞ்சலி இது இருப்பவர்களை ஏமாற்ற இறந்தவர்களைப் பயன்படுத்தும் பித்தலாட்டங்கள்.

புலிகளை உள்ளிருந்து எதிர்த்தவர்களும், விடுதலைப் போராட்டத்தை விரோதமாகப் பார்த்தவர்களும், முள்ளிவாய்க்கால் அழிவிற்கு முழுக்காரணமாக உள்ளவர்களும் தான் இன்று தமது அரசியல் பக்கங்களிற்கு உரமூட்ட புலிகளையும், முள்ளிவாய்க்கால் இழப்புக்களையும் முதுகில் சுமந்து மூட்டைகட்டி நடப்பவர்கள் போல் முக்கித் தள்ளுகின்றார்கள்.

மக்கள் நலனிற்காக சில மாற்றுவழிகளை முன்வைத்தமையால் புலிகளின் சிந்தனையில் விரோதிகளானவர்கள், இன்றும் விலகியே நிற்கின்றார்கள்.

அடுத்தவர் உரிமைக்காக அன்று மடிந்த அப்பாவிப் போராளிகளிற்கும், அதனோடு பலியான பொது மக்களிற்கும் அஞ்சலி செலுத்த வேண்டியது கட்டாய தேவையாகும். ஆனால் கூட்டமைப்பிற்கு அதை செலுத்த என்ன அருகதையுண்டு என்பதை தெளிவாக தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அன்று சுயலாப அரசியல் சுருண்டுவிடக்கூடாது என்பதற்காக எதற்கும் தலையாட்டி எட்டப்பனாய் இருந்த கூட்டம்தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு. பெட்டிப்பாம்பாக இருந்து தமிழ் மக்களின் பெட்டகத்திற்கே நஞ்சுவைத்தவர்கள் இன்று பொட்டு வைத்து அஞ்சலி செலுத்துகின்றார்கள்.

இருப்பவர்களிற்குப் புரியாவிட்டாலும் இறந்தவர்களிற்குப் புரியும் இந்த நியாயம். முதலமைச்சர் விக்னேஸ்வரனிற்கு தெரியுமா முள்ளிவாய்க்கால் வேதனை?.... புக்காரா தெரியுமா?... எடித்தாரா தெரியுமா?... பக்கம் வந்தால் பதுங்கிய பங்கர்கள் தெரியுமா?.... அஞ்சலிக்கு ஆள் வேண்டுமென்று அழைத்தார்களா அவரை.... வன்னி மண்ம் என்றாவது அவர் வாசலிற்கு வந்திருக்குமா?....

அன்று சேர் பொன் இராமனாதன் காலத்தில் சுமுகமான அரசியல் வெற்றிடங்கள் சிறுபான்மையினங்களிற்கு இருந்தபோதும் இலங்கையில் தமிழர்கள் தமது இருப்பிடத்தைத் தேடவில்லை. தற்போது கூட்டமைப்பின் காலத்திலும் பல சந்தர்ப்பங்கள் வந்தபோதும் ஓர் இருப்பிடத்தை இன்றும் இவர்கள் தேடவில்லை. தேடித்தருவதாக கூறுபவர்களிற்கு இதுவரை மக்களும் அங்கீகாரம் கொடுக்கவில்லை.

அர்த்தமற்ற அரசியல் பக்கங்கள் மூலம் சுயலாப அரசியலை சுத்திகரிக்க விரும்புகின்றார்களே தவிர நிலையான நிரந்தரமான தீர்வுகளைத் தேடும் எண்ணம் எவர்க்குமில்லை.

இறந்தவர்களிற்கு அஞ்சலி என்கின்ற பெயரில் இருப்பவர்களைக் கொல்வதைவிட இருப்பவர்களை வாழவைப்பதற்கூடாக இறந்தவர்களிற்கு அஞ்சலி செலுத்துங்கள்.

- வெண்கட்டியன்

## அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்றிட்ட முன்னேற்றக்கூட்டம்



(யாழ்ப்பாணம்)

அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது.

யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகள் முகவர் நிலையங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், உள் நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள், ஆகியவற்றால் இவ்வருடம் மேற்கொள்ளப்படும் அனைத்து செயற்றிட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் யாழ் மாவட்டத்தின் தேவைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், துறைசார் உயர் அதிகாரிகள் எனப் பலரும் இணைந்திருந்தனர்.

# பாதுகாப்பு குறைபாடு இருந்திருந்தால் யாழில் பாரிய பிரச்சினை ஏற்பட்டிருக்கும்

### - வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு -

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் நடவடிக்கை வரவேற்கப்பட வேண்டியது பாடசாலை மாணவி கொலை தொடர்பில் இடம் பெற்ற போராட்டங்களின் போது பாதுகாப்பு குறைபாடுகள் ஏற்பட்டிருந்தால் யாழ்ப்பாணத்தில் பாரிய பிரச்சினை ஏற்பட்டிருக்கக் கூடுமென வட மாகாண ஆளுநர் எச்.எம்.ஜீ.எஸ். பலிஹக்கார தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண காவல் துறையினர் மிகவும் நிதானத்துடன் செயற்பட்டதனால் எவ்வித பிரச்சினைகளும் ஏற்படவில்லை

மாணவி கொலைக்கு எதிர்ப்பு வெளியிட்டு போராட்டம் நடாத்த பொலிஸார் யாழ்ப்பாண மக்களுக்கு அனுமதி வழங்கியமை வரவேற்கப்பட வேண்டியது

சிவிலியன்களின் உரிமைகளை மதித்து பொலிஸார் நடந்து கொண்டனர். மறுபுறத்தில் ஒரு தொகுதியினர் வன்முறைகளில் ஈடுபட எடுத்த முயற்சியையும் பொலிஸார் முறியடித்தனர்

தாக்குதல்களில் ஈடுபட்ட பெரும்பான்மையானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

அண்மையில் புலிகளின் கொடி



ஏற்றப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் இந்தச் சம்பவம் சமூகத்தில் வெறும் அர்த்தத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடுமென அவர் தெரிவித்துள்ளார்.

## பரமர் சங்கமம்



'சட்டம் செய்யாதது ஒண்டுமில்லைப் போலைதான் கிடக்கு' கொலையும் செய்திருக்கு. இதுக்கு மேலை என்ன செய்ய வேணும் கொலை களவு,சூது,வாது ஒண்டுமே தப்பாது. இதாலைதான் அறிஞர் சி.என். அண்ணாத்துரையும் சட்டத்துக்கு அப்புடியொரு பெயரைச் சூட்டினார் போலும்.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் காலத்திலை சட்டம் அவருக்குக் கைகட்டிச் சேவகம் செய்தேண்டு சொல்லுவினம். ஒரு யானை நெருப்புப் பெட்டி ஊசியை ஆட்ட ஆட்ட நூல் கோக்கும் நிபந்தனை உப்புடி அவர் சட்டத்திலை விளையாடிய விளையாட்டு இண்டைக்கொருதரும் செய்யேல்லை செய்ய மாட்டினம்.

'ரயர் அற்பர்றெண்டு ஒரு வழக்கிலை அதனை விசாரிக்கிற நீதிமன்றமே தகுதியற்றதெண்டு கூறி வேறை நீதிமன்றத்தை உருவாக்கி அதிலை வழக்கை நடத்தியதாலை அரசாங்கத்தைப் பணிய வைத்ததுமில்லாமல் உலகத்தையே திரும்பிப் பாக்கவும் வைச்ச சட்ட மேதை!

சட்டம் எல்லாத்துக்கும் ஆடும். அதுக்கு வசதியா யாரேம் உடனடியாகக் குற்றவாளி எண்டாது. சந்தேகப் பேர்வழி எண்டுதான் மெதுமெதுவாத் தோண்டும். தாளம் புழைச்சாலும் ஜதிசுத்தமா அமையும். 1960 களிலை ரொனிடிமெலெண்டவர் அரசுக்கு எதிராகப் புரட்சி செய்தவர். புடிபட்டுப் போச்சு!

அவரப் புடிக்கேலாமல் பேச்சே அரசாங்கத்தாலை அதிலேம் ஜீ.ஜீ.பொன்னம்பலந்தான் சாதிச்சார். அது பெரிய கதை! இப்ப உபகண்டத்திலை ஜெயலலிதா அம்மையாரை என்ன 'பாடெல்லாம் படுத்திச்சினம் உந்தச் சட்டத்தாலை சட்டம் என்கையில்? எண்டொரு படமும் அக்காலத்திலை வந்தது.

அதிலை தேங்காய் சீனிவாசன் எண்ட நகைச்சுவை நடிகர் கடைசிலை மரச்சட்டமொண்டைக் கையிலை வைச்சுக் கொண்டு சட்டம் என் கையிலெண்டு சொல்வார். அதுபோலை இண்டைக்கு சட்டம் யாற்றை கையிலை இருக்கெண்டு சொல்லவே வேணும். நஞ்சும் அமுதமும் இந்த மண்ணிலை தான் விளைஞ்சே எண்டது போலை எல்லாம் இஞ்சை தான்.

176 கோடிகளை ஏப்பம் விட்டுப் போட்டு ஒண்டுமில்லாதது போலை கொஞ்சப் பேரை வெளியிலை விட்டிட்டு இருக்கினம் இதுவெறும் 66 கோடிதானை! ஒரு கோடியும் இல்லாதவைக்கு ஆயிரம் கோடி எண்றதைக் கேள்விப் பட்டிருக்கிறம். உப்புடிச் சொல்லிச் சொல்லி ஒண்டுமில்லாத ஏழை எளியதுகளிலை கோடிக் கணக்கான நாட்டுக் கடன்களைச் சுமத்திப் போட்டு ஆட்சிக்கு வந்து போறவை அடிச்சுக்கொண்டு போய்ச் கொண்டிருக்கினம்.

உலகிலேயே மிக அதிகமான முதலீட்டைச் செலவு செய்து அதைவிடப் பத்து மடங்கு கூட உழைக்கிற தொழில் மக்களிட்டை வாக்கை விலைக்கு வாங்கிற தொழிலாத் தானே இருக்கு? பணம் பதாளம் வரையும் பாயுமெண்டு எந்தப் புண்ணியவான் சொன்னானோ அவன்ர வாய்க்கும் இந்தப் பணத்தைப் போட்டுத் தான் அடைக்க வேணும்.

கடைசியா இதுக்கெல்லாம் காலமாட்டுப் பட்டுச் சட்டத்தாலை செய்யாதது எதுவுமில்லையேண்டு கெட்ட பேரை எடுத்தேதானை கண்ட மிச்சம் என்ன நான் சொல்லுறே சொல்லுங்க பாப்பம்..

# ஐ.தே.க.வினால் பௌத்தமதம் இழிவுபடுத்தப்படுகின்றது

### - முன்னாள் அமைச்சர் குற்றச்சாட்டு -

(கொழும்பு)

ஐ.தே.க. அரசினால் பௌத்த மதம் இழிவுபடுத்தப்படுகின்றது. இதனை பௌத்தர்களாகிய எங்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதென நாடாளுமன்ற அலுவல்கள் முன்னாள் அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தேசிய அரசிலிருந்து வெளியேறுவது தொடர்பில் எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் நிறைவடைவதுடன் கலைப்பதானது சாதாரண விடயமாகும். அவ்வாறு கலைக்கப்பட்டால் தேர்தல் நடத்தப்பட்டு மீண்டும் உறுப்பினர்களை தெரிவு செய்வதே வழமையாகும்.

இதற்கு மாறாக விசேட ஆணையாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதானது ஏற்றுக்கொள்ள முடியாது ஒன்றாகும்.

அது மட்டுமல்லாது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடிமட்ட பலத்தை கட்டுப்படுத்துவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்துள்ள சதித்திட்டமே இது உள்ளூராட்சி சபை அமைச்சருக்கு பதவிக்காலத்தை நீடிப்பதற்கான அதிகாரம் இருக்கின்ற நிலையில் இவ்வாறு செய்வதானது அசாதாரணமாகும்.

நாங்கள் தேசிய அரசிலிருந்து விலகுவதற்கு இது பிரதான காரணமாகும். இதற்கு எதிர்ப்பை நாங்கள் வெளிப்படுத்துவதுடன் உடனடியாக தேர்தலுக்குச் செல்ல அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

ஊழல் மோசடி என்று கூறி அரசியல் பழி வாங்கல்களில் ஈடுபட்டு வருகின்ற அரசு தற்போது பௌத்த குருமார்களையும் இந்தப் பட்டியலில் சேர்த்துள்ளது.

அண்மையில் தியவத நிலமேவை இலஞ்சல் ஊழல் தடுப்புப் பிரிவில் ஆஜராகுமாறு தெரிவித்திருந்தனர். இராகமையில் விகாரை ஒன்றில் யானை கொன்று புதைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து நிலத்தை தோண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனால் பிக்குமார்களை அரசு கள்வர்கள் என்றும், விகாரைகளை - விலங்குகளைக் கொல்வோர் என்றும் சித்தரிக்க முயற்சிக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் பௌத்த மதத்தை இழிவுபடுத்தப்படுகின்ற செயற்பாடுகளாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மலேசிய பிரதமரின் பிரதிநிதி ஜனாதிபதியுடன் சந்திப்பு



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள மலேசிய பிரதமரின் விசேட பிரதிநிதி செரி உடமா சாமி வேலு தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தனர்.

இலங்கையின் பல பிரதேசங்களில் கூட்டு வியாபாரங்கள் மற்றும் முதலீடு செய்தல் என்பவை தொடர்பில் ஆர்வம் காட்டிய மலேசிய பிரதமரின் விசேட பிரதிநிதி உட்பட குழுவினர் அது தொடர்பான தமது கருத்துக்களை ஜனாதிபதியுடன் பகிர்ந்து கொண்டனர்.

இக்குழுவினர் கொழும்பு unirail திட்டம் கொழும்பு - கண்டி அதிவேக பாதை நிர்மாணம் கொழும்பிலிருந்து கட்டு நாயக்க விமானங்களுக்கு எரிபொருள் விநியோகத்திற்கான எண்ணெய் குழாய்கள் அமைத்தல் போன்ற பாரிய திட்டங்களை ஆரம்பிக்க இதன் போது இக் குழுவினர் ஆர்வம் காட்டியமை குறிப்பிடத்தக்கது.

## ஐந்தில் ஒரு குழந்தை நிறைகுறையுடன் பிறக்கிறது

### - ஊடக அமைச்சர் தெரிவிப்பு -

(கொழும்பு)

ஒரு வருடத்தில் நான்கு இலட்சம் பிள்ளைகள் பிறந்தாலும், அவற்றில் ஐந்தில் ஒரு குழந்தை குறை நிறையுடையதாக பிறப்பதாக தகவல் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசனைப் பொதி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

போசனைப் பொதிகளின் மூலம் தாய்மார்களின் போசனை மட்டத்தினை அதிகரிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அரசாங்கத்தினால் வழங்கப்படும் இப்போசனைப் பொதி கட்சி பேதங்கள் எதுவும் பாராமல் வழங்கப்படுவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

30. மனி மாலை ஒன்றில் கறுப்பு நிற மணிகளும், சிவப்பு நிற மணிகளும், மாறி மாறி கோர்க்கப்பட்டன. முதலாவது மணி கறுப்பாகும். மாலையில் 24 சிவப்பு மணி உள்ளன. எனின் மாலையில் உள்ள மொத்த மணிகள் எத்தனை?

1) 48  2) 49  3) 47

(06) கட்டத்தில் உள்ளவற்றுடன் தொடர்புடைய விடையை தெரிந்து கோடிடுக

31.

| |
|---|
| மா வீ<br>து<br>க மு |

1) உயிர் எழுத்துக்கள்
2) மெய் எழுத்துக்கள்
3) உயிர் மெய் எழுத்துக்கள்

32.

| |
|---|
| படகு<br>தூண்டில்<br>மீன் |

1) கெத்தன்
2) செம்படவன்
3) கொல்லன்

33. 2014ஆம் ஆண்டு யூன் மாதம் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனின் 2015ஆம் ஆண்டு யூன் 1ஆம் திகதி என்ன கிழமை?

1) ஞாயிற்றுக்கிழமை  2) சனிக்கிழமை  3) திங்கட்கிழமை

34. ஒரு சாக்கு புல்லை 5பசுக்கள் 5நாட்களில் உண்ணும் எனின் ஒரு பசு ஒரு சாக்கு புல்லை எத்தனை நாட்கள் உண்ணும்?

1) 25நாட்கள்  2) 5நாட்கள்  3) 1நாள்

35. வகுப்பு ஒன்றில் 38 மாணவர்கள் உள்ளனர். அவர்களில் 6பேர் திங்கட்கிழமை வரகை தரவில்லை திங்கட்கிழமை வருகை தராதவர்களில் அரைவாசி மாணவர்கள் செவ்வாய்க்கிழமை வருகை தரவில்லை எனின் செவ்வாய்க்கிழமை பாடசாலைக்கு வந்த மாணவர்கள் எத்தனை பேர்?

1) 35பேர்  2) 32பேர்  3) 37பேர்

36. கிராமத்து சிறுவர்களை மாலை வேளையில் அதிகளவில் காணக்கூடிய இடம்

1) வயல்வெளி  2) மைதானம்  3) சந்தை

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01) 01. ஆனந்தத்தோடு  2. நாட்டம், விருப்பம்  3. உங்களைப் போன்ற குழந்தைகளும்
4. நான்  5. மடக்கேறு  6. மழைத்துளிகளில் நனைய  (02) 7. ஒளிந்து  8. மின்விசிறியை
9. சிகைக்காய்  (03) 10. பிழை  11. பிழை  (04) 12. படையுடன்  13. வாழ்த்தி  14. பொறாமை
(05) 15. தோகைமயிலே, கற்பகத்தருவே சாய்ந்தாடு  16. பட்டம் பெற்ற போதும், ஒழுக்கிக்கொள்ள வேண்டும்
(06) 17. I am reading book  (07) 18. அமெரிக்காவில்  19. காடுகள்  20. பிளெஸ் பஸ்கால்
(08) 21. நாம் தேசியக்கொடியை வரைவோம்  22. தயவு செய்து படத்தை பார்க்கவும்  (09) 23. c  24. i
25. a  (10) 26. மட்ட வதுர டிக்கக் தென்ன  (11) 27. கைகளை மேலே உயர்த்துங்கள்
(12) 28. அணிந்துரை  29. வேட்பாளர்  30. பவளவிழா  (13) 31. உயர்திணை, பன்மை, படர்க்கை, பலர்பால்
(14) 32 - 34 வரை விரும்பிய வசனம்  (15) 35. IV  36. 4.5  37. 9km  38. ரூபா 525.00
39. 1100, 1101  40. 10cm²  41. வருடம் 29 மாதம் 05  42. 3.30  43. 14:00
44. நிழற்குக  45. 825  46. 28m 50cm  47. Z  (16) 48. 2  49. 1
50. 4  51. 3  52. 3  53. 3  54. 4  55. 1  56. 2  57. 3  58. 2  59. 2

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்


# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01) தொடக்கத்தில் உள்ள உருவில் குறைவாக இருக்கும் பகுதிக்கு பொருத்தமான விடையை தெரிக

01.



1)  2)  3)

02.



1)  2)  3)

(02) தரப்பட்ட உருக்களில் இரண்டு ஒத்தவை அந்த இரு உருக்களும் எவை எனத் தெரிக


03.



A  B  C

1) A யும், B யும்
2) A யும், C யும்
3) B யும், C யும்


04.



A  B  C

1) A யும், C யும்
2) B யும், C யும்
3) B யும், A யும்

05. உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும்?




1) $\frac{1}{3}$  2) $\frac{1}{2}$  3) $\frac{1}{4}$

06. ராகுலனின் வயது 8வருடங்களாக இருக்கும் போது அவனின் தந்தையின் வயது 41 வருடங்களாகும். தற்போது தந்தையின் வயது 49வருடங்கள் எனின் தற்போது ராகுலனின் வயது யாது?

1) 21வருடங்கள்  2) 16வருடங்கள்  3) 18வருடங்கள்

07




உருவில் தரப்பட்ட செவ்வகவடிவத்தாளை முறிகோடுகள் வழியாக இரண்டாக மடித்து புள்ளிக்கோடு வழியே வெட்டிய பின்னர் கிடைக்கும் முக்கோணிகளினதும் நாற்பக்கல்களினதும் எண்ணிக்கை முறையே

1) 3உம், 2உம்  2) 3உம், 1உம்  3) 4உம், 2உம்

08. கோலத்திற்கு ஏற்ப அடுத்து வரும் உரு எது?




09. பாபுவினதும், பிரபுவினதும் இணைபிரியாத நட்பை காட்டும் உவமை தொடர் எது?

1) கிரியும்பாம்பும் போல 2) நகமும்சதையும் போல 3) மலையும்மடுவும் போல


10. அண்ணா எல்லே விளையாட்டைப் பற்றி கூறுவீர்களா இவ்வாக்கியத்தில் பயன்படுத்த வேண்டிய நிறத்தற்குறிகள் எவை?

1) மேற்கோற்குறி, வினாக்குறி 2) வியப்புக்குறி, வினாக்குறி 3) வினாக்குறி, முற்றுப்புள்ளி

11. வட்டவடிவான மைதானத்தை சுற்றி 10கம்பங்கள் நடப்பட்டன. இரண்டு கம்பங்களுக்கிடையில் 3 சிறிய கொடிக்கம்பங்கள் நடப்பட்டன மைதானங்கள் சுற்றி வர நடப்பட்ட சிறியகொடிக் கம்பங்கள் எத்தனை?

1) 27 2) 33 3) 30

12. உரு 1இல் உள்ள வட்டவடிவக் கடதாசியை உரு 2இல் உள்ளவாறு நான்காக மடித்து உரு 3இல் உள்ள நிழற்றிய பகுதியை வெட்டி எடுத்து மிதிப்பகுதியை விரிக்கும் போது கிடைக்கும் வடிவம் யாது?




13. அ,ஆ,இ,ஈ என்பது ABCD என அமையுமாயின் ஐ ஒ ஓ என்பது எவ்வாறு அமையும்

1) KKL 2) IJK 3) GHI

(03) விமலி, பர்ஹா, அனிஷா, மேரி ஆகிய நான்கு மாணவர்களும் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகள் கீழ் தரப்பட்டுள்ளது

பர்ஹா மேரியை விட 10புள்ளிகள் குறைவாக பெற்றாலும், விமலியை விட 15புள்ளிகள் கூடுதலாக பெற்றாள். அனிஷா மேரியை விட 5புள்ளிகள் கூடுதலாக பெற்றாள். விமலி பெற்ற புள்ளி 65ஆகும்.

14. அனிஷா பெற்ற புள்ளிகள் எத்தனை?

1) 90புள்ளிகள் 2) 95புள்ளிகள் 3) 80புள்ளிகள்

15. நான்கு மாணவர்களும் பெற்ற மொத்த புள்ளிகள் எத்தனை?

1) 330புள்ளிகள் 2) 300புள்ளிகள் 3) 315புள்ளிகள்


16. 

இப்பறவை உள்ள காசுத்தாளின் பெறுமதி யாது?

1) 100ரூபா
2) 5000ரூபா
3) 1000ரூபா

17. பொருத்தமற்ற உவமானத்தை கொண்ட விடையை தெரிந்து கோடிடுக?

1) ஓடம் போல வெண்ணிலா தோன்றியது 2) எறும்பு போல வேகமாகச் சென்றான்
3) தூண் போன்ற விழுதுகள் கிளைகளை தாங்கின

18. 

சவர்க்காரங்கள் அடுக்கப்பட்ட அமைப்பு காட்டப்பட்டுள்ளது. இங்குள்ள சவர்க்கார கட்டிகள் எத்தனை? 1) 18 2) 15 3) 21



19. ஒலிம்பிக் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் 30ஆவது ஒலிம்பிக் போட்டி 2012ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்றது. எனின் 24ஆவது ஒலிம்பிக்போட்டி எத்தனையாம் ஆண்டு நடைபெற்றது?

1) 2006ஆம் ஆண்டு 2) 1996ஆம் ஆண்டு 3) 1988ஆம் ஆண்டு

20. 2015ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வெள்ளிக்கிழமையாகும். 2015ஆம் ஆண்டில் உள்ள வெள்ளிக்கிழமைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 52 2) 53 3) 54

(04) 21ஆம், 22ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள பந்தியில் உள்ள இடைவெளிக்கு பொருத்தமான சொல்லை தெரிந்து கோடிடுக

நான் பாடசாலை செல்லும் வழியில் கண்பார்வையற்ற ஒருவர் .................... வீதி ஓரமாக நிற்பதை கண்டேன். நான் வீதியை ...................... உதவினேன் அவர் எனக்கு நன்றி கூறினார்.


21. முதல் இடைவெளிக்கு பொருத்தமான சொல் யாது?


1) பயணப்பொதியுடன் 2) கையடக்க தொலைபேசியுடன் 3) வெள்ளைப்பிரம்புடன்

22. இரண்டாவது இடைவெளிக்கு வரவேண்டிய சொல் யாது?

1) கடக்க 2) திறக்க 3) மாற்ற

23. தாயக்கட்டை ஒன்றின் இரு நிலைகள் தரப்பட்டுள்ளன. இந்தத் தாயக்கட்டையின் மற்றும் ஒரு நிலையை காட்டும் உரு எது?




24. 


ஒரே அளவான 4 செவ்வக அட்டைகளை ஒன்றோடு ஒன்று ஒட்டி இவ்வுரு அமைக்கப்பட்டுள்ளது. செவ்வகஅட்டை ஒன்றின் நீளம் 6cm எனின் செவ்வகத்தின் அகலம் யாது?

1) 2cm
2) 1cm
3) 3cm


25. கவி, ரவி, தேவி, சுமி ஆகிய நால்வரும் சகோதரர்கள் ரவியை விட தேவி மூத்தவர் ரவியை விட கவியும், சுமியும் இளையவர்கள் இவர்களில் வயதில் குறைந்தவர் யார்?

1) கவி 2) சுமி 3) கூறமுடியாது


26. "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்ற பழமொழியின் கருத்து

1) ஒற்றுமை 2) நன்றி மறவேல் 3) தேசப்பற்று

27. சம்சாரம் என்ற சொல்லை குறிக்கும் குறியீடு யாது?




(05) வெற்றுக் கூட்டுக்கு வரவேண்டிய பகுதியை தெரிவு செய்க

28. 


29.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | C | D | E | F | G | | | J | K |
| E | D | G | F | I | H | | | M | L |

1)

| | |
|---|---|
| H | I |
| K | J |

2)

| | |
|---|---|
| G | H |
| J | I |

3)

| | |
|---|---|
| H | K |
| I | J |

# மாணவி மீதான கொடூர கொலையை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது

## வவு.விவசாயக் கல்லூரி மாணவர்கள் கண்டனம்

யாழ்ப்பாணத்தின் புங்குடுதீவு மாணவியான சிவலோகநாதன் வித்தியா மீதான படுகொலை எமது நெஞ்சத்தை பெரும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அதிலும் குறித்த மாணவி பாடசாலைக்குச் செல்லும் வேளையில் பாடசாலை சீருடையில் வைத்து காமவெறியர்களினால் கொடூரமாக கொலைசெய்யப்பட்டமையானது எவராலும் பொறுத்துக்கொள்ளமுடியாத மோசமான செயல் என தெரிவிக்கும் வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர்கள் இதை வன்மையாக கண்டித்துள்ளனர்.

இத்துன்பியல் நிகழ்வானது வடமாகாணத்தில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் வன்முறைகளின் உச்சநிலையை உணர்த்தியுள்ளது.

கடந்த சிலவருடங்களாக போதைவஸ்து பாவனை, பாலியல் பலாத்காரங்கள், படுகொலைகள், கொள்ளைகள், குழுமோதல்கள, விபச்சாரம் என வன்முறைகள அதிகரித்துச் செல்லுகின்றபோதும் அதற்கு உரிய தீர்வினைப் பெற்றுக்கொள்ள அதிகாரம் உள்ளவர்கள் விரும்பம் காட்டாத நிலைமையே காணப்படுகின்றது வடமாகாணசபை, பொலிஸ்நிர்வாகம் என்பன இதற்கு விதிவிலக்கல்ல என்பதே எமது கவலையை மேலும் அதிகரிக்கின்றது. எனினும் பொதுமக்களின் ஒன்றிணைவின்மூலம் ஒரு சுமூகமான, ஒழுக்கமுள்ள சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும் என்று நம்புவதாக தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்களின் அதீத ஆதரவோடு ஆட்சிப்பீடம் ஏறியுள்ள வடமாகாணசபை எமது மாணவ மாணவிகள் மற்றும் சிறுவர்கள், பெண்களின் பாதுகாப்பில் அதிக கவனம் எடுத்து செயற்படவேண்டும். வெறுமனே வெற்றுக்கோசங்களுடனும், பிரேரணைகளை நிறைவேற்றுவதுடனும் நின்றுவிடாது தமிழ் மக்களின் பாதுகாப்பு குறித்து உரிய சிறப்பான தீர்வுகளை வடமாகாணசபை கைக்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

பத்திரிகைகளில், வடக்கில் அதிகரித்துள்ள போதைவஸ்து பாவனை, பாலியல பலாத்காரம்,குழுமோதல்கள் தொடர்பான செய்திகள் அதிகமாகவே வலம்வருகின்றன. அவற்றின் மீது ஊடகங்கள் காட்டும அக்கறை கூட பொலிஸார் காட்டுவதில்லை. இதன் காரணமாகவே குற்றமிழைப்போர் துணிச்சலுடன் செயற்படுகின்றனர்.

தற்போது குற்றத்திற்கெதிராக மக்கள் ஒன்றிணைய ஆரம்பித்திருக்கிறார்கள். இதன்மூலம் வன்முறைகளுக்கு முடிவு கட்டப்படும் என்று நம்புகின்றோம். வடமாகாணசபை, பொலிஸ் நிர்வாகம் மற்றும் அதிகாரமுள்ளவர்கள் வடக்கின் பண்பாட்டையும் சுமுகமான வன்முறையற்ற சமூகத்தை உறுதிப்படுத்த மக்களுடன் ஒன்றிணைய வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளனர்.

## கண்டனப் போராட்டம் இன்று யாழில்

பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு இன்று முற்பகல் 10.00மணிக்கு யாழ்.நகரில் பிரதான பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பாக புங்குடுதீவு மாணவி வித்தியாவின் வன்புணர்வுப் படுகொலையைக் கண்டித்து வெகுஜன அமைப்புக்களை ஒன்றிணைத்து கண்டனப போராட்டத்தினை நடத்த தீர்மானித்துள்ளது. தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் போராட்டங்களில் சில சம்பவங்கள் பொது மக்களுக்கு அதிருப்தி தரும் நிலையில் உள்ளன.

இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்களுககு விரைவாகவும் உரிய முறையிலும் தீர்வு கிடைக்கவும் குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனையை வலியுறுத்தியும் மேற்படி போராட்டம் நடத்தப்படவுள்ளதாக அமைப்பாளர் யோகமலர் அறிவித்துள்ளார். எனவே இப் போராட்டமானது பெண்கள் சார் அமைப்புக்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களுடன் கலந்துரையாடப்பட்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தை மக்கள் பங்கேற்புடன் வெற்றிபெறச் செய்ய அனைவரையும் ஒன்றிணையுமாறு பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

# 150 ஆவது ஆண்டில் கால்பதிக்கும் இணுவில் இந்துக் கல்லூரி




**யாழ். இணுவில் இந்துக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்றும், நாளையும், நாளை மறுதினமும் (சனி, ஞாயிறு, திங்கள்) கல்லூரி வளாகத்தில் கொண்டாடப் படுகின்றது. அதனை முன்னிட்டு இவ் வாக்கம் வரையப்படுகின்றது.**

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் இணுவில் திருவூரில் 150 வருடங்களைப் பூர்த்தி செய்து பழம் பெருங்ககல்லூரியாக இணுவில் இந்துக் கல்லூரி விளங்கி வருகின்றது. திண்ணைப் பள்ளிக்கூடமாக ஆரம்பிக்கப்பட்டு பின் சைவப்பிரகாச வித்தியாசாலையாக வளர்ந்து இன்று இந்துக் கல்லூரியாக மிளிர்ந்து நிற்கின்றது.

அறியாமையை அகற்றி அறிவொளி பரப்பும் இக் கல்லூரி மாணவர்கள் ஒழுக்கம், கடமை தவறாமை, கட்டுப்பாடுகளுக்கு இசைந்து ஒழுகுதல் முதலிய நற பண்புகளைப் பெறவும் வழிகாட்டி வருகின்றது. “உழைப்போம் உயர்வோம்” என்ற மகுட வாசகத்தைக் கொண்ட இக்கல்லூரி இலங்கைத் தீவில் விளங்கும் சைவத் தமிழ்ப் பாடசாலைகளில் வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு அடுத்த மூத்த பாடசாலையாகப் பதிவு பெற்ற வரலாற்றைக் கொண்டதாகும்.

ஆறுமுகநாவலர் சைவமும் தமிழும் தழைக்க என 1848 இல் வண்ணார் பண்ணையிலும் 1864 இல் சிதம்பரத்திலும் பாடசாலைகளை நிறுவினார். இணுவில், கோப்பாய், கந்தர்மடம், மாதகல், புலோலி முதலிய ஊர்களில் தமது சிஷ்யர்களுக்கு கட்டளை இட்டு சைவத் தமிழ்ப் பாடசாலைகளை நிறுவச் செய்தார் ஊர்கள் தோறும் சைவத்தமிழ் பாடசாலைகளை நிறுவ வேண்டும் என்ற நாவலர் பெருமானின் பேராவல் பூர்த்தியாக அவரது மாணவர்களும் சகபாடிகளுமாக பலா தமது கிராமங்களில் திண்ணைப் பள்ளி களைத் தொடங்கி சமய நூல்களையும் கருவி நூல்களையும் இலவசமாகக் கற்பித்து வந்தார்கள். இவ்வாறு இணுவிலிலும் நாவலரது மாணவர்கள் ஆகிய இணுவிலைச் சேர்ந்த சித்தானந்த பானு, நடராசா ஐயர், நாவலரின் நண்பர் மு.வெங்கடாசலஐயர், சுப்பிரமணியர், சரவணச் சட்டம்பியார், சின்னத்தம்பி சட்டம்பியார் ஆகியோரால் திண்ணைப் பள்ளிகள் தொடக்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்தன.

இவ்வகையில் 1860 களில் இணுவிலில் திண்ணைப் பாடசாலை ஒன்றை அமைத்து வெங்கடாசல ஐயர் நடாத்தி வந்தார். சிறிது காலத்தின் பின்னர் ஐயர் உறவினர்களைச் சந்திப்பதற்காகவும் தலயாத்திரையின் பொருட்டும் இந்தியா பயணமானார். இதன் காரணமாக இத் திண்ணைப் பாடசாலையைப் பொறுப்பேற்ற இணுவையூர் அம்பிகைபாகரின் செயற் திறமையால் இப்பாடசாலை வித்தியாசாலை என வளர்ச்சி கண்டது.

இப்பாடசாலையின் சிறப்பைக் கண்ணுற்ற பலரும் இதனை அம்பிகை பாகர் பள்ளிக்கூடம் என அழைக்கலாயினர்.

1903 இல் அம்பிகைபாகர் இறக்க இளையதம்பி என வழங்கிய இணுவில் சந்திரசேகரம் என்பவர் தலைமை ஆசிரியரானார். இவர் 1927 இளைப்பாற அம்பிகை பாகரின் மகன் வைத்திலிங்கம் தலைமை ஆசியராக 1941 இல் இப் பாடசாலை இந்து போர்ட்டிடம் கையளிக்கப்பட்டது. முகாமையாளராக எஸ். அட்சலிங்கமும், தலைமையாசிரியராக நீர்வேலிப் பண்டிதர் தம்பையாவும் நியமிக்கப்பட்டனர்.

தம்பையா பண்டிதருக்குப் பின் குப்பிளான் இராமலிங்கம், இணுவில் சி.கனகசுந்தரம், நீர்வேலி பு.சின்னத்துரை, திருநெல்வேலி கனகரத்தினம், புங்குடுதீவு நல்லதம்பி, இணுவில் திருமதி வே.ஆயிலியம், வண்ணார்பண்ணை அரியநாயகம், இணுவில் பண்டிதர் இ.இராசலிங்கம், சுது மலை திருமதி ச.ஆறுமுகராசா ஆகியோர் பாடசாலையின் முதல்வர்களாகக் கடமையாற்றினர்.

இப்பாடசாலையில் உயர்தர வகுப்புகள் ஆரம்பமாக வேண்டும் என்ற ஆவலினால் பலரது முயற்சியாலும், நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கம் செய்த சிபார்சினாலும் இப்பாடசாலை 1978 இல் மகா வித்தியாலயமாகத்தரம் உயர்த்தப்பட்டது. 1985 முதல் எஸ்.எம்.மூர்த்தி அதிபராகக் கடமையாற்றினார். இவரைத் தொடர்ந்து 1987 முதல் 1991 வரை ஆ.கமலநாதன் அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றார். 1991 இல் சு.தம்பித்துரை அதிபராகப் பதவி ஏற்றார்.

இக் கல்லூரியின் பழைய மாணவனும் பிரதேச கல்விப் பணிப்பாளருமாக விளங்கிய இரா.சுந்தரலிங்கம் அவர்களின் பெருமுயற்சியால் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் திகதி தொடக்கம் இணுவில் இந்துக் கல்லூரி எனக் கல்லூரி அந்தஸ்துப் பெற்றது. சு.தம்பித்துரையைத் தொடர்ந்து க.கனகராசா 1998 இல் அதிபராகக் கடமை ஏற்றார்.

தொடர்ந்து 2002 இல் செ.குபேரநாதன் அதிபர் பொறுப்பேற்று 2003 இல் உதவிக் கல்விப்பணிப்பாளர் நியமனம் பெற்றுச சென்றார்.2003 இல் அதிபராகக் கடமையேற்ற விச்சிதானந்தன் 2008 வரை பணியாற்றினார்.

2009 இல் சி.கிருபாகரனும் அவரைத் தொடர்ந்து சு.சண்முககுலகுமாரனும் அதிபர் பதவி வகித்தனர். 2012 ஒக்டோபரில் தற்போதைய அதிபர் மு.செல்வஸ்தான் அதிபர் பொறுப்பேற்றுக் கொண்டார். இன்றைய அதிபர் தலைமையிலே கல்வித் துறையிலும், விளையாட்டு, நாவன்மை, சித்திரம், கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி எனப் பல துறைகளில் வெற்றிநடை போடுகின்ற ஒரு கல்லூரியாக இணுவில் இந்துக் கல்லூரி மிளிர்ந்து வருகின்றது.

பாடசாலை சமூகத்துடன் இணைந்து பணியாற்றுகின்ற இவரது சிறப்பால் பல சாதனைகள் புரியப்பட்டு வருகின்றன. அவைகளுக்கு மகுடம் வைத்தாற்போல் பாடசாலை ஆரம்பித்து 150 ஆவது நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் நிறைவு மண்டபமாக இருமாடிக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இணுவில் இந்துக் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின்மூலம் கல்லூரியில் பற்றுக்கொண்ட பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், நண்பர்கள், வெளி நாட்டில் உள்ள கல்லூரியின் உறவுகள் யாவரும் சேர்ந்து இக்கட்டடத்தை அமைப்பதற்கு உதவி புரிந்துள்ளனர்.

2007 ஆம் ஆண்டு வி.சச்சிதானந்தன் அதிபராக இருந்த காலத்தில் சைவப்பிரகாசம் என்ற நூல் 143 ஆவது அகவை நிறைவு மலராக வெளியிடப்பட்டது. இவ்வாண்டு அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் 150 ஆவது நிறைவு மல ராக ‘இணுவில் இந்து’ எனும் நூல் வெளியிடப்படுகின்றது. இவ்வெளியீடுகள் கல்லூரியின் வரலாற்றுப் பதிவுகளாக அமைகின்றன.

கல்லூரியின் தலைமைப் பொறுப்பேற்றிருந்த ஒவ்வொரு அதிபர்களின் காலத்திலும் கல்லூரி பௌதீக வள ரீதியாகவும் மாணவரின் பெறுபேறுகள் மற்றம் அடைவு ரீதியாகவும், வளர்ச்சியடைந்து வந்துள்ளது. பழம் பெருமையுடன் புகழ் பூத்து விளங்கும் கல்லூரி மாணவர்களது செயற்பாட்டிற்கு களமாக விளங்குகிறது. கல்வி, விளையாட்டு மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளில் கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களில் பல சாதனைகளை கடந்த காலங்களில் நிகழ்த்தியுள்ளது. இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் பலர் பல்வேறு துறைகளிலும் பிரகாசித்து வருகின்றனர்.

இணுவில் கிராமத்தின் கண்ணாக விளங்கும் இக்கல்லூரி நீண்டதொரு கல்விப் பாரம்பரியத்தினூடாக ஆயிரமாயிரம் நல் மாணாக்கர்களை உருவாக்கி வருகின்ற கலாபவனமாக விளங்குகின்றது.

சமூகக் கட்டுமானத்தின் பல்பரிமாண அம்சங்களை ஒன்றிணைத்து கால ஓட்டத்தில் ஏற்படுகின்ற சிந்தனை மாற்றங்களை அனுசரித்து வாழ்வியலுக்குப் பொருத்தப்பாடுடைய அறிவியல் விற்பன்னர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள கல்லூரியானது மாணவர்கள் தம் வாழ்வில். எதிர்நோக்கும் சவால்களை சத்திய வழி நின்று முகங்கொடுத்து வெற்றி கொள்ளும் தேர்ச்சி மிக்கவர்களாக ஆக்குவதை தனது தொலைநோக்காகக் கொண்டிருக்கிறது.

# குயாங்கில் கன மழை 9மாடிக் கட்டடம் தரைமட்டம்



சீனாவில் தென்மேற்குப் பகுதியில் குயாங் நகரில் 9 மாடி கட்டடம் இடிந்து தரைமட்டமானது. இந்த விபத்தில் 21 பேர் காணாமற் போயுள்ளனர்.

குயாங் நகரில் சில நாட்களாக கன மழை பெய்து வருவதனால் மலைப்பிரதேசமான அங்கு பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 9 மாடி கட்டடம் இடிந்தது. அதில் 35 வீடுகள் இருந்தன.

கட்டடம் சரியத் தொடங்கியவுடன் வீடுகளில் இருந்த மக்கள் வெளியே தப்பி ஓடிவிட்டனர். இது வரை 114 பேரை மீட்புப் படையினர் மீட்டுள்ளனர்.

ஆனால் 21 பேர் காணாமற்போயுள்ளதுடன் அவர்கள் கட்டட இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

# பின்லேடனுக்கு இந்தியர்கள் பண உதவி

பாகிஸ்தானில் பதுங்கியிருந்த பின்லேடனுக்கு இந்தியாவில் இருந்து பண உதவி வழங்கப்பட்டதாக அமெரிக்கா வெளியிட்ட ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது.

உலக நாடுகளை அச்சுறுத்திய அல்கொய்தா தீவிரவாத இயக்க தலைவர் பின்லேடன் பாகிஸ்தான் அபோதாபாத்தில் வீட்டில் பதுங்கியிருந்த போது அமெரிக்க அதிரடிப் படையால் 2011 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து பின்லேடன் வீட்டில் இருந்த ஆவணங்களை அமெரிக்க அதிரடிப்படை பறிமுதல் செய்தது. தற்போது அதை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.


அதில், இந்திய பைனான்சியர் ஒருவர் பின்லேடனுக்கு நிதி உதவி செய்துள்ளார். அவர் மதினாவை சேர்ந்தவர். அது குறித்து குறிப்பிட்டுள்ள பின்லேடன் மதினாவை சேர்ந்த இந்திய சகோதரர் ஒருவர் 2009ஆம் ஆண்டு ரூ.1 இலட்சத்து 20 ஆயிரத்து 500 வழங்கியதாக தெரிவித்துள்ளார்.

அதே போன்று மற்றொரு இந்தியர் ரூ.3 இலட்சத்து 35 ஆயிரத்தை 2009ஆம் ஆண்டில் வழங்கியிருப்பதாக மாதவாரியாக குறிப்பிட்டுள்ளார். இதுபோன்று பல நாடுகளைச் சேர்ந்தவர்களிடம் பெற்ற பண விவரங்கள் ஆவணங்களில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.



உலகச் செய்திகள்

# தலைசிறந்த ஹோட்டலாக புர்ஜ் அல் அரப் தேர்வு



சர்வதேச அளவில் தலைசிறந்த ஹோட்டலாக துபாயின் புர்ஜ் அல் அரப் ஹோட்டல் தொடர்ந்து மூன்றாவது முறை தேர்வு செய்யப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் உள்ள 'டெய்லி டெலிகிராப்' நாளிதழ் வாசகர்கள் மத்தியில் 20 அளவுகோல்களை அடிப்படையாக வைத்து நடத்தப்பட்ட சர்வே அடிப்படையில் இந்த தேர்வு நடைபெற்றது. லண்டனில் நடைபெற்ற விழாவில் இதற்கான விருது ஹோட்டல் நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டது. 650 மில்லியன் டொலர் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்ட இந்த ஹோட்டல் 1999இல் திறக்கப்பட்டது. இந்த ஆடம்பர ஹோட்டல், 322 மீற்றர் (1056 அடி) உயரமுள்ள கட்டடமாகும். கடற்கரையிலிருந்து 280 மீற்றர் தொலைவில் கடல் பகுதியில் இக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இவ்விடுதிக்குச் செல்வதற்கென கட்டப்பட்ட பாலம் ஒன்று இந்த ஹோட்டலை நிலப்பகுதியுடன் இணைக்கின்றது. துபாய் நகரத்தின் அடையாளச் சின்னங்களில் ஒன்றாக உலக அளவில் அறியப்பட்ட கட்டடமாக இது திகழ்கின்றது.

உலகின் மிகவும் சிறந்த சொகுசு ஹோட்டல் என்ற பட்டத்தை தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக தக்கவைத்துள்ள புர்ஜ் அல் அரப் ஹோட்டல், மத்திய கிழக்கு நாடுகளில் மிக சிறந்த ஹோட்டல் என்ற இடத்தையும் தொடர்ந்து ஒன்பதாவது முறையாக பெற்றுள்ளது. இந்த ஹோட்டல் உலகின் ஒரே ஏழு நட்சத்திர ஹோட்டல் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு இரவு தங்குவதற்கு குறைந்தபட்ச வாடகை ரூ 1 இலட்சத்திற்கு மேலாகும். சில ஆண்டுகளுக்கு முன் இந்த ஹோட்டலில் அமைந்துள்ள ஹெலிபேடில் டென்னிஸ் விளையாட்டு போட்டி நடத்தப்பட்டு உலகின் உயரமான இடத்தில் நடத்தப்பட்ட டென்னிஸ் போட்டி என்ற சாதனை படைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

# பேஸ்புக், டுவிட்டர், கூகுள் இணையங்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது ரஷ்ய அரசு

பேஸ்புக், டுவிட்டர் மற்றும் கூகுள இணையத்தளங்கள் தங்கள் நாட்டு சட்ட திட்டங்களுக்கு புறம்பாக நடந்து கொள்வதாக ரஷ்ய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதே நிலை நீடித்தால் எந்நேரத்திலும் இந்த மூன்று இணையத்தளங்களும் ரஷ்யா முழுவதும் முடக்கப்படும் என்றும் ரஷ்யா மிரட்டல் விடுத்துள்ளது.

இது குறித்து ரஷ்யாவின் இணைய பாதுகாப்பு அமைப்பின் செய்தி தொடர்பாளர் ராஸ்காம்னட்சார் கூறுகையில்,

மூன்று அமெரிக்க இணைய நிறுவனங்களுக்கும் எங்கள் நாட்டின் இணைய சட்ட திட்டங்களை மீறி வருவது குறித்து கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளோம். ரஷ்யாவிற்கு எதிரான கருத்துக்களை பரப்பி வரும் வலைப்பூ எழுத்தாளர்களுக்கு (bloggers) இம்மூன்று நிறுவனங்களும் ஆதரவு அளித்து வருகின்றன அரசுக்கு எதிராக செயறபடுபவர்களைப் பற்றி தகவல் தெரிவிக்குமாறு மூன்று நிறுவனங்களிடம் பலமுறை வலியுறுத்தியும், அவற்றை ஏற்க நிறுவனங்கள் மறுத்து வருகின்றன. இனியும் இது தொடர்ந்தால், மூன்று இணையத்தளங்களும் எந்த நேரத்திலும் முடக்கப்படலாம்.




என்று அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் இந்த மிரட்டலுக்கு பதிலளித்துள்ள பேஸ்புக், ரஷ்ய அரசு கேட்டுள்ள பேஸ்புக் பயன்படுத்துபவர்களின் தகவல்களை சேகரித்து வருவதாக தெரிவித்துள்ளது. டுவிட்டர் நிறுவனமும், ரஷ்ய அரசின் கோரிக்கையை ஏற்று நடப்பதாகத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கூகுள், கடந்த 2014 ஆம் ஆண்டு ரஷ்ய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க, 5 சதவீத பயனர்களின் விவரங்களை கொடுத்துள்ளது.

மேலும், பாதுகாப்பு தொடர்பான அனைத்து சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டே நாங்கள் செயறபட்டு வருகின்றோம் என்றும் கூகுள் தெரிவித்துள்ளது.

# பசுமை நகரத்திட்டம் துபாயில் உருவாக்க ஏற்பாடு

பாலைவனத்தில் சோலைவனமாக துபாயில் துபாய் லேண்ட் பகுதியில் சூரிய சக்தியில் செயற்படும் சஸ்டைனபில் சிட்டி sustainable-city எனும் பசுமை நகரம் உருவாக்கப்பட உள்ளது. 50 இலட்சம் சதுர அடியில் அமைய உள்ள இந்நகரத்தில்10 ஆயிரம் மரங்களோடு 500இற்கும் மேற்பட்ட பசுமை வீடுகள்,பசுமை பள்ளி,ஆராய்ச்சி கூடம், அருங்காட்சியகம், சூரிய சக்தி நிலையம், விவசாய பண்ணைகள், புல் வெளிகள், கழிவு நீர் மறுசுழற்சி என 100 சதவீதம் சுற்றுப்புற சூழலுக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்படவுள்ளது.

மேலும் புகழ் பெற்ற இண்டெர்காண்டினெண்டல் ஹோட்டல் நிறுவனம் 170 அறைகளோடு இங்கு மிகபெரிய ஹோட்டலை 2017இல் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது.

100 சதவீத சோலர் சக்தியில் இயங்கும் உலகின் முதல் ஹோட்டலாக திகழும் இங்கே உள்ள வாகனங்களும் சூரியஒளியில் இயங்கும். இப்பணிகள் நிறைவு பெறும் போது இப்பகுதி முழுவதும் பசுமையாக காணப்படும். துபாய் உலக மக்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது. இந நகரம் மிக புதுமையாக அமையும் உலகில் உள்ள சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்வதோடு இன்றைய சுற்றுப்புற சூழலுக்கு தேவையான நகரமாகும் என இத்திட்டத்தை செயற்படுத்தும் டயமண்ட் டெவலெப்பர்ஸ் தெரிவித்தனர்.

## பாவப்பட்ட .......

சென்ற ஜனாதிபதித்தேர்தலில் முஸ்லிம் மக்களின் செயற்பாட்டை நாம் முன்னுதாரணமாக கொள்ளவேண்டும். அந்தத் தேர்தலில் முஸ்லிம் புத்திஜீவிகள் மதத்தலைவர்கள் சமூகத்தலைவர்கள் செயற்பாட்டால் முஸ்லிம் கட்சிகள் மக்களின் முடிவிற்கு மண்டியிட்டதைப் போல மக்களும் இன்றிருக்கும் பாம்புகளும் உண்ணிகளும் பருந்துகளும் கோடரிக்காம்புகளாக இனியும் செயற்பட விடாமல் புதியபாதையில் பயணிக்க அது மக்களுக்கு பலன் அளிக்க கூடியவாறான விடயங்களை கட்டுரைகள், கருத்தரங்குகள், நேர்காணல்கள், தொலைக்காட்சிப் பேட்டிகள் மூலமாகவும் பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை கொண்டு செல்லவேண்டும்.

வெற்று கோசங்களாலும் வாய்வீச்சு பேச்சுகளாலும் நாம் 30 வருடங்கள் பின்னோக்கி சென்றுவிட்டோம். மீண்டுவர நாம் இதய சுத்தியுடன் செயற்பட்டாலே முடியும்.

# எகிப்திலும் ஒரு வித்தியா மீது கூட்டு வன்புணர்வு

எகிப்தில் வித்தியா என்ற யுவதியை காரில் கடத்திச் சென்று சுடலைக்குள் வைத்து 7பேர் கொண்ட குழு வன்புணர்வுக்குட்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




எகிப்தில் இருபத்தி இரண்டு வயது இளம் பெண் ஒருவர் பொருட்கள் கொள்வனவு செய்ய கடைக்குச்சென்று கொண்டிருந்த போது காரில் வருகை தந்த ஏழு இளைஞர்கள் அவரை கடத்திச் சென்று சுடலை ஒன்றுக்குள் வைத்து தொடர்ச் சியான கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தினர் இந்த குற்றங்களை புரிந்தவர்கள் பதினேழு வயது முதல் இருபது வயதானவர்கள் என தெரிவிக்க படுகின்றது.

இதில் காரினை ஓட்டிச் சென்ற இருபது வயது வாலிபர் மட் டும் பொலிஸாரிடமிருந்து தப்பிச்சென்றுள்ளதாகவும் அவரை கண்ட இடத்தில் கைது செய்யும் தீவிர தேடுதல் நடவடிக்கைகள் இடம பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# அமைதிச்சூழலை பாதுகாக்க வேண்டும்

## - சுசில் கோரிக்கை -



(யாழ்ப்பாணம்)

மாணவி வித்தியாவின் படுகொலை ஒரு தனிப்பட்ட பிரச்சினையே. உணர்ச்சிவசத்தில் ஏற்படும் கலகங்கள், கலவரங்களின் மூலம் தென்பகுதியிலிருந்து எந்த விதமான பிரச்சினைகளையும் பிரிவினைகளையும் ஏற்படுத்தாது. அவ்வாறு ஏற்படாத வகையில் பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பு எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கண்டிப்பாக எமக்குத் தெரியும் 30 வருட யுத்தப் பாதிப்புக்களை அனுபவித்த மக்கள் அது மீண்டும் ஏற்பட அனுமதிக்க மாட்டார்கள். ஆனால் அவ்வாறான தற்போதுள்ள சுமுகமான சூழலை பாதுகாக்க வேண்டியது எமது கடமை.

இது போன்ற கலவரங்கள் மீண்டும் ஏற்படாதிருக்க வேண்டியது முக்கியமான ஒரு விடயம். சமாதானத்திற்கு களங்கம் ஏற்படாத வகையில் அமைதி பேணப்பட வேண்டும்.

இத் துக்க சம்பவம் தொடர்பில் பொலிஸார் தமது நடவடிக்கையை மேற்கொள்வர். இவ்வாறான சம்பவம் குடாநாட்டில் மட்டுமல்ல, நாட்டில் எந்தப் பகுதியிலும் இடம்பெற இடமளிக்க முடியாது.

அதுமட்டுமல்லாது இக்குற்றமிழைத்தவர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு ஜனாதிபதியிடம் பரிந்துரைக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்ததுடன், இச்சம்பவத்தில் உயிரிழந்த மாணவியின் குடும்பத்தினருக்கு மிகுந்த கவலையையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக தெரிவித்துக் கொண்டார். (இ,25)

# பொதுநோக்கு மண்டபத்தில் இயங்கும் வளலாய் அ.மி.த.க பாடசாலை

(அச்சுவேலி)

அச்சுவேலி வளலாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை தற்காலிகமாக வளலாய் பொதுநோக்கு மண்டபத்தில் வசதிகளற்ற நிலையில் இயங்கிவருகிறது.

இப்பாடசாலையின் நிரந்தர கட்டடம் கடந்தகாலத்தில் ஏற்பட்ட போர் வன்முறைகளால் முற்றாகச் சேதமடைந்து காணப்படுவதால் தற்காலிகமாக பொதுநோக்கு மண்டபத்தில் கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. எனினும் வெகு விரைவில் நிரந்தர கட்டடத்தின் வேலைகள் ஆரம்பமாகி விரைவில் அங்கு கல்விச் செயற்பாடுகள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆகியும் இன்று வரை கட்டட வேலைகள் எவையும் ஆரம்பிக்கப்படவில்லை எனவும், இதனால் தமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைவதாகவும் மாணவர்களின் பெற்றோர் கவலை தெரிவித்ததுடன், சில பெற்றோர் தமது பிள்ளைகளை வேறு பாடசாலைகளுக்கு மாற்றும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே காலம்தாழ்த்தாது பாடசாலை கட்டட வேலைகளை உடன் ஆரம்பித்து மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் சீராக நடைபெற சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# கொலை சூத்திரதாரிகளை காப்பாற்றும் பிரயத்தனம்

## வி.ரி.தமிழ்மாறன் மீது கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்குடுதீவு மாணவியின் படுகொலையின் பின்னரான சூழலில் வி.ரி. தமிழ்மாறனின் செயற்பாடுகள் திருப்தியளிக்கவில்லை என புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் சதாசிவம் தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடாதிபதி வி.ரி தமிழ்மாறன் தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்தமை தொடர்பாக மகா வித்தியாலய அதிபர் சதாசிவம் கணேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

படுகொலை செய்யப்பட்ட மாணவி கல்வி கற்ற பாடசாலையான புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் கணேஸ்வரன் மேலும் தகவல் தருகையில் மாணவர்கள் அச்சத்திலிருப்பதாக குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் மேலும தெரிவிக்கையில்,

மாணவியின் படுகொலையுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் விடுதலை செய்யப்பட்டமை தொடர்பாக மக்களுக்கு பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

குறிப்பாக வி.ரி.தமிழ்மாறனின் செயற்பாடுகளில் மக்களுக்கு சந்தேகம் உள்ளது. சம்பந்தப்பட்ட கைதி விடுதலை செய்யப்பட்டமை தொடர்பாக அவர் புங்குடுதீவு மக்களுக்கு அளித்த விளக்கம் திருப்தியில்லை.

தற்போது மாணவர், மாணவிகள் அச்சமான சூழலில் வாழ்கிறார்கள் பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு வாரமொன்றை வடமாகாணசபை அறிமுகப்படுத்தியுள்ளபோதும் அதில் மாணவர்கள் முழுமையாக ஈடுபடுவார்களா என்று கூற முடியாது.

அது தொடர்பாக அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுடன் கூடி முடிவு எடுத்த பின்னரே விழிப்புணர்வு வாரத்தில் கலந்து கொள்ள முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

### மனித உரிமை...

இவ்வாறானதொரு சூழலில் நாட்டில் எப்பாகத்திலும் இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு மக்கள் ஆளாகக் கூடாது.

எனவே இவ்வாறான செயற்பாடுகள் தடுக்கப்படுவதுடன், தொடராமல் இருப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் இந்நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க பொது மக்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும் எனத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# பொறியிலிருந்து சுதந்திரக் கட்சியை காப்பாற்ற வேண்டும்

## டளஸ் அழகப்பெரும அழைப்பு



(கொழும்பு)

அமைச்சுப் பதவிகளை உதறிவிட்டு கௌரவத்தை காத்துக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வரையும் உதாரணமாகக் கொண்டு ஏனைய உறுப்பினர்களும் மனச்சாட்சியுடன் செயற்பட வேண்டும் என நாடாளுன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பு - நாரஹேண்பிட்டியில் உள்ள அபயராமயவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் பொறியிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீட்பதற்கு தேவைப்பாடு சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு இல்லையா? சுதந்திரக் கட்சி மீது உங்களுக்கு அக்கறை இல்லையா?

வரப்பிரசாதங்களையும், இதர நன்மைகளையும் தூக்கியெறிந்து அமைச்சுப் பதவிகளை வகித்த 4 ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை வரவேற்கின்றோம். அவர்கள் சுதந்திரக் கட்சியின் எதிர்காலத்திற்காக முன்னிற்கத் தயார் என்று கூறியுள்ளனர்.

குறித்த 4 பேருக்கும் வாழ்த்து தெரிவிப்பதுடன், அவர்களைப் போன்று சிந்தையைக் கொண்டு, ஏனைய உறுப்பினர்களும் மனச்சாட்சியுடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீது அக்கறை இருந்தால், ஏனைய உறுப்பினர்களும் இவர்களைப் போன்று துரித நடவடிக்கை எடுத்து அந்த அக்கறையை அரசியல் ரீதியாக நிரூபியுங்கள்.

இவர்கள் அரசாங்கத்தின் அமைச்சுப் பதவிகளை துறப்பதற்கு பிரதான காரணமாக உள்ளூராட்சி சபைகளின் நெருக்கடி அமைந்திருக்கிறது.

கடந்த வாரம் முழுவதும், ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்த ஒரு விடயமாக உள்ளூராட்சி சபைகளின் காலத்தை நீடிப்பதற்கு சுதந்திரக் கட்சி வேண்டுகோள் விடுத்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அது உண்மைக்குப் புறம்பான ஒரு தகவல் என்பதை இங்கு தெளிவுபடுத்துகின்றேன் என்று தெரிவித்தார்.

### வடக்கில்...

பேசியுள்ளதால் கூட்டணியாகவே இத்தேர்தலில் போட்டியிடவுள்ளோம்.

இம்முறை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நாடாளுமன்றத்திற்கு உறுப்பினர் ஒருவர் தெரிவாகுவது நிச்சயம் என அவர் தெரிவித்தார்.

பொதுத் தேர்தலை எதிர்நோக்கியுள்ள நிலையில் மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் தொடர்பில் ஆராயும் கூட்டம் நேற்று கிறீன் கிறாஸ் ஹோட்டலில் இடம்பெற்றது. இதில் 300 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டதுடன், எதிர்கால திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதையடுத்து செய்தியாளர் சந்திப்பும் இடம்பெற்றது. (இ,25)

### பொலிஸ்...

யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார். அத்துடன் மன்னார் பிராந்திய உதவிப் பொலிஸ அத்தியட்சகர் பி.பெர்னாண்டோ யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். (25)

### மன்னாரில்...

பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

உடனடியாக அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் குறித்த பொதியை மீட்டு சோதனை செய்துள்ளனர்.

இதன்போது 95 பொதிகளை கொண்ட 201 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை சிலாபத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### கிழக்கிலும்...

கொலையாளிகள் சார்பில் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் முன்னிலையாகக் கூடாது ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று மட்டக்களப்பு நகரம் உள்ளிட்ட பெரும்பாலான பகுதிகளில் கடைகள் முற்றாக அடைக்கப்பட்டிருந்தன.

பேருந்துச் சேவைகளும் இடம்பெறவில்லை. இதனால் வீதிகள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்தன.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் குறைந்தளவிலேயே வருகை தந்திருந்தனர். அரச மற்றும் தனியார் நிறுவனங்களும், வங்கிகளும் மூடப்பட்டிருந்தன.

அதேவேள்ளை, மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும், மாணவர்கள் மற்றும் பொது அமைப்புகள் சார்பில் பரவலாக கண்டனப் பேரணிகள் நடத்தப்பட்டன.

இதில் பெருமளவில் மாணவர்களும் பொதுமக்களும் பங்கேற்றனர்.

நேற்று முன்தினமும் மட்டக்களப்பின் பல்வேறு இடங்களில் பேரணிகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### பிரதம...

கலந்துரையாடினார். நேற்று நண்பகல் 11.00 மணியளவில் சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகளுடன் பிரதம நீதியரசரும், பொலிஸ் மா அதிபரும் நீதிமன்றத்திற்கு விஜயம் மேற்கொண்டு சேதங்களை நேரடியாக பார்வையிட்டதுடன், இச்சம்பவத்தின் போது நீதிமன்றில் இருந்தோருக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார். (இ,25)

### பயனற்றுப்...

மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து பெறப்பட்டமையையும் காணக் கூடியதாக உள்ளது.

எவ்வித தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் இவ்வாறு பிரேரணைகளை நிறைவேற்றிக் கொண்டு போவதால் என்ன பயன் என்று வினவியதுடன் வீண் நேர விரயம்தான் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

அப்போது சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதனும் எதிர்க்கட்சித் தலைவரின் கருத்தை ஆதரித்ததுடன், நாம் இச் சபையினால் எடுக்கும் பிரேரணைகளை ஆக்கபூர்வமாக செயற்பட வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தனது ஆதங்கத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

# பள்ளி மாணவி கொலை விவகாரம் நீதி நிச்சயம் நிலை நாட்டப்படும்

## நீதியமைச்சர் உறுதி



(கொழும்பு)

நாட்டில் சட்டம் ஒழுங்குகளை நிலைநாட்டுவதிலும், நல்லாட்சியை தொடர்ந்து பேணுவதிலும் எமது அரசாங்கம் உறுதியான நிலையைப்பேணிவருகிறது. வன கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவி விடயத்தில் நியாயமான முறையில் விசாரணை நடைபெறும் என நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்த நாட்டின் வடக்கு கிழக்கு என அனைத்து பாகங்களிலும் எந்தவித இடையூறுகளுமின்றி நீதியை நிலைநாட்டி சட்ட ஒழுங்கைப் பேணுவதில் நாம் உறுதியாகவுள்ளோம்.

யாழ்ப்பாணம் புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட 18 வயதான பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியா விடயத்திலும் நீதி நிலைநாட்டப்படும்.

ஆனால் இப்பெண்ணுக்கு இடம்பெற்ற துரதிஷ்டவசமான செயல்களை கண்டித்து யாழில் இடம்பெற்ற கண்டன ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளுக்கு பின்னால் அரசியல் ஆதாயங்கள் உண்டு எனவும் அரசியல் செல்வாக்கு இடம்பெறுகிறது எனவும் கூறபப்படுவது ஏற்றுக் கொள்ள முடியாததொன்றாகும்.

ஆனால் சிலர் இதனை வைத்து அரசியலில் ஆதாயம் தேட முற்படுகின்றனர். இந்த வகையான செயல்களின் மூலம் மக்களுக்கிடையிலான நல்லிணக்கத்தினை குழப்ப முற்படுகின்றனர்.

இனங்களுக்கிடையில் முறுகல்களை ஏற்படுத்துவதனூடாக நாட்டில் பிரச்சினையை தோற்றுவிக்க சிலர் முற்படுகின்றனர்.

இவையனைத்தும் நல்லாட்சியை குழப்புவதற்காக தோற்றுவிக்கப்படுகின்ற விடயங்களே என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எந்தவொரு மனச்சாட்சியுள்ள, பெண்ணை தனது சகோதரியாக தாயாக மதிக்கும் யாராலும் இத்தகைய படுபாதக செயலை ஏற்றுக் கொள்ள முடியாது.

அவர்களது கோபம் நியாயமானது. அவர்கள் படும் வேதனையை வார்த்தையால் கூறமுடியாது. அதனால்தான் அப்பிரதேச மக்கள் ஆக்ரோஷமடைந்தனர். இது சூழ்நிலையால் ஏற்பட்ட விடயம்.

ஆனால் யாழ். நீதிமன்றம் தாக்கப்பட்டமை, பொலிஸ் அதிகாரிகள் மற்றும் நிலையங்கள் தாக்கப்பட்டமை என்பன அத்துமீறிய செயல். அதற்காகத்தான் 130 ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் கைது செய்தனர் என அமைச்சர் தெரிவித்தார்.

இவ்விடயத்தில் பொலிஸார் நடுநிலைமை வகித்து தமது கடமையைச்செய்துள்ளனர். அவ்வகையில் வித்தியா கொலை வழக்கிலும் சந்தேக நபர்களாக கருதப்படும் 9 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

சந்தேகநபர்கள் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தற்போது யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். குறித்த சந்தேக நபர்களை கடந்த 20ஆம் திகதி நீதிமன்றத்திற்கு கொண்டு சென்ற வேளை ஆத்திரமடைந்த மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ததுடன் வன்முறைகளிலும் ஈடுபட்டனர்.

இதன் போது கடமையைச் செய்த பொலிஸார் காயமடைந்தனர். தொடர்ந்து நீதிமன்றம் பொலிஸ் நிலையம் என்பன சேதமாக்கப்பட்டன. எனினும் சிறிது நேரத்தில் பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# இறுதிப் போட்டியில் சென்னை நாளை மும்பையுடன் பலப்பரீட்சை

ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு சென்னை சூப்பர் கிங்ஸ் அணி முன்னேறியுள்ளது.

எட்டாவது ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இத்தொடரின் இறுதிப் போட்டிக்கான அணியைத் தேர்வு செய்யும் பிளே-ஓப் சுற்றின் இறுதி ஆட்டம் நேற்று ராஞ்சியில் நடைபெற்றது.

இதில் ஹோலி தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய பெங்களூர் அணி அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் ஒரு முனையில் தரித்து நின்றபோதிலும் மறுமுனையில் விக்கெட்டுக்கள் வேகமாகச் சரிககப்பட்டவண்ணமிருந்தது. குறிப்பாக, முதல் மூன்று விக்கெட்டுக்களும் ஒரு முனையில் 36 ஓட்டங்களைப் பெற்ற வேளை சரிக்கப்பட்டது. ஒருமுனையில் நிலைத்திருந்த கிறிஸ் கெய்லும் பொறுமையிழந்து ஆட்டமிழந்தார். இதன் பின் எஸ்.எஸ். கான், தினேஷ் கார்த்திக் ஆகியோர் நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலையில் இட்டுச் சென்றனர். இறுதியில் பெங்களூர் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிறிஸ் கெய்ல் 41, எஸ்.என. கான் 31, தினேஷ் கார்த்திக் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நெஹ்ரா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 140 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்னை அணி கப்டன் டோனி . மற்றும் ஹசி ஆகியோரின் அனுபவ ஆட்டத்தின் மூலம் வெற்றிக்கு அருகில் வந்தபோதிலும் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை பறிகொடுத்து ஆட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. இருப்பினும் நிதானமாக செயற்பட்ட சென்னை அணி வெற்றியைப் பதிவு செய்ததுடன் இறுதிப் போட்டிக்கும் முன்னேறியது. நிறைவில் சென்னை அணி 19.5 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஹசி 56, டோனி 26, டுபிளிசிஸ் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஷகால் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஆட்டநாயனாக நெஹ்ரா தெரிவானார்.

இதேவேளை, ஏற்கனவே நடைபெற்ற முதலாவது பிளே-ஓப் சுற்றில் சென்னையை வீழ்த்தி மும்பை அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிவில் வாழ்வுக்கு ஆப்பு பயங்கரவாதம் தோன்ற வாய்ப்பு

## விமல் எச்சரிக்கை



(கொழும்பு)

பாடசாலை மாணவி வித்தியா மீதான வல்லுறவு மற்றும் கொலையின் பின்னணியில் வடக்கின் சிவில் வாழ்க்கை மீண்டும் ஒருமுறை பாதிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படாத பட்சத்தில் வடக்கில் மீண்டும் பயங்கரவாதம் தோற்றுவிக்கப்படும்.

வடக்கில் இராணுவத்தினர் தங்களது தளங்களில் மாத்திரமே நிலைகொண்டுள்ளனர்.

இதனால் இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது சட்டத்தையும் ஒழுங்கையும் பேண முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது.

இவ்விவகாரத்தின் காரணமாக வடக்கில் கடையடைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் நாட்டின் சட்டம் ஒழுங்குக்கு பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளானதுடன், மிக மோசமான நடவடிக் கையொன்றுக்கும் வழிசமைத் துள்ளது.

இதனால், தமிழ் ஆயுததாரிகள் மீண்டும் தலைதூக்குவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும், எனவே சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# களைகொல்லிக்குத் தடை

(கொழும்பு)

“க்லைபொசேட்” என்று அழைக்கப்படும் களை கொல்லி நாசினியை இறக்குமதி செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் நேற்று முதல் முற்றாகத் தடை விதித்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற ஹோட்டல் கண்காட்சியொன்றில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

புற்கள் மற்றும் களைகளை அழிப்பதற்காக பயன்படுத்தப்படும் மேற்படி களை கொல்லி நாசினியினால் நாட்டில் சிறுநீரக நோய் அதிகளவில் ஏற்படுகின்றது என ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தற்போது சந்தையில் உள்ள “க்லைபொசேட்” களை நாசினிகளை விற்பனை செய்ய அனுமதி வழங்குமாறு வர்த்தகர்கள் சிலர் கோரிக்கை விடுக்கின்றனர். இருப்பினும், இலங்கையில் இனி எந்தவொரு சிறுநீரக நோயாளியும் உருவாகுவதற்கு இடமளிக்க முடியாது எனத் தெரிவித்த ஜனாதிபதி, அதனால், நேற்று முதலே அதற்கு தடை விதிப்பதாக அறிவித்தார்.

# மாணவி படுகொலை வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் மரண தண்டனை

## அஜித் பெரேரா கோரிக்கை

யாழ். புங்குடுதீவு மாணவி படுகொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பி. பெரேரா வலியுறுத்தியுள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு புங்குடுதீவு மாணவி வித்தியா மிகக் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். நாட்டில் இடம்பெற்ற மிக மோசமான படுகொலை இதுவாகும். இதனை யாராலும் மறுக்க முடியாது.

இந்த படுகொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம். அத்துடன், வடக்கு, கிழக்கில் வித்தியாவிற்காக பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது நியாயமானதாகும். மக்கள் தங்களது உணர்ச்சிகளையே இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் எந்த பிரிவினைவாத அமைப்புகளும் இல்லை.

இந்நிலையில், இவ்வாறான கொடூரமான சம்பவங்கள் தனது அரசில் இடம்பெறவில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இது உண்மைக்குப் புறம்பானதாகும். அவரது ஆட்சியில் இதனைவிட கொடூரமான சம்பவங்கள் இடம்பெற்றது என்பதற்கு பேருவளை, அளுத்கம சம்பவங்கள் சிறந்த உதாரணங்களாகும். அத்துடன் மஹிந்த இனங்களுக்கிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிடுவதுடன், மீண்டும் விடுதலைப் புலிகள் உருவாகுவதாகவும் கூறி வருகின்றார் என அவர் தெரிவித்துள்ளார்.

# ரவிராஜ் கொலை வழக்கு டி.என்.ஏ. சோதனைக்கு உத்தரவு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் படுகொலையுடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்களுக்கு, டீ.என்.ஏ (DNA) பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமென விசாரணைகளை முன்னெடுக்கும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

கொழும்பு மேலதிக நீதவான் நிரோஷா பெர்னாண்டோ முன்னிலையில் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் ஆஜர்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில், இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட சந்தேகநபர்களினதும், உயிரிழந்தவரதும் இரத்த மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தி, இந்த சந்தேகநபர்கள் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களா என்பதைக் கண்டறிய டீ.என்.ஏ பரிசோதனை நடத்துவது முக்கியமானது என குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களுக்கு டீ.என்.ஏ பரிசோதனை மேற்கொள்வதற்கு நீதிமன்றத்தினால் ஜூன் 5 ஆம் திகதிவரை காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.